யாழ்நகரில்
தரமான
A/L
விஞ்ஞானக் கல்விக்கு
என்றும்
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA.

# சஞ்சீவி

விலை ரூ 2/-

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

A/L 88
விஞ்ஞான வகுப்புக்கள்
Iம், IIம் பிரிவுகள்
நடைபெறுகின்றன
IIIம் பிரிவு
ஆரம்பமாகின்றது
விபரங்களுக்கு;
New Master
Institute
B.M.C, Lane, JAFFNA.

மலர்- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஹூ ஆனி மீ 07-உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஷவ்வா பிறை 12 (21 06 1986) SANJEAVY- REGENERATIVE TAMIL WEEKLY சிகரம் 22

## கருத்துக் கலசம்

மயூரா

உருளைக் கிழங்கு-வெங்காயம்

நோய் உயிருக்கு எதிரானது. உயிரினங்களின் இயக்கத்துக்கு எதிரானது அவற்றின் வளர்ச்சிக்கும், செழிப்புக்கும் குந்தகம் தரவல்லது விஞ்ஞானம் வளர்கிறது புதிய தொழில் நுட்பங்கள் வளர்கின்றன. ஆனால் அதே போல் நோய்களும் மலிகின்றன.

மனிதர்களுக்குப் புதுப்புது நோய்கள். மிருகங்களுக்குப் புதுப் புது நோய்கள். தாவரங்களுக்கும் புதுப் புது நோய்கள்.

இம்முறை இங்கு நாம் தாவரங்களின் நோய்களைப் பற்றியே பிரஸ்தாபிக்கப் போகிறோம்

குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் தோட்டப் பயிரினங்களுக்கு ஏற்பட்டு வரும் நோய்கள் பற்றியே விசனப்பட வேண்டி உள்ளது.

யாழ் குடாநாட்டில் விளைவிக்கப்படும் உப உணவுப் பயிர்களில் இரண்டு வெங்காயமும், உருளைக்கிழங்கும்ஆகும். அவை இரண்டும் புதுவிதநோய்களால் பாதிக்கப்படுவதாகச் செய்திகள் வந்துள்ளன,

உருளைக்கிழங்கு —

அதனை வாடல் நோய் தொடர்ந்து மூன்று வருடங்களாகத் தாக்கி வருகிறது. அதனால் அது பயிர் செய்யப்படும் நிலத்திலேயே நோய்த் தொற்று உண்டாகி விட்டது.

வெங்காயம் —

அதுவும் புதுவகைப் புழுநோயினால் பாதிக்கப்பட்டு வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

இவ்வாறு புதுவகையான நோய்கள் பயிரினங்களுக்கு எவ்வாறு வருகின்றன? அவற்றைத் தடுக்க விவசாயிகள் எந்தெந்த நடைமுறைகளைக் கையாளவேண்டும்

உரப் பாவனை அளவுக்கு அதிகமாகிறதா? அல்லது தரங்குறைந்த உரவகைகள் யாழ். குடா நாட்டுக்கு வந்து சேர்கின்றனவா?

இவை போன்ற விடயங்கள் கண்டறியப்பட வேண்டும். விவசாயிகளுக்கு அவை சம்பந்தமான அறிவுரைகள் அடிமட்டத்தில் பிரபல்யப்படுத்தப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்தின் விவசாய ஆராய்ச்சி நிலையம் எதுவும் இல்லை. அந்த இடத்தை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் நிரப்பலாம்.

கலாநிதிகளும், பேராசிரியர்களும், படித்த கல்வி, அவர்களின் திறமை மாணவருக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதோடு நின்றுவிடக் கூடாது. சமுதாயத்துக்குப் பயன்பட வேண்டும். எமது தாயகத்தின் வளர்ச்சிக்கு, மேம்பாட்டுக்கு உதவ வேண்டும்.

விவசாயம் சம்பந்தமான கருத்தரங்குகளை வைப்பதன் மூலமும், விவசாயம் சம்பந்த

(8 ம் பக்கம் பார்க்க)

## தோலகட்டி ஆச்சிரமத்தில் புகுந்து

## இராணுவம் அட்டகாசம்

# கிறிஸ்தவ துறவி சுட்டுக் கொலை!

## கும்பிட்ட கைகளூடாக துப்பாக்கிச் சன்னங்கள்

— அலுவலகச் செய்தியாளர் ஜே. பி இரட்ணதுரை —

யாழ்ப்பாணம், ஜூன் 21

தோலகட்டி ஆச்சிரமத்தில் புகுந்து அட்டகாசம் புரிந்த இராணுவத்தினர், அங்கு பண்ணையில் மாட்டுக்குத் தீனி வைத்துக்கொண்டிருந்த கிறிஸ்துவத் துறவி ஒருவரைச் சுட்டுக் கொன்றனர்

அவர் தாம் ஒரு துறவி என்பதை நிருபிக்க சிலுவையைக் காட்டிய போதும், கும்பிட்ட போதும் கொடூரமாகச் சுட்டுக் கொலை செய்யப்பட்டார் என்று சொல்லப்படுகிறது.

இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட, 65 வயதான, சங். சகோதரர் மனுவல் வென்செஸ் லாஸ் என்பவரே கொலை செய்யப்பட்டவர் ஆவர்.

நேற்றுக்காலை நடைபெற்ற இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்றுக்காலை 9 மணியளவில் பலாலி முகாமில் இருந்து சிப்பாய்கள் வெளிவந்து வயாவிளான் நோக்கி நடந்து வந்தனர். பின்னர் வயாவிளான் உட்பகுதியினுள் புகுந்தனர்.

அச்சமயம் வயாவிளான் சந்திக்கு அருகில் போராளிகள் இவர்களை எதிர்த்து சிலிண்டர் தாக்குதலில் ஈடுபட்டனராம்.

இதனால் சிப்பாய்கள் தோலகட்டியில் செபமாலைத்தாசர் சபையினர் நடத்தும் ஆச்சிரமத்தினுள் புகுந்தனர்.

அங்கே பண்ணையில் மாட்டுக்குத் தீனி வைத்துக்கொண்டிருந்தார், 65 வயது நிரம்பிய சங். சகோதரர் மனுவல்

(8ஆம் பக்கம் பார்க்க)

## சிலுவையைக் காட்டிய துறவி மீது சூடு விழுந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 21

சிலுவையைத் தூக்கிக் காட்டிய துறவி மீது சிப்பாய் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்ததை நேரில் கண்டான் ஒரு சிறுவன்.

மயிரிழையில் உயிர் தப்பிய அன்ரன் என்ற சிறுவன் கல்மனதையும் உருக வைக்கும் இந்தச் சம்பவம் பற்றி நடுங்கும் குரலில் சொன்னதாவது:-

ஆச்சிரமத்தின் மாட்டுப் பண்ணையில் இறந்த துறவியுடன் சம்பவம் நடந்த சமயத்தில் நான் வேலை செய்து கொண்டு இருந்தேன்.

அச்சமயம் ஆச்சிரமத்தைச் சுற்றிய பகுதிகளில் குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்டன.

அப்போது பின்பக்க வேலியூடாக சிப்பாய்கள் ஆச்சிரமத்தினுள் புகுவதைக் கண்டேன். உடனே நான் அடர்த்தியான மாமரம் ஒன்றின் பின்னால் மறைந்து கொண்டேன்.

சிப்பாய்களைக் கண்டதும் துறவியார் பேசாமல் நின்றார்

கிட்ட வந்த சிப்பாய்

(8ம் பக்கம் பார்க்க)

### ஆயர் அதிர்ச்சி

யாழ்ப்பாணம், ஜூன் 21

35 ஆண்டுகளாகத் தோலகட்டி ஆச்சிரமத்தில் தொண்டு புரிந்து வந்த சங். சகோதரர் மனுவல் வென்ஸஸ் லோஸி கொடூரமான முறையில் கொல்லப்பட்டது குறித்து யாழ் ஆயர் இல்லம் அதிர்ச்சி அடைந்தது.

யாழ் ஆயர் அதிவந்தனைக்குரிய கலாநிதி தியோகுப்பிள்ளை இச்சம்பவம் கேட்டு மிகுந்த துயரமும் வேதனையும் அதிர்ச்சியும் அடைந்திருக்கிறார்.

இப்படி ஆயர் இல்ல வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

கிறிஸ்தவ ஸ்தாபனங்களும் இச்சம்பவத்தைக் கேள்விப்பட்டு அதிர்ச்சியும் துயரமும் அடைந்தன. (உ - எ - 6)

### சுபநேரம்

21 — 6 — 1986
சனிக்கிழமை
சுபநேரம்;
2.54 முதல் 4 24 வரை
ராகுகாலம்;
8 54 முதல் 10 24 வரை
இவை பகலுக்கும்
இரவுக்கும் பொருந்தும்
பூரணை விரதம்

## முல்லைத்தீவு, ஒட்டுசுட்டானில் 7 மணி நேரம் கடும் மோதல்

### மக்கள் விடுதலைப்படை அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 21

கடந்த 19 ஆம் திகதி முல்லைத்தீவு, ஒட்டு சுட்டான் முகாம்களில் இருந்து புறப்பட்ட சிப்பாய்களை நோக்கி மக்கள் விடுதலைப் படையினர் பலத்த தாக்குதல் நடத்தி பல சிப்பாய்களை கொன்றனர். சிப்பாய்களின் ரோந்து நடவடிக்கையையும் தொடர விடாது முகாமிற்கு திருப்பி அனுப்பினர்.

இப்படி ஈ. பி. ஆர் எல். எவ் இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த 19 ஆம் திகதி வியாழக்கிழமை அதிகாலை 5 30 மணியளவில் முல்லைத்தீவு, ஒட்டு சுட்டான் ஆகிய இராணுவ முகாம்களில் இருந்து கிளிநொச்சி நோக்கி நடை பவனியாக வந்தனர்.

புதுக் குடியிருப்பில் வைத்து சிப்பாய்களை எதிர்கொண்ட மக்கள் விடுதலைப் படையினர் சிப்பாய்களை நோக்கி மோட்டர் தாக்குதலை நடத்தினர்.

சுமார் ஏழு மணித்தியாலமாக நடைபெற்ற இம் மோதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.


இதேவேளை பொம்மர் விமானமும் இரண்டு ஹெலிக்கொப்டர்களும் மக்கள் மீது நடத்திய தாக்குதலில் இரண்டு வயோதிபர்கள் பலியானார்கள்

மேலும் இருவர் காயமடைந்தனர்.

மக்கள் விடுதலைப்

(8ம் பக்கம் பார்க்க)

## கடலோரம் உறங்கும் வள்ளங்கள்



அரசின் கடும் சட்டங்களினால் இந்த வள்ளங்கள் அலைகடல் ஓரத்தில் கிடந்து உறங்கும் அவலம் பாரீர்! இதனால் எமது இனத்திற்கு ஏற்பட்டிருக்கும் பொருளாதார நட்டம்தான் எவ்வளவு? அலைகடலை நம்பியிருக்கும் அந்த மக்களின் எதிர்காலம்தான் என்னே? (உ)

### நல்லை ஆதீனம் அனுதாபம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

தோலகட்டி ஆச்சிரமத் துறவி சங் சகோதரர் மனுவல் வென்ஸ்செஸ் லாஸ் துக்ககரமான சூழ்நிலையில் உயிரிழந்தது குறித்து நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகள் அனுதாபச் செய்தி ஒன்றை விடுத்துள்ளார்.

அச் செய்தி வருமாறு:

சஞ்சலத்தின் மத்தியில் இன்று வாழும் தமிழ் மக்களுக்கு மனச் சாந்தி அளிப்பது சமயங்களே.

அந்த வழியில் சமயப் பணி புரிந்து வந்த துறவி ஒருவர் துக்ககரமான முறையில் எம் மத்தியில் இருந்து மறைய நேர்ந்தது வேதனையையும் சொல்லொணாத் துன்பத்தையும் தருகின்றது

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதாக!

இப்படி அனுதாபச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

### 131 தமிழர் பூஸாவுக்கு

மட்டக்களப்பு, ஜூன் 21

மட்டக்களப்பில் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்ட 131 தமிழர்கள் நேற்று பஸ்கள் மூலம் பூஸா தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (எ - 21)

## பலாலி, வயாவிளானில் நேற்று மோதல்

பலாலி, ஜூன் 21

நேற்று நண்பகல் 12 மணியளவில் பலாலி இராணுவ முகாமில் இருந்தும், வயாவிளான் இராணுவ முகாமில் இருந்தும் ஏக காலத்தில் வெளிவர முயன்ற இராணுவத்தினர் மீது புலிகளும், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகப் போராளிகளும் கடும் தாக்குதல் நடத்தினர்.

இதனையடுத்து சிப்பாய்கள் தமது முகாமுக்குத் திரும்பிச் சென்றனர்.

இந்தச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது;-

பலாலி முகாமில் இருந்து பலாலி விமான நிலைய மூடாக இராணுவத்தினரின் ஒரு பிரிவு கட்டுவனை நோக்கி முன்னேறியது.

இன்னொரு பிரிவினர் மடத்தடியூடாக வயாவிளான் பக்கமாகச் சென்று குரும்பசிட்டிக்குப் போகும் வீதிக்குச் சென்றனர்.

இதேநேரம் வயாவிளான் முகாமில் இருந்தும் சிப்பாய்கள் தெற்கு நோக்கிப் புறப்பட்டனர்.

கட்டுவன் பக்கமாக சுட்டபடி வந்த இராணுவத்தினரை 'புளொட்' எதிர்கொண்டு தாக்கியது.

மடத்தடி வீதியூடாக குரும்பசிட்டிப் பக்கமாகச் சென்ற இராணுவத்தினருடன் விடுதலைப் புலிகள் நேரடியாக மோதினர்...

வயாவிளானில்இருந்து தென்பக்கமாகப் புறப்பட்ட இராணுவத்தினர் 'புது வீதி' எனப்படும் குரும்பசிட்டிக்குச் செல்லும் பாதைக்கண்மையில் நின்றிருந்த புலிகளின் தாக்குதலைச் சந்திக்க வேண்டியதாயிற்று

மூன்று முனைகளிலும் தாக்குதல்கள் நிகழ்ந்ததையடுத்து சிப்பாய்கள் வந்தவழியே திரும்பினர். (உ-119)

## கொழும்பு பஸ்ஸில் வந்த 20 பேரும் எங்கே?

கொழும்பு, ஜூன் 21

புதன்கிழமை இரவு கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டு இருந்த தனியார் பஸ் ஒன்றில் பயணஞ் செய்தவர்களில் 20 பேருக்கு என்ன நடந்தது?

இவர்களில் சிலர் பெண் பயணிகள் என்று சொல்லப்படுகிறது.

40 பயணிகளை ஏற்றிக் கொண்டு புறப்பட்ட இந்த பஸ் 20 பயணிகளுடன் வெள்ளிக்கிழமை காலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

இந்த 8 நாள் பயணம் பற்றி அறியப்படுவதாவது;

புதன்கிழமை இரவு 9.30 மணி அளவில் 40 பயணிகளுடன் இந்த பஸ் கொழும்பில் இருந்து புறப்பட்டது

நீர்கொழும்பு கொச்சிக்கடைப் பகுதியில் இரவு உணவுக்காக 11-40 மணியளவில் பஸ் நிறுத்தப்பட்டது

அதன் பின்னர் பஸ் பயணத்தைத் தொடர்ந்தது. வாய்க்கால் என்ற இடத்தில் வைத்து சைக்கிளில் வந்த ஒருவருடன் பஸ் மோதிக் கொண்டது.

இதைத் தொடர்ந்து அப்பகுதி வாசிகள் பஸ்ஸைப் புறப்பட விடாது மறித்தனராம்.

பஸ்ஸுக்கு தீவைக்கவும் அக்கூட்டம் முயற்சித்ததாம்,

இதனால் பயந்துபோன பயணிகள் திக்குத் திக்காக ஓடித்தப்ப முயற்சித்தனர்.

சில பயணிகள் காட்டு வழியாக எப்படியோ வென்னப்புவை பொலீஸ் நிலையத்தை அடைந்து முறையிட்டனர்.

பஸ் மறிக்கப்பட்ட இடத்துக்கு பொலீஸார் வந்தனர்

பின்னர் அந்த பஸ் சேவையை நடத்தும் நிறுவனத்தின் கொழும்புப் பிரதிநிதிக்கு பொலீஸார் விஷயத்தை அறிவித்து வேறொரு பஸ்ஸை வரவழைத்தனர்,

முறைப்பாடு செய்த 20 பயணிகளையும் அந்த பஸ்ஸில் ஏற்றி பொலீஸார் அனுப்பி வைத்தனர்.

ஏனைய 20 பயணிகளும் எப்படி தப்பி ஓடினார்கள்? மீண்டும் கொழும்பு போய்ச் சேர்ந்தார்களா? அவர்களுக்கு என்ன நடந்தது?

இந்தக் கேள்விகளுக்கு பதில் தெரியாத நிலையில் தப்பிய 20 பயணிகளும் வெள்ளி காலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்

இவர்கள் வந்த பஸ்ஸை நொச்சிகாமத்தில் வைத்து கும்பல் ஒன்று மறித்து தாக்க முயற்சித்தது அது பலனளிக்கவில்லை என்று கூறப்படுகிறது (-எ)

### ஹெலியிலிருந்து சூடு

பலாலி, ஜூன் 21

நேற்றுப் பிற்பகல் 4-45 மணிக்கும் 5 மணிக்கும் இடையில் தொண்டமானாறு இராணுவ முகாமைச் சுற்றி வரவுள்ள தம்பாலை, பத்தமேனி, வளலாய், அச்சுவேலி வடக்கு, தோட்ட வெளி, வல்லைப் பகுதிகளை நோக்கி ஹெலிக்கொப்டரிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தது

இத் துப்பாக்கிப் பிரயோகத்தில் பத்தமேனியைச் சேர்ந்த திருமதி. த. செல்லம்மா (65 வயது) என்ற பெண் கையில் காயமடைந்தார். (உ-119)

## முருக நாமம் வயோதிபர் உயிரைக் காப்பாற்றியது!

உருக்கொண்டு முருகனின் நாமத்தை உச்சரித்தபடியே இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு மத்தியில் முன்னேறி செல்வச்சந்நிதி கோயிலை நோக்கிச் சென்றவர் இராணுவத்தினரால் கட்டிவைக்கப்பட்டார்.

எனினும் சிப்பாய்கள் அவரைப் பின்னர் உபசரித்து விருந்தளித்து அனுப்பி வைத்தனர்.

இந்தச்சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது-

நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் தம்பாலையைச் சேர்ந்த திரு. நல்லான் கணபதி என்னும் 79 வயது வயோதிபர் செல்வச்சந்நிதி முருகன் தன்னை அழைப்பதாகக் கூறி சந்நிதி கோவிற் பக்கம் சென்றார்.

உறவினர்கள் மட்டுமன்றி முகாமுக்கண்மையில் நின்றிருந்த போராளிகளும் அவரை மறித்தனர். எனினும் அவர் கட்டுப்படாது முருகா, முருகா' என்றுஉச்சரித்தபடியே உருக்கொண்டு ஆடியபடி முன்னேறிச் சென்றார்.

முகாமுக்கு முன்னுள்ள காற்றுடிக்கு அண்மையில் சென்றதும் இராணுவத்தினர் அவரை நோக்கிச் சுட்டனர்.

கையைத் தலைக்கு மேலே கூப்பியபடி 'முருகா' என்று உரத்துக் கத்திய வயோதிப பக்தருக்கு சூடுபடவில்லை.

தொடர்ந்தும் சந்நிதி கோவில் பக்கம் சென்றார். சூட்டை நிறுத்தி வயோதிபரைப்பிடித்த இராணுவத்தினர் அவரைக் கட்டி

(8 ம் பக்கம் பார்க்க)

### உற்சவம்

சங்கானை கூடத்து மனோன்மணி அம்பாள் பூங்காவன உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம் பெறும்.

பகல் அப்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். அதையடுத்து மாலை மின் ஒளியால் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் அம்பாள் வீதி உலா வருவார்

அன்றைய தினம் முக்கிய நிகழ்ச்சியாக வில்லிசைக் கச்சேரி இடம் பெறும். (உ)

## திருகோணமலையில் 12 சிப்பாய்கள் பலி!

### ஈ. பி. ஆர். எல். எவ். உரிமை

யாழ்ப்பாணம், ஜூன் 21

திருகோணமலையில் சிப்பாய்களுக்கும் மக்கள் விடுதலைப் படையினருக்கும் இடையே நடைபெற்ற நேரடி மோதலில் 12 சிப்பாய்கள் கொல்லப்பட்டதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இது தொடர்பாக ஈ பி. ஆர், எல். எவ். இயக்கம் விடுத்துள்ள அறிக்கையின் விவரம் வருமாறு:-

கடந்த 17 ஆம் திகதி திருமலை மாவட்டத்தில் சாம்பல்தீவுக் கிராமத்தில் சிப்பாய்களுக்கும் மக்கள் விடுதலைப்படை வீரர்களுக்கும் இடையே நடைபெற்ற நேரடி மோதலில் 12க்கும் மேற்பட்ட சிப்பாய்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

இறக்கக்கண்டி முகாமில் இருந்தும் வில்கம் விகாரை முகாமில் இருந்தும் மூன்று பிரிவுகளாக பிரிந்த இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட சிப்பாய்கள் சாம்பல் தீவு நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

சாம்பல்தீவுக் கிராமத்தைச் சிப்பாய்கள் அண்மித்ததும் மக்கள் விடுதலைப் படையினர் இவர்களை எதிர்த்து பலத்த தாக்குதலை நடத்தினர்

இத்தாக்குதல் ஆறு மணி நேரம் கடும் சமராக நடைபெற்றது.

சில சிப்பாய்களின் உடல்கள் சிதறிய நிலையிலும் அங்கு கிடந்தன.

இத்தாக்குதலை அடுத்து சிப்பாய்கள் பின்வாங்கினர்.

மக்கள் விடுதலைப் படைத் தரப்பில் எதுவித இழப்பும் இல்லையெனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ - 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

# மாகாணசபைகளை மிதவாதிகள் கூட ஏற்கார்

மாகாணசபைத் திட்டத்தை தமிழ் மிதவாதிகள்கூட ஏற்கும் நிலை இன்று இல்லை. இப்படி லண்டனில் இருந்து வெளியாகும் 'பினான்ஷியல் டைம்ஸ்' என்ற ஆங்கில சஞ்சிகை கருத்து வெளியிட்டுள்ளது.
அந்த ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகின்றது.

மூன்று ஆண்டுகளாக இலங்கையைக் கூறு படுத்தி வரும் தமிழ்ப் பிரிவினைவாதிகளின் யுத்தம் தற்போது ஆபத்தான காலகட்டத்தினுள் நுழைந்துள்ளது.

கொழும்பில் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவங்கள் மோதல் விரிவடைந்து வருவதைக் குறிக்கின்றது.

பதிலாக கொழும்பு அரசாங்கம் ஆயுத பலத்தை அதிகரிக்கப் போகின்றது.

பாதுகாப்புச் செலவினத்தைப் பலமடங்கு அதிகரிக்க அரசு முடிவு செய்துவிட்டது. அதற்கான அங்கீகாரத்தை நாடாளுமன்றத்திடம் இருந்தும் பெற்றுவிட்டது.

தென் இந்தியாவில் முகாமிட்டுள்ள தமிழ்ப் பிரிவினைவாதிகள் கொழும்புக்குண்டு வெடிப்புக்களை மறுத்தனர். இருந்தும் அவர்கள்தான் பொறுப்பு என்று கொழும்பு அரசு மீண்டும் மீண்டும் கூறுகின்றது. அதுமட்டுமல்ல பலாத்காரத்தை பலாத்காரத்தினால் சந்திக்கத் தயார் என்ற எண்ணத்தையும் கோடிட்டுக் காட்டியுள்ளது.

தீர்க்கமுடியாத வட அயர்லாந்துப் பிரச்சினை போன்று வளர்ந்துவரும் பிரிவினை மோதலுக்குத் தீர்வு காணக்கூடிய கொள்கை எதையும் கொழும்பு அரசு வகுத்ததாகத் தெரியவில்லை.

**போராளிகளின் புதிய சவால்**

ஜெயவர்த்தன அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முடியாத சில உண்மைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

முதலாவது, தமிழரின் பாரம்பரிய பகுதிகளான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டும் யுத்தம் வரையறுக்கப்பட்டிருக்கவில்லை என்பதைத் தமிழ்ப் போராளிகள் எடுத்துக்காட்டியுள்ளனர்.

விரும்பும் நேரத்தில் விரும்பும் இடத்தைத் தாக்கமுடியும் என்பதை அவர்கள் செயல் முறையில் காட்டியுள்ளனர்.

இரண்டாவது; இதனால் அரசியல் தீர்வு காணப்படும் முன்னர் இராணுவத்தீர்வு காணப்படும் என்ற அரசின் நோக்கம் இப்போது ஐயத்துக்கு இடமான தொன்றாகக் கருதப்பட வேண்டியுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில் பாதுகாப்புச் செலவினம் 3 மடங்காக அதிகரித்து வந்துள்ளது. ஆனால் போராளிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் சிறிது தாக்கம் தான் தெரிகிறது.

இராணுவ உதவியும் ஆலோசனையும் பெறுவதற்கு பாகிஸ்தானை ஜனாதிபதி ஜெவர்த்தன நாடுவது கவலைக்குரிய விஷயமாகும்.

## சிவில் யுத்தம் ஒன்றை நோக்கி இலங்கை அடிவைக்கும் அபாயம்

தமிழ்ப் போராளிகளுக்கு மேலும் சலுகைகளை வழங்க இந்தியாவைத் தூண்டுவதாகவே இது அமையலாம்.

ஏற்கனவே மோசமான நிலையில் உள்ள இப்பிரச்சினையில் மேலும் பிராந்திய ரீதியான குழப்பங்களைப் புகுத்துவதாகவே இந்த நடவடிக்கை அமைகின்றது.

**இந்தியாவுக்கு நிர்ப்பந்தம்**

இலங்கையின் சிங்கள அரசபடைகள் தமிழர் மீது அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளன என்ற குற்றச்சாட்டுக்களின் மத்தியில்,

கொழும்பு அரசுமீது தீவின் இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்றைத் திணிக்கும்படி 5 கோடி தமிழர் இந்தியாவை நிர்ப்பந்திக்கத்தொடங்கி உள்ளனர்.

இலங்கையில் நிலைமை தொடர்ந்து சீர்கெட்டு வந்தால், இலங்கைத் தமிழரை எதிர்நோக்கும் அபாயம், பாகிஸ்தான் இராணுவ ஆலோசகர்கள் இலங்கையில் இருப்பது போன்ற பிரச்சினைகள் இந்தியாவை நேரடியாகத் தலையிடத் தூண்டும்.

தமிழ்ப் போராளிகளின் வன்செயல்களுக்கும் மோதலின் அடிப்படைக்கும் உள்ள வேறுபாடுகளை இலங்கை அரசு கண்டு பிடிப்பது அவசியமானது.

காணி, மொழி, பொருளாதார, கல்வித்துறைகளில் தமிழருக்குக் குறைபாடுகள் உள்ளன என்பதை ஜெயவர்த்தனவின் யு என் பிக் கட்சி 1977 தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஏற்றுக்கொண்டு இருந்தது தெரிந்ததே.

துரதிருஷ்டவசமாக இது சம்பந்தமான அதிகாரப் பரவலாக்கல் கொள்கை செயல் வடிவம் பெறவில்லை. அரசு வெளியிட்டுள்ள வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மாகாண சபைகளை நிறுவும் அரசின் யோசனைகளைப் பொறுத்த வரையில் தமிழ் மிதவாதிகளினால் கூட நிராகரிக்கப் படக் கூடிய சாத்தியக் கூறுதான் ஏற்பட்டுள்ளது.

**இருவேறுவகைத் தீர்வு முறைகள்**

1977 இல் இருந்ததிலும் பார்க்க அரசியல் தீர்வு ஒன்றை தற்சமயம் காணுவது மிகவும் கஷ்டமானது. ஆனால் தீர்வு காணுவது முடியாத ஒன்றல்ல.

இது இரண்டு வெவ்வேறான, ஆனால் ஒன்றுக்கு ஒன்று தொடர்பானவையாக உள்ள விடயமாகும்.

ஒன்று பிராந்திய வல்லரசான இந்தியா யோசனைகளைத் தயாரித்து தமிழ்ப் போராளிகளுக்குக் கொடுக்க வேண்டும்.

இது ஈழத்துக்கும் சுதந்திரத்துக்கும் குறைவாகவே நிச்சயம் இருக்கும்.

ஆனால் எந்தத் திட்டமும் அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கலுடன் கூடிய ஏதாவது ஒரு வகையிலான வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்கும் ஒரு திட்டமாகவே இருக்கமுடியும்.

இரண்டாவது ஒரு தீர்வுக்காக சிங்கள மனச்சாட்சி ஒன்றை ஜனாதிபதி ஜெயவர்த்தன உருவாக்கவேண்டும். இதன் கருத்து முன்னாள் பிரதமரும் சுதந்திரக் கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன் திரு ஜயவர்த்தன உடன்பாடு காணவேண்டும் என்பதே.

திருமதி. பண்டாரநாயக்காவின் செல்வாக்கு வளர்கின்றது. அரசின் செல்வாக்கு மங்கி வருகின்றது.

**சிவில் யுத்த அபாயம்**

இலங்கை, சிவில் யுத்தம் ஒன்றை நோக்கியே சென்றுகொண்டிருக்கிறது என்பதைத் தான் கடந்த சில வாரங்களாக இடம் பெற்று வரும் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இரு தரப்பினரும் இணங்கிப் போகும் மனப்பான்மை, தீர்வு காணவேண்டும் என்பதில் இந்தியா காட்டும் உறுதி ஆகியனவதான் சிவில் யுத்த விளிம்பில் இருந்து இலங்கையைக் காப்பாற்ற முடியும்.

---

# எழுதிச் செல்லும் விதி அதன் கைகள் மாறுமோ?

கவிஞர் கண்ணதாசன் 1921 ஆம் ஜூன் மாதம் 24 ஆம் திகதி பிறந்தார்.
அவரை நினைவு கூரும் முகமாக அவரே எழுதிய இக்கட்டுரை மறு பிரசுரம் செய்யப் படுகின்றது.
அவரது "அர்த்தமுள்ள இந்துமதம்" முதல் பகுதியை இக் கட்டுரை அலங்கரித்து இருந்தது.

உனக்கு விதிக்கப்பட்ட வாழ்க்கையே விதி என்று கூறப்படுகிறது.

உனது வாழ்க்கை எந்தச் சாலையில் போனாலும் அது இறைவன் விதித்ததே.

ஜனனமும் உலகமெங்கும் ஒரே மாதிரி இருக்கிறது.

பத்தாவது மாதம் ஜனனம் என்பது நிரந்தரமானது.

ஆனால் வாழ்க்கை ஏன் பல கோணங்களில் போகின்றது? மரணம் ஏன் பல வழிகளில் நிகழ்கின்றது?

நீ கருப்பையில் இருக்கும் போது நீ போகப் போகிற இடமும், நேரமும் உன் மண்டை ஓட்டுக்குள் திணிக்கப்படுகின்றன.

நீ எங்கே போனாலும், எப்படி வாழ்ந்தாலும் அது இறைவன் விதித்ததே.

மனத்தின் சிந்தனைப் போக்கு எப்படி வேண்டுமானாலும் போகலாம்: ஆனால், அது நடப்பதும் நடக்காததும் உன் விதிக் கோடுகளில் அடங்கி இருக்கிறது.

'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினும் தான்முந்துறும்''
என்றார் வள்ளுவர்.

ஊழ் என்பது பூர்வ ஜன்மத்தையும் விதியையும் குறிக்கும்.

பூர்வ ஜன்மத்தின் தொடர்பாலியைக் கொண்டே அந்த ஜன்மத்தின் விதி நிர்ணயிக்கப் பெறுகிறது.

அதனை ஊழ்வினை உறுத்து வந்தூட்டும் என்றான் இளங்கோ.

போன ஜன்மத்தில் உன் விதி பாவம் செய்யும் படி விதிக்கப்பட்டிருந்தால் அதற்கான பரிகாரம் இந்த ஜன்மத்தில் எழுதப்படுகின்றது.

ஆகவே விதியின் கோடுகள் தாம் உன்னை ஆட்சி செய்கின்றன என்பது, இந்துக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.

நீ எண்ணியது நடந்தாலும் நடக்காவிட்டாலும் எண்ணாதது நடந்தாலும் யாவும் உன் விதி ரேகைகளின் விளைவே.

முயற்சி கால் பங்கு விதியின் ஒத்துழைப்பு முக்கால் பங்கு.

'எல்லாவற்றுக்கும் கால நேரம் வரவேண்டும்' என்கிறார்களே இந்துக்கள். அதற்குக் காரணம் என்ன?

இன்ன காரியங்கள் உனக்கு இன்ன காலங்களில் நடக்கும் என்று விதிக்கப்பட்டிருக்கின்றது: அவ்வளவுதான்.

நினைவுகளின் மயக்கத்தை விதி ஒழுங்கு படுத்துகிறன்து

இரண்டாவது உலக யுத்தத்தின் போது ஹிட்லருக்கு இருந்த வசதியும் ஆயுதப்பெருக்கமும் வேறு எந்த நாட்டிற்கும் இல்லை.

ஒரே நாளில் போலாந்தைப் பிடித்தான்.

வெறும் மிரட்டலிலேயே செக்கோஸ்லாவாகியாவைப் பிடித்தான் குண்டு போடாமலேயே பிரான்சைப் பிடித்தான்

அவன் விரும்பியிருந்தால் ஐரோப்பாவையும் ஆறு நாட்களில் பிடித்திருப்பான்.

வெறும் வாய் வேட்டுக்களையே விட்டுக் கொண்டிருந்த சார்சிலை வேறு நாட்டுக்குத் துரத்தியடித்திருக்கலாம்.

அகில ஐரோப்பாவையும் பிடித்து விட்டால் உலகத்தில் ஐரோப்பிய நாடுகளுக்குக் காலனிகளாக இருந்த ஆசிய-ஆபிரிக்க- அரேபியநாடுகள் சுமார் எண்பது, குண்டுகள் போடாமலே அவன் கைக்கு இயற்கையாகவே வந்திருக்கும்.

இது சுலபமாக நடந்திருக்கக் கூடியதே!

ஆனால் விதி ஹிட்லரின் ஆணவத்தை ஆட்சி புரிந்தது.

பிரிட்டனைக் 'கோழிக் குஞ்சு' என்று அவன் கேலி செய்து விட்டு யானையைச் சாப்பிட்டால் தான் என் பசி அடங்கும் என்று சோவியத் யூனியனுள் நுழைந்தாதி

அவனது சவக்குழி அங்கேதான் தோண்டப்படுகின்றது என்று விதி சிரித்தது.

சோவியத் யூனியனின் பருவகாலத்தில் அவன் சிக்கி சிக்கி இழுபட, அமெரிக்காவும் பிரிட்டனும் தங்களைத் தயார் செய்து கொண்டு விட்டன.

எச்சரிக்கையாக இருந்திருந்தால் உலகத்தையே ஆண்டிருக்கக் கூடிய ஹிட்லர், தன் பிணத்தைக் கூட பிறர் பார்க்க முடியாத படி இறந்து போனான்.

## அமரர் கவியரசு கண்ணதாசன்

எந்த மனிதனின் பாதையையும் திசை திருப்பிவிடும் விதி ஹிட்லரின் ஆணவத்தையும் அழிவை நோக்கித் திருப்பி விட்டது.

உலக வரலாறுகளை கூர்ந்து நோக்குங்கள்.

நினைத்ததை எல்லாம் நடத்தி முடித்தவன் எவன்?

நினைப்பவன் தான் நீ! முடிப்பவன் அவன்;

இந்துக்களின் தத்துவத்தில் இது முக்கியமானது.

நம்முடைய லகரன் இறைவன் கையிலே உள்ளது என்பதை இந்து மதம் தான் வலியுறுத்துகிறது.

பிச்சைக்காரி [illegible] ஆனதையும் [illegible] கதையும் அதிஷ்டம் என்ற பெய ரிலோ துர் அதிஷ்டம் என்ற பெயரிலோ விதியின் பரிசளிப்பு.

"ஐயோ! எவ்வளவு ஆசை வைத்திருந்தேன். இப்படி ஆகிவிட்டதே!'' என்று நீ பிரலாபித்துப் பயனில்லை.

"அப்படித்தான் ஆகும்'' என்று நீ ஜனிக்கும் போது எழுதப்பட்டிருந்தது.

**ஆளும் விதி**

ராமனையும் விதி ஆண்டது சீதையையும் விதி ஆண்டது

சோழநாட்டு கோவலனின் விதி மாதவியின் மயக்கத்தில் இருந்தது.

கண்ணகியின் விதி மதுரையில் இருந்தது.

பாண்டியன் நெடுஞ்செழியன் விதி ஒரு காற்சிலம்பில் அடங்கியிருந்தது

அலெக்சாண்டரின் விதி பபிலோனியாவில் முடிந்தது

ஜூலியஸ் சீசரின் விதி சொந்த நண்பனின் கையில் அடங்கியிருந்தது.

நெப்போலியனின் விதி அவனது பேராசையில் அடங்கி இருந்தது.

காந்திஜியின் விதி, கோட்ஸேயின் கைத்துப்பாக்கியில் அடங்கியிருந்தது.

அடிமைகள் கிளர்ந்து எழுந்ததும் ஆதிக்கவெறியர்கள் விழுந்து துடித்தும் காலமறிந்து கடவுள் விதித்த விதி!

கடவுளே இல்லை என்று வாதிடுவோரும் நீண்ட காலம் வாழவேண்டும் என்று இறைவன் ஏன் விதிக்கிறான்?

'தங்கள் கொள்கைகள் தங்கள் கண் முன்னலேயே தோல்வி அடைவதைக் கண்டு சாகவேண்டும்' என்றுதான்!

உண்மையான பக்தியுள்ள சிலருக்கு ஆண்டவன் ஏன் நீண்ட ஆயுளைத் தருகிறான்? [illegible] பக்தி செலுத்தியது நியாயமே என்று

அவர்களும், அவர்களைப் பார்த்து பிறரும் உணர்வதற் காகத்தான்!

இறைவன் விதியை ஒரு வேடிக்கைக் கருவியாக வைத்திருக்கிறான்

சக்தியும் சிவனும் பூமியில் பல வேடங்களில் பிறந்ததாக இந்துக்கதை கள்கூறுவது இறைவன் தானும் விதிக்கு ஆட்பட்டு அதன் சுவையை அனுபவிக்கின்றான் என்பதைக் காட்டுவதற்காகவேதான்

அந்தக் கதைகளை வெறும் கதைகளாக நோக்காமல் இறைவனின் தத்துவங்களாக நோக்கினால், மானிடத்துவத்தை எப்படி இறைவன் வகுத்திருந்தான் என அறிய முடியும்.

விதி—மதி ஆராய்ச்சியில் மதியையே விதித்தான் ஆட்சி செய்கிறது என்பதை நான் அனுபவத்தில் கண்டிருக்கிறேன்.

PREE MULTI SERVICE
திருமண சேவை
தரமான மணமக்கள் பலரின் சாதகக் குறிப்புக்கள் எம்மிடம் உண்டு. விபரங்களுக்கு தொடர்புகொள்க:
திருமதி சரோஜ் யோகநாதன்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு.
(திருநெல்வேலிச் சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்கும் இடையில்)

பிரயாண ஒழுங்குகள்
● கனடா
● டென்மார்க்
● சவூதி அரேபியா
(1) கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு நேரடிப் பிரயாண ஒழுங்குகள் உடன் செய்துதரப்படும்.
(2) சவூதி அரேபியாவுக்கு (Labourers) தொழிலாளர் பதவிக்கு செல்ல விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.
(3) செல்ல விரும்புவோர் யூன் 25ஆம் திகதிக்கு முன்பாக தொடர்புகொள்ளவும்.
(4) எமது பிரயாண முகவர் கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு உங்களை உடன் அழைத்துச் செல்வார்
தொடர்பு: N. BALA
திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
பிகு வழி இல: (764) பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகாமை.

## அரசாங்க அலுவலகங்களில் "சிகதி"

**யாழ். வங்கிகளுக்கு ரெலக்ஸ்**

தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டதால் பல பாதிப்புக்கள். தொலைபேசி சாதனங்கள் மூலம் அரசியல்பரவிவிடும் என்று எண்ணி வெளிநாட்டு தொலைபேசி அழைப்புக்கள் யாழ்ப்பாணத்திற்கு வருவதில்லை இங்கிருந்து போவதும் இல்லை.

தொலைபேசித் தொடர்புகள் அற்ற நிலையில் வங்கிகள் கடந்த சில நாட்களாக நாணய மாற்று விகிதங்களை தெரிந்து கொள்ள முடியாததால் வாடிக்கையாளர்கள் வங்கிகளிடமிருந்து தங்கள் வெளிநாட்டு நாணயங்களுக்குரிய பணத்தைப் பெற முடியாது கஷ்டப்படுகின்றனர். தற்போதைய சூல் நிலையில் மாற்று ஒழுங்குகள் எவ்விடயத்திலும் மேற்கொள்ளப் டல் வேண்டும் என்பது இன்றைய நிலை. வாடிக்கையாளர் தங்கள் முழுப்பணத்தை பெற முடியாத நிலையில் அதன் ஒரு பகுதியையாகுதல் பெறக் கூடிய ஏற்பாட்டைச் செய்ய முடியுமானால் சம்பந்தபட்டவர்களின் தாக்கம் குறைவதுடன் வங்கிகளின் பொறுப்புணர்வை இச் செயற்பாடு உயர்த்துவதாகவும் அமையும்

யாழ்ப்பாணத்தில் வங்கிகளின் மாவட்ட திணைக்களங்களும் அதன் கிளைகளும் அனேகம் இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்ட வங்கி திணைக்களத்திலும்ஓர் தொலைத்தொடர்பு (ரெலக்ஸ்) சாதனத்தை பொருத்தி நாணயமாற்று விபரங்களை அதன் கிளைகளுக்கு ஓர் திட்டமிட்ட முறையில் அனுப்பினால் என்ன? அத்துடன் விரும்பினால் ரெலக்ஸ் சாதனத்தை பொதுமக்களின் தேவைக்கும் பயன்படுத்தி மேலதிக வருவாயை உண்டாக்கிக் கொள்ளலாம். வங்கிகள் வட்டியுடன் மாத்திரம்தான் நிற்கவேண்டுமா?

ஓய்வூதிய கொடுப்பனவுகள் சம்பந்தமாக அரசாங்க அதிபரின் துரித நடவடிக்கை ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மாத்திரமல்ல பிற திணைக்களங்களுக்கும் ஓர் உதாரணமான எடுத்துக் காட்டு ஓய்வு நாட்களில் பொறுப்பாளர்கள் பணி ஆற்றியதால் குறுகிய காலத்தில் இப்பெறு பேறு.

★ ★ ★

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பாரிய திட்டங்களை செய்வதால் கிராம மட்டத்திலுள்ள அபிவிருத்தி வேலைகள் பாதிப்படையக் கூடிய நிலை உருவாகலாம் ஆகையால் பெருந் தொகை செலவு ஏற்படக்கூடிய திட்டங்களை மத்திய அரசினிடமிருந்து பண உதவி பெற்று அரச அதிகாரிகள் செய்தால் பன்முகப் படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் உள்ள பணத்தினை கிராம நிலையில் செய்து அப்பிரதேசங்களை அபிவிருத்தி அடையச் செய்யலாம்

★ ★ ★

வட்டாரக் கல்வி அபிவிருத்தி சம்பந்தமான அதிபர்கள் கூட்டங்கள் இடம்பெறுகின்றன ஆனால் சில பாடசாலை அதிபர்கள் இறுதிவரை தற்காலிகமான முறையில் கடமை புரிந்து இளைப்பாறுகின்றார்கள். இதற்கு பல காரணங்கள் இருக்கலாம் இவற்றிற்கு சில உறுதிப்பாடான நடவடிக்கைகளை கல்வித் திணைக்களம் மேற்கொண்டால் உண்மையான நிலை தெளிவுபடுத்தப்படுவதுடன் பாடசாலைகளும் அதனால் மேலும் நன்மை அடையலாம். குறுகிய காலத்தில் பல புதிய முறைகளை ஏற்படுத்திய இன்றைய கல்விப் பணிப்பாளருக்கு இவ்விடயம் கஷ்டமான தொன்றல்ல.

## இதற்கும் தற்கொலை!

வட இந்திய மாநிலத்தில் பத்யா நகரில் லேக்ஹா பிமா வாழ்ந்து வாழ்ந்தார்.

மனைவிக்குப் பயந்தவர். ஒரு நாள் குட்டிவான பட்டினத்தின் சந்தைக்கு பொருள்கள் வாங்கச் சென்றிருந்தார்.

சந்தையை நெருங்கும் சமயத்தில்தான் பார்த்தார். மனைவி கொடுத்து அனுப்பிய 200 ரூபா தொலைந்த சங்கதி அப்போதுதான் அவருக்குத் தெரிந்தது.

தேடாத இடமே இல்லை. பணம் கிடைக்கவில்லை.

மனைவியின் சோகத்தை எப்படிச் சமாளிப்பது பிமா யோசித்தார் முடிவுக்கு வந்தார்.

நஞ்சருத்தித் தற்கொலை செய்து கொண்டார். இனி மனைவி கோபித்து என்ன செய்வது.?

(உ. எ)

## வாழைத் தண்டு விநோதம்

வாழைத் தண்டை கறி செய்து, பொரியல் செய்து சாப்பிட்டால் வயிற்றிலுள்ள கற்கள் வெந்துவிடும். தயிர்ப் பச்சடியும் செய்யலாம்.

வாழைத் தண்டு சாறு பிழிந்து வாரம் ஒரு முறை அருந்தினால் உடல் பருமன் குறையும்.

வாழைத் தண்டின் ரசத்தை அருந்திக் கடல் நீரில் அடிக்கடி குளித்து வந்தால் உடல் அழகு பெறும். வாழைத்தண்டு வயிற்றுக் கோளாறுகளைச் சரி செய்யும்.

வாழைத் தண்டை அறுப்பதால் அரிவாள் மணையின் கூர்மை அதிகமாகும்.

வாழைத் தண்டின் நாரை வெயிலில் உலர்த்தி திரி செய்து விளக்கில் போட்டு நெய் விட்டு சுவாமிக்கு விளக்கு ஏற்றுவது மிகவும் நன்மையைப் பயக்கும்.

வாழைத்தண்டில் வடகம் செய்ய முடியும்

வாழைத்தண்டு கேட்பாரற்றுக் கிடக்கும் பொருள். மலிவானது. அனேக சத்துத் தரும் பயன் மிகுந்த கறிவகை அல்லவா?

(நன்றி: மங்கை)

விற்பனைக்கு
20'' கலர் T.V கள் T.V. Stand, அலுமாரிகள், காஸ் குக்கர்கள். மணிக்கூடுகள். Kenwood Chef, Iron Safe, குளிர் சாதனப்பெட்டிகள். றேடியோக்கள், சிங்கர் தையல் மெசின், Formica சாப்பாட்டு மேசை, பிலிம் புரொஜெக்டர் தொடர்புகொள்க; Free Multi Service, S பத்மநாதன், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு (திருநெல்வேலிச் சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்கும் இடையில்.)

## 84 SRI 1915 மோட்டார் சைக்கிள் எங்கே?

29-05-86 இரவு 9 மணியளவில் வீட்டுக்கு வந்தவர்கள் எனது நீல நிற Honda CD 200 மோட்டார் சைக்கிளை எடுத்துச் சென்றனர். தாம் ஏதாவது இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைத் தெரிவிக்க மறுத்தோடு வந்து பதில் கொடுக்கிறோம் என்று கூறிச் சென்றனர். சொன்னபடி அவர்கள் மோட்டார் சைக்கிளை இது வரை கொண்டு வந்து தரவில்லை.

இந்த மோட்டார் சைக்கிள் வெறும் எனது சொந்தச் சொத்தல்ல. ஒரு தொழிற்சாலையின் உற்பத்திப் பொருட்களை விநியோகிக்கப் பயன்படுத்தப்படும் சாதனமாக இருப்பதால் இச்சம்பவம் தொழிற்சாலையையும் தொழிலாளர்களையும் பாதித்துள்ளது.

இச்சம்பவத்துக்குப் பொறுப்பாளர்கள் யார்? வாக்குறுதிபடி திருப்பித்தராதபோது அதன் காரணத்தையாயினும் அறிவிக்கத் தவறியதேன்?

யாரிடம் கேட்பது? யார் பதில் சொல்வது? எடுத்தவர்களைத் திருப்பித் தருமாறு தயவாக வேண்டுகிறேன்.

S. A. தேவதாசன்

'தேனருவி',
சூராவத்தை, சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடல் கடந்த கடிதம்

### மூன்று குரங்குகள்

தம்பி,

கடிதம் கிடைத்தது. 'எல்லாம் புளுகு - கேட்பதெல்லாம் பொய் - காண்பதெல்லாம் ஏமாற்று' என்று வெந்து, வெடித்து எழுதியிருந்தாய்! இதற்குத்தான் அறிவாளர் வார்த்தைகளைக் கவனி; அனுபவ மூலம் அவர்கள் கூறியதைச் சிந்தித்துச் செயற்படு என்று அடிக்கடி கூறுகிறேன்.

'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'

வள்ளுவர் எவ்வளவு பொருத்தமாக இடித்துக் கூறி வைத்தார்! இன்றைய நிலையை எதிர்பார்த்துத்தான் பாடி வைத்தாரோ? புலவர்கள் தீர்க்கதரிசிகள் தான்!

இரண்டாவது மகாயுத்தம் - ஹிட்லரின் வலக்கரம் யார் தெரியுமா? பிரசாசப் புளுகு மன்னன் கொயபல்ஸ் மறுபிறப்புக் கொள்கையில் எனக்கு நம்பிக்கை உண்டு. உனக்குப் புரிகிறதா?

இப்போ சில கருவிகள் காட்சிகளைத் தருகின்றன. விஞ்ஞானம் தந்த விநோதங்களில் இதுவுமொன்று உண்மைக் காட்சிகளைக் கண்டு அறிவு பெற வேண்டியவர்கள், ஏதேதோ பம்மாத்துகளைப் பார்த்து மயங்க வேண்டிய காலமிது!

மகாத்மா காந்தியார் கூடக் கண்டு இரசித்த பொம்மை எது? மூன்று குரங்குகள் பொம்மை ஒன்று கண்ணைப் பொத்தும்; ஒன்று காதைப் பொத்தும்; அடுத்தது வாயைப் பொத்தும். தம்பி, நீயும் அந்தப் பொம்மையைப் பார்த்து நட. கேட்கக் கூடாததைக் கேட்காதே; காணக்கூடாதவையைக் கண்டு மயங்காதே; பேசக் கூடாததை உளறிக் கொட்டாதே!

மூன்று குரங்குகள் தரும் பாடம் - இன்று மிக அவசியம். மூதாதையார் சொல்லவா, தம்பி அவர்களை மறவாது பின்பற்று!

அன்புடன்
- சிவா -

# எமது மனத்திற்குவாய் உண்டா? அதற்கு உடம்பு கூட உண்டு!

## ஆசை அவா அறுக்க பிறவிப் பிணி நீங்கும்

மனத்திற்கு வாய் உண்டா? என்றொரு கேள்வி. வாய்மாத்திரம் அல்ல, கண், காது நாக்கு, மூக்கு, உடம்பு ஆகியவை எல்லாம் உண்டு. இவற்றின் வாயிலாகத்தானே மனம் தனது செயல்பாட்டைக் காட்டுகின்றது

சமய சாதனைகள் எல்லாமே மனதைப் பற்றியவைதான். அது இருவகைப்படும். ஒன்று மனதை ஒடுக்குதல் அல்லது ஒருமைப்படுத்துதல். அடுத்தது மனப் பரிசுத்தம்.

''மனத்துக்கண் மாசு இலனாதல் அனைத்து அறன்'' என்பது வள்ளுவர் வாக்கு மனதில் குற்றம் இல்லாதவனாக இருக்க வேண்டும்; அவ்வளவு தான் தருமம். மனதில் கெட்டநோக்கம் இல்லாமல் செய்கிற நல்ல காரியம் தான் தருமம். அது எவ்வளவு சிறியதாயினும் பாதகமில்லை. ஆனால் மனதில் ஒரு கெட்ட நோக்கத்தை வைத்துக் கொண்டு எவ்வளவு பெரிய தர்மத்தைச் செய்தாலும் அது வெறும் ஆடம்பரத்துக்காகச் செய்வதாகுமே அல்லாது தருமம் ஆகாது இலங்கை இராணுவத்தினர் பொது மக்களை அழைத்து அன்ன தானம் செய்தார்களாம்; அதுபோல.

பொறாமை சுயநல ஆசை, கோபம், சுடுசொல் ஆகிய நான்கு குற்றங்களுக்கும் மனதில் இடம் கொடுக்காமல் செய்கிற காரியங்கள் எல்லாம் நல்லகாரியங்களாகவே இருக்கும். அப்படிப்பட்ட அறத்தை எப்போது செய்வது என்ற யோசனைக்கே இடமில்லை. ஒத்திப்போடக் கூடாது. உடனே செய்ய வேண்டும்.

தாம் உய்ய வேண்டுமென்று கருதுகிறவர்கள் பொருள்கள் மேற் செல்லும் அவாவை நீக்க வேண்டும்; யான் எனது என்னும் பற்றுக்களை விட வேண்டும்; தவறாது சிவ பூசை செய்யவேண்டும்; அன்புடன் திருவைந்தெழுத்தைத் தியானிக்க வேண்டும்; எவரிடத்தும் கோபத்தை மறக்கவேண்டும்; தேவாரம் திருவாசகம் முதலிய பன்னிரு திருமுறைகளை ஓதவேண்டும்.

எல்லா உயிர்களுக்கும் எந்தக் காலத்திலும் நிச்சயமாய்ப் பிறவியைத் தரக்கூடிய மூலகாரணம் ஆசைதான்.

''ஆசைப்பட ஆய்வருந்துன்பம் ஆசை விட விட ஆனந்தமாமே'' — என்பது பெரியோர் வாக்கு

பரத முனிவர் தவத்தால் உயர்ந்தவர்; அவருடைய ஆத்மா உடலை விட்டுப் பிரியும் போது அவர் வளர்த்த மான் குட்டியின்மீது அவருடைய மனஞ் சென்றது. அதனால் அவர் மானாகப் பிறக்க நேரிட்டது.

**ஆத்மஜோதி நா. முத்தையா**

எதிலும் ஆசை வைக்காததைப்போன்ற குறைவற்ற செல்வம் இந்த உலகத்தில் வேறு எதுவுமே இல்லை. பரிசுத்தத் தன்மை என்பது மனதில் ஆசை என்ற அழுக்கு இல்லாதிருப்பது.

ஆசைகளை விட்டு விட்டவர்கள்தாம் பற்றுகளை விட்டுத் துறந்தவர்கள் ஆவார்கள்.

அகப்பற்று, புறப்பற்று என இருவகை உண்டு நான் என்ற அகங்காரம் அகப்பற்று; எனது என்ற மமகாரம் புறப்பற்று

இந்த இருபற்றுகளுமே தான் இந்த உலகை ஆட்டிப் படைக்கின்றன. ஒருவனை அவனறியாதபடி ஏமாறச் செய்து விடுவது ஆசைதான். ஆசைகளின் தொடர்பை முற்றிலும் அறுத்தொழித்து விட்டால பிறவாமை என்பது தானகவே வரவேண்டிய முறையில் வந்து சேரும்.

ஆசை இல்லாதவர்களுக்குத் துன்பமும் இல்லை; ஆசை இருந்தால் நிச்சயமாகத் துன்பங்கள் அடிக்கடிவந்துகொண்டே இருக்கும். ஆசை என்கிற கொடிய துன்பம் இல்லாமற்போனல் இந்த உலகத்திலும் இன்பம் இடைவிடாது அனுபவிக்கலாம். எவ்வளவு கிடைத்தாலும் திருப்தி அடையாத சுபாவமுள்ளது ஆசை; அதை நீக்கி விட்டால் அந்த நிலைதான் முத்திநிலை.

ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடி வருகின்றது அதில் வெள்ளிப் பிரம்பு ஒன்று மிதந்து வந்தது. கரையில் பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் அதன்மேற் கொண்ட ஆசையால் பாய்ந்து நீந்தி அப்பிரம்பினைக் கைப்பற்றினர். கரைக்குத் திரும்பும்போது நீரின் வேத்தினுல் கையிலிருந்த பிரம்பு தவறி விட்டது. கரையேறிய அவர் தலையிலே கை வைத்துக் கொண்டு ஐயோ எனது அழகான பிரம்பு போய்விட்டதே என்று புலம்பினர்.

இதனைப் பார்த்துக் கொண்டு நின்ற சாது ஒருவர் ஒரு நிமிட நேரம் மாத்திரம் உனது கையில் அப்பிரம்பு தங்கியிருந்ததற்காக அது உனது பிரம்பாகிவிடுமா? தண்ணீரில் மிதந்து வந்தது! ஒரு நிமிட நேரம் கையில் இருந்தது; மறுபடியும் அது தண்ணீரோடு

(7ம் பக்கம் பார்க்க)

# இந்திரா காங்கிரஸ் கட்சிகுள் வெடிப்பு:

## பிரதமர் ராஜீவ் காந்தி எப்படிச் சமாளிக்கப்போகிருர்?

ராஜீவ் விசுவாசிகளாக மாறுபவர்களுக்கும் இந்திரா விசுவாசிகளாக இருந்தவர்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள மோதல் இந்திரா காங்கிரஸ் கட்சியை பிளவுபடுத்தி விடுமா?

இந்திய அரசியல் வட்டாரங்களில் இந்தக் கேள்விதான் எழும்பியுள்ளது

அதுபற்றிய ஒரு கண்ணோட்டமே இந்தக்கட்டுரை (ஆதாரம்: இலஸ்ரேட்டட் வீக்லி ஒப் இன்டியா)

42 வயதான இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு புது இரத்தம் ஏற்ற முயற்சிக்கிருர்.

இது காங்கிரஸின் பழைய தலைமுறைத் தலைவர்களுக்கு ஒத்துவருவதாக இல்லை.

இந்த 'வயதுக் கோளாறு' இந்திரா காங்கிரஸ் கட்சியைப் பிளவுபடுத்தி விடுமோ என்று அஞ்சும் அளவுக்கு விஸ்வரூபம் எடுத்துவிட்டது

இதனை இளம் தலைவர் ராஜீவ் காந்தி சமாளிப்பாரா? இந்திரா காங்கிரஸை உடையாமல் காப்பாற்றுவாரா?

இந்தக் கேள்விகள் தான் இந்திய அரசியல் வட்டாரங்களில் எழுந்து உள்ளன.

இந்தியாவின் பிரபல சஞ்சிகைகள் கூட, இந்திரா காங்கிரஸ் பிளவுபடுமா? என்பது பற்றி ஆய்வுகளை நடத்தியும் உள்ளன.

1984 நவம்பரில் திரு. ராஜீவ் காந்தி மீது பிரதமர் பதவி சுமத்தப்பட்டது

பிரதமர் பதவியை ராஜீவ் ஏற்றபோது, இந்திரா காங்கிரஸில் ஊழலும் கட்டுப்பாடின்மையும் தான் நிலவியது.

கட்சியை ஒழுங்குபடுத்தவேண்டும் என்று அன்றே திட்டம் போட்டார் ராஜீவ் காந்தி.

அதன்படி காங்கிரஸ் கட்சியில் இருந்து பலர் அகற்றப்பட்டனர்.

### அதிருப்தி.

இதைத் தொடர்ந்து காங்கிரஸ் பழைய தலைவர்கள் மத்தியில் 'அதிருப்தி' ஏற்படத் தொடங்கியது. மாநிலங்களில் உள்ள காங்கிரஸ் கட்சிக் கிளைகளிலும் 'அதிருப்தி' தொற்றியது.

கர்நாடக மாநிலத்தில் முன்னாள் முதலமைச்சர் குண்டுராவ் புறக்கணிக்கப்பட்டார்.

குஜராத்தில் முன்னாள் முதல்வர் மாதவசிங் சோலங்கி ஒதுக்கப்பட்டார்.

காங்கிரஸ் நூற்றாண்டு மாநாடு கடந்த மார்ச் 12 இல் இடம்பெற்றது. அன்று புதுடில்லி அக்பர் வீதியில் உள்ள தலைமை அலுவலகம் பரபரப்பாகக் காணப்பட்டது.

கருத்துவேறுபாடுகள் உச்சகட்டத்தில் அன்று காணப்பட்டன.

பஞ்சாப் மாநில ஆளுநராக இருந்துவரும் தற்சமயம் மத்திய அமைச்சராக இருப்பவருமான அர்ஜுன்சிங் கட்சியின் உதவித்தலைவராக பிரதமரால் நியமிக்கப்பட்டார்.

இதன் மூலம் கட்சித் தலைவராக பதவிவகித்து வரும் பழைய காங்கிரஸ்வாதி கமலபதி திரிபாதி 'செல்லாக்காசாக' ஆக்கப்பட்டார்.

### 65 பக்கக் கடிதம்

மனம் குமுறிய நிலையில் திரிபாதி 65 பக்கங்கள் கொண்ட கடிதம் ஒன்றை பிரதமருக்கு அனுப்பினுர்

பிரதமர் பதவிக்கு வந்ததுமே ராஜீவால் ஒதுக்கப்பட்டவர் பிரணாப் முக்கர்ஜி. இந்திராவின் அமைச்சரவையில் இரண்டாம் இடத்தை வகித்தார்.

காங்கிரஸ் நூற்றாண்டு மாநாட்டில் நடந்த தெரிவின்போது பிரணாப் முகர்ஜி காரியக்கமிட்டிக்கு மீண்டும் தெரிவாகவில்லை

இந்திராவின் காலத்தில், கட்சித்தலைவர்கள் எல்லோரும் அன்னைக்கு விசுவாசமாக இருந்தனர். கருத்து வேறுபாடுகள் இருந்தும் அவர்கள் அவருக்கு விசுவாசம் தெரிவிக்க தவறவே இல்லை.

ஆனால் இப்பொழுது, காங்கிரஸ் கட்சி 'அதிருப்தி'யாளர்கள் பிரதமர் ராஜீவ்காந்திக்கு விசுவாசம் தெரிவிக்கத் தவறிவிட்டனர்.

அதிருப்தியாளர்களில் பெரும்பாலானோர் இந்திரா விசுவாசிகள். தாங்கள் வெல்லப்போவது இல்லை என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

### ராஜீவின் திட்டம்

இதனிடையில், கட்சி உறுப்பினர்கள் இலகுவாகத் தன்னைச் சந்திக்கக் கூடியதான திட்டம் ஒன்றை பிரதமர் ராஜீவ் காந்தி தயாரித்துள்ளார். கட்சி உறுப்பினர்களின் அபிப்பிராயங்களையும் பிரதமர் காந்தி கேட்டறிந்து கொள்ளத் தீர்மானித்துள்ளார்

'அதிருப்தி' பரவுவதைத் தடுக்கும் நடவடிக்கையாக இது அமைகின்றது என்று சொல்லப்படுகின்றது

'அதிருப்தி'யாளர்களான இந்திரா விசுவாசிகள் தொடுத்துள்ள தாக்குதலை பிரதமர் எப்படிச் சமாளிக்கப் போகின்ருர்?

இந்த அதிருப்தியாளர்களால் காங்கிரஸை உடைத்து இன்னெரு கட்சியை உருவாக்குவது இயலுமான காரியமா?

### பிரதமரின் வழி

கட்சித் தாவல் தடுப்புச் சட்டத்தின் கீழ் மூன்றில் ஒரு பங்கு இந்திராகாங்கிரஸ் எம்பிக்கள் கட்சியை விட்டு வெளியேறினுல் தான், இந்திராகாங்கிரஸ் கட்சியில் சட்டபூர்வமான பிளவு ஏற்படுவது சாத்தியமாகும்.

பிரணாப் முகர்ஜி, குண்டுராவ் போன்ற இந்திரா விசுவாசிகளின் பயமுறுத்தலைச் சமாளிக்க பிரதமருக்கு இரண்டு வழிகளே உள்ளன.

ஒன்று:- இந்திரா விசுவாசிகளுக்கு மீண்டும் பதவி வழங்குவது.

இரண்டு:- கட்டுப்பாடின்மைக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிரதமர் ராஜீவ்காந்தி இரண்டாவது வழியில் தான் நாட்டம் காட்டுகிருர்.

பிரணாப் முகர்ஜி போன்ற இந்திரா விசுவாசிகள் சிலர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டாயிற்று.

இதன் மூலம் இந்திரா காங்கிரஸில் நிலவி வந்த பிளவு மனப்பான்மை நீங்கி விடும் என்று சொல்லமுடியாது.

இந்திரா காங்கிரஸ் கட்சி என்றுதான் பெயர் இருந்தாலும் 'ராஜீவ் காங்கிரஸ்' என்று கூறக்கூடிய அளவு ராஜீவ் விசுவாசிகள், கட்சியில் முக்கிய இடங்களை வகிக்கின்ருர்கள்.

அகில இந்திய ரீதியில் ராஜீவுக்குப் போட்டியாக மக்கள்செல்வாக்குப் பெற்ற ஒருவர் இல்லாதநிலையில், காங்கிரஸில் ஏற்படும் விரிசல்கள் பெரும் பிளவாக மாறும் என்று சொல்வதற்கு இல்லை.

இப்படி இந்திய அரசியல் வட்டாரங்களில் கருத்து நிலவுகின்றது.

(அ-எ)

# பண்டிதமணி: வரலாறும் காலமும்

**பிள்ளை அவர்கள் கேட்டறிந்த பெரியவர்கள்**

மனேச்சர் அவர்கள் பிள்ளை அவர்களுக்குப் புத்தகப் படிப்புக்கு அப்பாற்பட்ட உலகப் படிப்பினையும், உலகம் உவப்ப வாழ்ந்த பெரியவர்களைப் பற்றியும் உணர்த்தி வந்ததும் உண்டு. அந்த வகையில் ஆறுமுகநாவலர் அவர்களின் நன் மாணக்கர்கள் சிலர், ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் சைவப்பணியும், தமிழ்ப்பணியும் புரிந்த விபரங்களை எல்லாம் வரிசை தவருமற் கூறி வந்தார்.

புலவர்களிடம் புரவலர்கள், செல்வர்கள், வள்ளல்கள் பொது நோக்காமல், வரிசையாய் நோக்குதல் வேண்டும் என்பது சங்ககாலத் தமிழ்ச் சால்பு அதனைத் திருவள்ளுவரும், ''பொது நோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின் அது நோக்கி வாழ்வார்பலர்'' எனக் கூறிப் போந்தார். வரிசையா நோக்குதல் என்பது தகுதியறிதலாகும்.

நாவலர் அவர்கள் வழியில் புலவர்களின் தரமறியும் தகுதியை மனேச்சர் அவர்கள் பழகியிருந்தவாறே, அப்பயிற்சியைப் பிள்ளை அவர்களுக்கும் பழக்கிவிட்டார். தரணி பொறுக்குமோ நானும் புலவனென்றிருந்

துக்கு நீலகண்ட சிவாசாரியார் வடமொழியில் செய்தபாடியத்தைத்தமிழில் தந்ததோடு வேறு பல நூல்களையும் செய்தவர். அவர் சைவசமயத்துக்குச் செய்த பங்களிப்பு, உ. வே. சாமிநாதஐயர் அவர்கள் தமிழுக்குச் செய்த உபகரிப்பிலும் பார்க்கப் பாரமானது.

யும் ஈழக்குடுமியும் பெயர் பெற்றவை.

செந்திநாதையர் அவர்களை மகான் என்றே வழங்கி அவரை ஓரளவுக்கு உபாசனு மூர்த்தியாகக் கருதி வந்த பிள்ளை அவர்களுக்கு எங்கிருந்தோ மகானின் புத்தகப் பலகையும் பல ஏடுகளும் சித்தாந்தப்படங்களும் கிடைத்தன. அவை வரப்பிரசாதமாய் வந்துசேர்ந்தமையை அவர்தம் பிற்காலத்து மாணக்கர்களுக்குப் பலமுறை கூறியதும் உண்டு.

அவரை நடமாடும் பல்கலைக்கழகமென விற்பத்திமான்கள் வெகுவாகப் போற்றியமை இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் வகிக்கிறது

தமிழ் நாட்டிலிருந்து காலத்துக்குக்காலம் பெரியவர்கள் வந்து காவிய இரசனை கேட்டுப் போனதொரு காலம் யாழ்ப்பாணத்தின் பொற்காலம்.

நாவலர் அவர்கள் மருகர் செய்த சிறு தவறுகளைக் கேட்டுக்கோபித்து அருணசலம் என இருந்த வேளைகளில் மருகனின் இரசனையைக் கேட்டு உருகி இமாசலமாகிப் பனித்துளிகளெனக் கண்ணீர் விட்டு ஆனந்த

## கல்விப் பேறடைந்த காலத்துத் தொடர்புகளே 'இலக்கியவழி'க்கு எழுச்சியூட்டியது

தால் என்று புலவர் ஒருவர் தம் அடக்கத்தைக் குறிப்பிட்டதும் உண்டு.

குப்பிழான் செந்திநாதஐயர் அவர்கள் நாவலர் அவர்களுடைய நன் மாணக்கர். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நன்றாக ஆங்கிலம் கற்றவர். மும்மொழிப் புலவராய அவர், நாவலர் தாபித்த ஆங்கிலப் பாடசாலையில் பொறுப்பாசிரியராயிருந்தார். பின்னர் சைவப்பிரகாச வித்தியாசாலையை நடத்தியவர். பத்தாண்டுக் காலம் காசியில் வாழ்ந்து, கடுமையான சமஸ்கிருத ஏடுகளைக் கசடறக் கற்றவர். பிரம்ம சூத்திரத்

செந்திநாதையர் அவர்கள் திருப்பரங்குன்றத்தில் ஆச்சிரமம் அமைத்துக் குருகுலம் நடத்தி சிவாசாரியர் எழுவரை உருவாக்கியவர். பழநி வேதாகம பாடசாலை அதிபர் காசிவாசி ஈசான சிவாசாரியாரின் குரு செந்திநாதையர் அவர்களே என்றால் ஈழத்துக்குப் பெருமை தரும்பேறு வேறென்ன வேண்டும்?

திருப்பரங்குன்றப் பிரதேசம் முன்னரே ஈழக்குடுமிகளுக்குப் பெயர் போன இடம். குடுமித் தமிழருள் சோழக்குடுமி

**க. சி. குலரத்தினம்**

பொன்னம்பல பிள்ளை என்று பெயரெடுத்த படிப்பாளிகள் பலர் வாழ்ந்த காலத்தி நாவலர் அவர்களின் மருகர் பொன்னம்பல பிள்ளை அவர்களே வித்துவசிரோமணி எனப் பெயர் பெற்[illegible] தனித்துவமானது.

மடைந்தனர் என்று பிள்ளை அவர்கள் பிற்காலத்தில் பேசியதும் எழுதியதும் உண்டு

இத்தகைய செய்திகளையெல்லாம் மனேச்சர் அவர்கள் பிள்ளை அவர்களுக்குச் சொல்லிவைத்[illegible]

(6ம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்போரில் நீங்களும் பங்காளியாக இதுவும் ஒரு வழி

இன்று தமிழ் மக்கள் மத்தியில் பயங்கரமான சூழ்நிலை. மரண ஓலம். வெடிச்சத்தம். பல இன்னல்கள் மத்தியில் உழைப்பு நிம்மதியற்ற வாழ்வு திண்டாட்டம் பாதுகாப்பை யார் தான் தரப்போகிருர்களோ என்ற ஏக்கம்.

இவற்றிற்கு எல்லாம் காரணம் தான் என்ன? இதைத்தான் தமிழ் மக்கள் நன்கு சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிருர்கள்.

'அவனின்றி அணுவும் அசையாது'' ''எல்லாம் அவன் செயல்'' இப்படி இந்து தர்மம் கூறுகிறது. ''எதை விதைக்கிருயோ அதையே நீ அறுவடை செய்வாய்'' என்கிறது கிறிஸ்து தர்மம்.

அவனின்றி அணுகூட அசையமுடியாவிட்டால் எப்படி இவ்வளவு அக்கிரமமும் நடக்கிறது. எல்லாம் அவன் செயல் என்றால் இவைகளையும் அவன் ஏன் செய்கிறன்.?

அன்பானவர்களே உங்கள் பாவம் நீங்க வேண்டும் டண்படைய வேண்டும். உங்களை நீங்களே திரும்பிப்பாருங்கள். எத்தனை கொடுமை மிக்கவர்களாக மாறிவருகின்றேம். பொறாமை என்னும் அக்கினி எம்மைரோ எரிக்கின்றது. சுயநலம் என்ற செயல் எம் நலத்தையே இல்லாது செய்கிறது.

இன்னும் பலர் தம் நிலையே உணராமல் கொண்டாட்டங்களைச் செய்கிருர்கள். இன்றைய நிலையில் பிறந்த நாள் கொண்டாட வேண்டுமா? ஆடம்பரமான திருமண நிகழ்ச்சிகள் வேண்டுமா? இரவு பகல் மாயை என்னும் வலைக்கு எம்மைக் கொண்டு செல்லும் டி. வி. படக்காட்சிகள் வேண்டுமா?

எமது வயோதிபர் இறந்துவிட்டால் பொங்கல் இல்லை. தீபாவளி கொண்டாடமாட்டோம். ஆனால் வாழ வேண்டிய எத்தனையோ இளம் பிறப்புக்கள் பரிதாபமான முறையில் மடிகிறார்களே எங்கள் நல்வாழ்விற்காகதியாகம் செய்து தம் உயிரையும் விடுகிருர்களே. இத்தனைக்கும் மத்தியில் எமக்கு கொண்டாட்டங்கள் தேவை தானு? ஏன் இன்னும் இந்நிலை.?

''நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்'', இது தெய்வப்புலவரின் பொய்யாமொழி.

நாம் செய்த தீய ஒழுக்கமே எமக்குத் துன்பத்தை தருகின்றன. ஆகவே நல்ல ஒழுக்கமாக இருந்து இறைவனை சரண் அடைவோம்.

''கொடுமை மிக்க ஹம்ஸனை கொன்று வென்ற கண்ணனும்'' என்று பாடுகிறேம். இன்றைய கொடுமையை ஒழிக்க இறைவனை சரண் அடைவோம்.

தூது சென்று பாண்டவர் துயர் தீர்த்த கண்ணனும் என்று பாடுகிறேம். பாண்டவர் கண்ணனிடம் படையைக் கேட்கவில்லை. கண்ணனையே தமக்குத் துணை கேட்டார்கள். எனவே நாமும் பாண்டவர் போல் நல்லவர்களாக இருந்து கொண்டு இறைவனை எமக்கு துணைக்கு அழைப்போம்.

தமிழ் இனத்தை வழி நடத்திய தந்தை செல்வா கடைசியாக தமிழினத்தை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்ருர்.

நாயன்மார்களால் எமக்கு பெரும் கவசங்களும் ஆயுதங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. திருநீற்றுப் பதிகம், கோளறுபதிகம், இடர்களையும் பதிகம், நமச்சி

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பயனுள்ள பத்துப் பழமொழிகள்

— சத்தியபாமா —

- ✱ தாயைப்போல பிள்ளை — நூலைப்போல சேலை
- ✱ ஐந்தில் வளையாதது — ஐம்பதில் வளையுமா?
- ✱ கற்றது கை மண் அளவு — கல்லாதது உலகளவு
- ✱ கல்லைக் கண்டால் நாயைக் காணும் நாயைக் கண்டால் கல்லைக் காணும்
- ✱ உன்னைப் போல பிறரையும் நேசி
- ✱ ஏமாறுதே. ஏமாற்றுதே
- ✱ பூனை கண்ணை மூடிக்கொண்டால் பூலோகம் இருண்டு போகுமா?
- ✱ பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்
- ✱ ஒருகுடம் பாலுக்கு ஒரு துளி விஷம்
- ✱ ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்

## முரளி செய்த புரளி

முரளி ஒரு துடுக்கான பையன். அவன் எப்போதும் ஏதாவது குறும்பு செய்து கொண்டேயிருப்பான். மற்றவர்கள் துன்பப்படுவதைவிருப்பத்தோடு பார்த்து ரஸிப்பான். பாடசாலையில் தன் வகுப்பறையிலும் புரளி செய்து கொண்டேயிருப்பான். அவனது விளையாட்டுத்தனம் வினையைத் தரும் என்று அறியாத பருவம்.

அன்றொரு நாள் முரளியின் வகுப்பில் ஆசிரியர் ஏதோ காரணமாக வரத் தாமதமாகி விட்டது. மாணவர்கள் ஒரே கலகல வென்று சத்தமிட்டுக் கதைத்துக் கொண்டு இருந்தனர். இவ்வேளையில் ஆசிரியர் மெதுவாக வகுப்பை அணுகினர். மாணவர்களின் கலகல சத்தத்தைக் கேட்டு கடும் கோபத்துடன் வகுப்புக்குள் நுழைந்தார்

ஆசிரியர் வந்ததைக் கூட அவர்கள் கவனிக்கவில்லை. அவ்வளவு இன்பமாய்க் கதைத்துக் கொண்டிருந்தனர். ஆசிரியர் அடங்காக் கோபத்துடன் 'இது என்ன சந்தையா?' என உரத்த குரலில் கேட்டார். மாணவர்கள் அனைவரும் அமைதி அடைந்தனர். பின்பு 'யார் சத்தமிட்டது?' எனக் கேட்கவே ஒவ்வொருவரும் ஒவ்வொருவரைச் சாட்ட ஆரம்பித்தனர்.

'சரி! எல்லோரும் அமைதியாய் இருங்கள். யாருடைய சத்தமாவது எனக்குக் கேட்டால்...... மேசை மேல் ஏற்றிக் கடும் தண்டனை வழங்குவேன்' எனக் கூறிய ஆசிரியர் கீழே பார்த்த வண்ணம் வகுப்பறையில் நடந்து கொண்டிருந்தார் யாரையாவது காட்டிக் கொடுத்து மேசை மேல் ஏற்றி அடி வாங்கிக் கொடுக்க நினைத்த முரளி 'சேர்! ரவி கதைக்கிறன்' என ஆசிரியரிடம் முறையிட்டான்

'ரவி பேசியது எனக்குக் கேட்கவில்லை. நீ தான் இப்போது பேசுகிறாய்; ஏறு மேசைமேல்' எனத்தடியுடன் முரளியை அணுகினர் முரளி அழுதவண்ணம் மேசை மேல் ஏறினன். வெட்கத்துடன் நின்றான். 'தன்வினை தன்னையே சுடும்' என அவனுடைய வாய் முணுமுணுத்தது. ★

செல்வி: தேனுகா குகநாதன்
(தெல்லிப்பழை)

## குள்ள வாத்து

—கெ. துஷிகா —

குவாக் குவாக் வாத்து
குள்ளமான வாத்து
அவாக்கொண்டு நாங்கள்
அழைத்து வந்த வாத்து.

வாலை வாலை ஆட்டியே
வாத்து நடந்து போகுதே
காலைக் காலை முடக்கியே
கடுகதியில் போகுது

ஓடி ஓடி வா இங்கே
உனக்குத் தீனி தருகிறேன்
நாடித் தேடி வந்தாலும்
ஏனோ நகர்ந்து செல்கிறாய்?

வாத்து வாத்து என்று நாம்
வாய் நிறையச் சொல்லியும்
காத்து நிற்க மறுத்திடும்
காரணம் தான் என்னவோ?

## விடுகதையும் விடையும்

1. அம்பலவாணரின். ஐந்து வீட்டுக்கும் ஒரு ஐற்றம். (உள்ளங்கையும் விரல்களும்)
2. வெள்ளை ரோட்டில் கறுப்புக் கார் ஓடுது. (கண்)
3. வட்டக் கிணற்றினுள் வடிவான முத்துக்கள். (மாதுளம்பழம்)
4. முக்கண் குடுமியனர் சந்தைக்கு வாறார். (தேங்காய்)
5. திக்கெட்டும் இருப்பான் திறந்தால் கதறுவான். (வானொலி)
6. நான்கு காலுண்டு ஆனல் நாயில்லை இருக்க இடமுண்டு. அதுவிடில்லை (நாற்காலி)
7. வாலுண்டு கையில்லை தலையுண்டு கண்ணில்லை தட்டினல் சீறுவான். (தீக்குச்)

'நல்லூரான்'

## பெண்ணடிமைத்தனத்தைக் களைய பெண்களே போராட வேண்டும்

பெண்களிடையே பொதுவாயுள்ள சில பலவீனங்களே பெண்ணடிமைத்தனத்திற்கு வழி கோலுவதாயுள்ளது. இப் பலவீனங்களை பலமானவையாக மாற்றி; பெண்ணடிமைத்தனம் நீங்க உதவுவதே பெண் சமுதாயத்தின் கடமையாகும்.

"ஆரபி"

பெண்கள் தமது உரிமைகளுக்காக போராடும் சமயத்தில் ஆண் வர்க்கத்திடமிருந்து பரவலாக பலத்த எதிர்ப்பு ஒன்று கிளம்புவது அவதானிக்கப்பட முடிந்தது.

ஏனெனில் பெண்களின் உரிமைகள் நிலைநிறுத்தப்படும் பட்சத்தில் தமது உரிமைகள் பறிக்கப்பட்டு விடப்போகிறது எனும் கருத்தினை அவர்கள் கொண்டவர்களாயிருப்பதே அவர்கள் மத்தியில் இப்படியானஎதிர்ப்பு எழுவதற்குக் காரணமாகும்.

ஆண்களில் இந்தநிப்லை பாடு மிகவும் தவறான தொன்றாகும்.

பெண்களும் ஆண்களின் எதிர்ப்பை தங்களால் எதிர்கொள்ளவோ சமாளிக்கவோ முடியாது என்றே கருதுவதால் அவர்கள் மேலும் பின்வாங்க வேண்டியவர்களாகின்றனர்.

பெண்கள் பெண்களாகவே இருந்து கொண்டு பெண்களின் உரிமைகளை நிலைநிறுத்த முற்படவேண்டும். பெண்கள் ஆண்களாக மாறுவதற்கு முற்படக்கூடாது. இந்த வகையில் ஆண்களின் எதிர்ப்பினையும் வென்றெடுக்க முடியும்.

பெண்கள் அடிமைகளாக வாழ விரும்புகிறார்கள் எனும் கருத்து

### பெண்ணிலை வாதம்

கடந்த சில கட்டுரைகளில் பிரதிபலித்தது. இது பிழையானது.

ஏனெனில் எந்தப் பெண்ணும் அடிமையாக வாழ்வதை விரும்பமாட்டாள். ஆனல் சமுதாயத்திற்கு பயந்து தனக்கு ஏற்படும் அடிமைவாழ்வை ஏற்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகிருள்.

உதாரணமாக குடும்ப வாழ்க்கையை விரும்பாத பெண்கள், பெற்றோருக்கு தாம், சுமையாக இருப்பதாக பெற்றோர்கள் கருதுகிறார்களே என்றெண்ணியும், சமுதாயத்தில் தனக்கு ஏற்படவுள்ள கெட்ட பெயர்களுக்கு பயந்தும் மணம் முடிக்க இணங்குகிறார்கள்.

இந்நிலையில் ஓர் ஆணின் நிலைமை மாறுபட்டதாயிருப்பதை எமது சமுதாயத்தில் அவதானிக்க முடிகிறது.


எது எவ்வாறு இருப்பினும் சமுதாயம் எனும் போது நாம் ஒவ்வொருவரும் அங்கு அங்கத்தவர்கள். எனவே நாம் ஒவ்வொருவரும் நினைத்தால் ஏன் சமுதாய அமைப்பை மாற்றியமைக்க முடியாது?

ஆயினும் உன்னை நீயே திருத்திக்கொள். சமுதாயம் தானக திருந்தும் எனும் கருத்தினையும் ஒரளவு சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

எமது பெண்கள் தாமாக திருந்தி, என்றைக்கு பெண்ணடிமைத்தனத்தை களைய முன் வருகிறார்களோ அன்று தான் பெண்விடுதலை என்பது சாத்தியமான தொன்றாகும்.

பெண்ணடிமைத்தனத்திற்கு ஆண்களின் போக்கைவிட பெண்களின் பின் நிலையான போக்கே முக்கிய பங்களிப்பு வகிக்கிறது

பெண்களை அடிமைப்படுத்துவது மனித சமுதாயத்தில் காலங்காலமாக நிலவிவரும் ஓர் அம்சமாயுள்ளது. ஆனல்




இன்றைய காலகட்டத்தில் இதன் விகிதாசாரம் குறைந்துள்ளது என்று கூறவும் முடியாதிருக்கிறது. பரவலாக பெண்கள் சுதந்திரமாக நடமாடுவது போன்றதோற்றம் இன்று நிலவுகிறது. எனினும் இது எந்தளவு தூரம் உண்மையான தொன்று என்பது கேள்விக்குறிதான்.

**சர்ச்சை சக்கரம்**

பெண்ணடிமைத்தனத்திற்கு வழிகோலுபவர்கள் யார்?

நிச்சயமாக இருபாலரும்தான் பொறுப்பேற்க வேண்டும் ஏனெனில் இருகையும் தட்டினல்தான் ஓசை வரும். கடந்த கட்டுரை ஒன்றில் பெண்ணடிமைத்தனத்திற்கு ஆண்கள் போக்கும் காரணம் என எழுதப்பட்டிருந்தது ஆனலும் பெண்ணடிமைத்தனத்திற்கு ஆண்களின் போக்கினை விட பெண்களின் பங்கே முக்கிய காரணம்.

பெண்ணடிமைத்தனத்தை தளர்த்த பெண்கள் முற்படும் பட்சத்தில் அத்தகைய ஆண்களின் போக்கினையும் கருத்துகளையும் மாற்றியமைக்க முடியும்.

ஆகவே பெண்ணடிமைத்தனத்தைக் களைய முதலில் பெண்களே போராடவேண்டும்.

பெண்கள் சம்பந்தப்பட்ட வகையிலான, பிரச்சினைகளில், அஃது பெண்கள் அடிமைப்படுத்தப்படுகிறார்கள்; ஒரு சமத்துவ சமுதாயத்தில் ஒதுக்கப்படுகிறார்கள் என்பதை உணரும் பட்சத்தில், - எதிர்த்து முன்னின்று செயல்படும் பட்சத்தில் - பெண் சமுதாயமானது, அத்தகையவர்களின் ஒரு கீழ்த்தரமான கண்ணோட்டத்துடன் நோக்குவது மட்டுமல்லாது ஒதுக்கவும் முற்படுவதை அவதானிக்க முடியும். ★

## ராஜேந்தரை இசையமைப்பாளராக தெரிவு செய்தது ஏன்?

### இயக்குநர் அழகப்பன் சொல்கிறர்

"பூக்களைப் பறிக்காதீர்கள்" படத்தின் இசையமைப்பாளர் டி.ராஜேந்தர். இந்தப் படத்தில் ஆறு பாடல்களுக்கு இசையமைக்கிறர் இவர்.

இந்தப் படத்துக்கு ராஜேந்தரை இசையமைப்பாளராக தெரிவு செய்தது ஏன்? என்பது பற்றி படத்தின் இயக்குனர் வி' அழகப்பன் இப்படிச் சொல்கிறர்.

"பூக்களைப் பறிக்காதீர்கள்" முழுக்க முழுக்க மலைப்பிரதேசத்தில் — இளமை தவழும் காதல் கதையை மையமாகக் கொண்ட -- படம்.

அதனல் இந்தப் படத்தில் பாடல்கள் மிகவும் சிறப்பாக இருக்க வேண்டும் என்று எண்ணினேன். அதையே எனது நண்பர்களும் சொன்னர்கள்.

இந்த நேரத்திற்தான் டி. ராஜேந்தர் ஞாபகத்தில் வந்தார். மக்கள் மத்தியில் பாடல்களுக்கு இசையமைப்பதைப் பொறுத்தவரை அவருக்கென்று ஒரு நல்ல மதிப்பு இருப்பது எல்லோரும் அறிந்த ஒன்று தான்.

அதற்கு முன் அவர் எனக்குப் பரிச்சயம் இல்லை. எனினும் அவரைப் போய்ப் பார்த்தேன். விஷயத்தைச் சொன்ன மறுகணமே, எந்தவித மறுப்பும் சொல்லாமல் சம்மதித்தார்.

அத்தோடு நிற்காமல் 'மைதிலி என்னைக்காதலி' படம் சம்பந்தப்பட்ட வேலைகளில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டிருந்தும் கம்போஸிங்கிற்குத் திகதியையும் ஒதுக்கித் தந்து விட்டார்.

குறிப்பிட்ட திகதியில் அவரின் படத்தின் முக்கிய வேலைகள் இருந்தும், அதை தவிர்த்து விட்டு குறிப்பிட்ட நேரத்துக்கு ஏ. வி. எம். ஸ்ரூடியோவை வந்தடைந்தார்.

இதிலிருந்து அவர் தனது தொழிலில் ஆர்வமும் அக்கறையும் கொண்டிருப்பது தெரிகிறது' என்றார் அழகப்பன். ★

## அம்மாவின் விருப்பப்படியே நான் நடிக்கின்றேன் - ஸ்ரீதேவி

எனது படங்களைத் தேர்ந்து எடுப்பது என் அம்மா தான்; நான் அல்ல. இப்படிக் கூறுகிறர் பிரபல நடிகை ஸ்ரீதேவி.

அவர் மேலும் சொல்கிறர்:

அம்மாவுக்குக் கதை பிடித்திருந்தால் தான் என்னைக் கதை கேட்கும்படி சொல்வார்.

இது மட்டுமல்ல, டைரக்டரும் நல்ல திறமையானவராக இருத்தல் வேண்டும். கதை சொல்லும் விதத்தில் இருந்தே ஒரு டைரக்டரின் திறமையை 'எடை' போட முடியும்.

'புதிய டைரக்டராக இருந்தாலும் - அவர் திறமையானவராக இருந்தால் அவருடைய



படத்தில் நடிக்க எனக்கு ஆட்சேபம் இல்லை' என்கிறர் ஸ்ரீதேவி.

ஸ்ரீதேவியின் திறமை குறித்து பிரபல டைரக்டரும் ஒளிப்பதிவாளருமான பாலு மகேந்திரா சொல்கிறர்:

'சொல்லிக் கொடுக்கும் விஷயங்களோடு தனது சொந்த சரக்கையும் அழகாகக் கலந்து பாத்திரத்துக்கு இயல்பான ஆழத்தைக் கொடுக்கக்கூடிய ஒரு சில தென்னிந்திய நடிகைகளுள் ஸ்ரீதேவி முதலிடம் வகிக்கக் கூடியவர் என்பது என் சொந்த அபிப்பிராயம்' என்கிறர் அவர்.




## இந்தியப் படவுலகில் ரஜனியின் நிலை?

பம்பாய் படவுலகில் நின்றுபிடிக்க முடியும் என்று ரஜனிகாந்த் நினைக்கிறர்.

காரணம் தான் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்தவன் என்ற நினைப்பு.



பிறப்பில் ரஜனிகாந்த் ஒருமகாராஷ்டிரன்தான். ஆனல் அவரின் மூதாதையர் தெற்கில் குடியேறி தாயகமாக்கிக் கொண்டு விட்டனர்.

நடிகை ரத்தியை'தென் இந்திய வட இந்தியர்' என்று அழைக்க முடியும் என்றல்,

என்னை வட இந்திய-தென் இந்தியன் என்று அழைக்கலாமே —இப்படிக் கூறுகிறர் ரஜனி காந்த்.

இரண்டு தோணிகளில் கால் வைப்பவர்களின் நிலை எப்படி இருக்கும்?

அது ரஜனிகாந்துக்கு ஏற்படாமல் இருந்தால் சரிதான்.

### தயாரிப்பு: பேரின்பம்

#### இந்தியில் இடம்பிடிக்க நடிகை சுவப்ன பெரும் பிரயத்தனம்

தமிழ் நடிகை சுவப்ன, இந்தி திரைப்பட உலகில் இடம் ஒன்றைப் பிடிக்க பெரும் பிரயத்தனப்படுகிறர்

'ஏக் டின் பாஹுகா' இந்திப் படத்தில் நடித்தும் சுவப்னவால் இந்திப் பட உலகில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை.

இருந்தும் இந்தி வட்டாரங்களில் செல்வாக்குடன்தான் திகழ்கின்றர்.

காரணம் என்ன?

நண்பர்களைத் தேடிக்கொள்வதிலும் செல்வாக்கைப் பிரயோகிப்பதிலும் அவர் காட்டும் உத்திகள்தான்.

இந்தி டைரக்டர் சுனில் சர்மா சுவப்னவுக்கு நல்ல ஆதரவு.

'ஷர்தாஞ்சலி' படத்தைத் தயாரித்தவர் சுனில் சர்மா.

இப்போது சுவப்னவை வைத்து 'ஷெர்' படத்தைத் தயாரிக்கிறர்.

தர்மேந்திரா, மிதுகற்கர் ஆகியோரும் அந்தப் படத்தில் நடிக்கின்றனர்.

#### மீண்டும் விஜி

தமிழில் படவாய்ப்பு இல்லாமல் இருந்த நடிகை விஜிக்கு, மீண்டும் படவாய்ப்புகள் வந்துள்ளன

கவுண்டமணிக்கு ஜோடியாக அவர் இரண்டு படங்களில் நடித்துக்கொண்டிருக்கிறர் அவர்.

#### நட்சத்திர முகவரி

விஜயசாந்தி
1, நியூகிரி ரோட்
தி. நகர்,
சென்னை - 17

சுரேகா
89, ஆழ்வார் திருநகர் (விரிவு)
சென்னை - 87

அர்ச்சனு
32, சாதுல்லா தெரு
சென்னை - 17

முத்து பாரதி
5 ஏ, கவரைத் தெரு
மேற்கு மாம்பலம்
சென்னை - 33

எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி
(எம். ஆர். கே.)
3, கணபதி முதலி தெரு
திருவல்லிக்கேணி,
சென்னை - 5

விஜு சக்கரவர்த்தி
2, நான்காவது
பிரதானச்சாலை,
'பிளாக்1'(6ஆவதுமாடி)
யுனைடெட் இந்தியா காலனி
சென்னை - 24

எஸ். வி சேகர்
13, ஐந்தாவது குறுக்குத் தெரு,
மந்தைவெளிப்பாக்கம்,
சென்னை - 28,

## குறைந்த வாக்கு வித்தியாசத்தில் சிவாஜி கணேசன் தோல்வி கண்டார் 'பிரேம் நஸீர்' சொல்கிறர்

ஜெயப்பிரியா பிலிம்ஸ் சார்பில் ஜெயலட்சுமி வீரராகவன் தயாரித்துள்ள படம்: உன்னிடம் மயங்குகிறேன்.

இந்தப் படத்திற்கு கதை - வசனம், பாடல்கள் எழுதி இயக்கி இருப்பவர் காரைக்குடி நாராயணன், ஒளிப்பதிவு; பாபு, இசை; சந்திரபோஸ்.

நளினி, சுரேஷ், சந்திரசேகர், பிரசாத், பபிதா, செந்தில், லூஸ் மோகன், பிந்துகோஷ், வி. கோபாலகிருஷ்ணன் ஆகியோர் நடித்திருக்கும் படம் இது.

படங்களில் நடிப்பதில் கின்னஸ் சாதனை புரிந்த மலையாளத் திரைப்பட நடிகர் பிரேம் நஸீர், தேசியத் திரைப்பட விருது வழங்கும் தெரிவுக்குழுவின் தலைவராகப் பணிபுரிந்தார்.

91 படங்கள் போட்டிக்கு வந்து இருந்தன. தெரிவுக்குழுவின் முழு உறுப்பினர்களும் (தலைவர் உட்பட) 37 படங்களைப் பார்த்தன.

தெரிவுகள் பற்றி பிரேம் நஸீர் சொன்னதாவது;

சிறந்த நடிகர் தெரிவில் சஷிகபூருக்கு அதிக வாக்குகள் கிடைத்தன. குறைந்த வாக்கு வித்தியாசத்தில் சிவாஜிகணேசன் தோல்வி கண்டார் என்று கூறுவது தவறு.

நானு படேகரிலும் பார்க்க சிவாஜி கூடுதல் வாக்குகளைப் பெற்று இருந்தார்.

தெரிவின் போது உறுப்பினர்களுக்குள் வாக்குவாதம் ஏற்படவில்லை. தெரிவு எல்லாம் 2மணித்தியாலங்களுக்குள் முடிவடைந்தன.-

இப்படி பிரேம் நஸீர் சொன்னர்.

### திரையுலகில்

'அப்புசாச்சா' என்ற பெயரில் தயாராகும் டெலிவிஷன் இந்திப் படத்தொடரில் நடிகை காஞ்சன சீதாப்பாட்டியாகவும், பூர்ணம் விஸ்வநாதன் அப்புசாமியாகவும் நடிக்கிறர்கள்.

★

மகாசக்தி மாரியம்மன் படத்தை அடுத்து புதிய படத்தயாரிப்பில் தீவிரம் காட்டுகிறர் கே. எஸ் கோபாலகிருஷ்ணன் அதுவும் புராணப் படம்தான்.

### யாருக்கு மவுசு

கதாசிரியர் விஜு சக்ரவர்த்தியை விட நடிகர் விஜு சக்ரவர்த்திக்குத்தான் மவுசு அதிகமாக இருக்கிறது என்கிறர் விஜுசக்ரவர்த்தி.

நடிக்க வந்த பிறகு தான் கூட்டம் தொய்வில்லாமல் இவரைச் சுற்றி இருக்கிறது. அதைத்தான் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சேர், வெளியே இருக்கேக்க ஆரும் பாத்துட்டாங்கன்னு, ஏதும் 'வித்தியாசமா' நெனேப் பாங்க'

'அவன் மனசுள் கேலியாகச் சிரித்துக் கொண்டான்.

'யாரும் வித்தியாசமாக நினைக்கிறதில் இவளுக்குக் கூச்சம் வேறு உண்டா?'

தனது வார்த்தையின் அர்த்தமும், அதன் தொனிக்குள் ஒளிந்துள்ள விஷயமும் அவனை உத்வேகப்படுத்தும் என்று அவள் நினைத்தாள்.

ஆனால், அவள் கிருத்தியங்களால் அவன் பற்களை நன்னிக்கடித்துச் சிரித்தான்.

'அம்பலத்தில் ஆடியாச்சு. முற்றத்தில் ஆடுவதற்குத்தான் இவளுக்குப் புதுசா 'வெட்கம்' வந்திருக்கு...?

'யாரும் பாத்தா ஏதும் வித்தியாசமாக நினைப் பாங்க'

'என்ன அலங்காரமாகச் சொல்கிருள். பத்திலிகளின் வார்த்தைகளை இங்கே பரத்தைகள் கடன் வாங்கிக் கொண்டார்கள்'.

அவன் தனக்குள் சொல்லிச் சிரித்துக் கொண்டான்.

ஆனால், அவளின் சாங்கோபாங்கமான கூச்சத்தின் வெளிப்பாடு, திமிறி அடக்கும் ஆசை, ஒரு கண்ணியமுள்ள மங்கைக்கு இயற்கையாக விருப்பது போல் இவளிடமிருந்து எப்படி வெளிப்படும்? நெருப்புக்கோளத்தில் உழல்பவனுக்கு அதன் ஜுவாலை வீசாமலிருக்குமா?'

அவள் குரல் மறுபடியும் கனிவோடு கேட்டது.

'சேர், எழுந்திருச்சு உள்ளே வாங்களேன்' சற்றுமுன் உமிந்து போயிருந்த துரையின் தேகம், காற்றுடிபோல் லேசாகச் 'சுர்'ரென்று ஆடி உள்ளே சென்று அவள் 'ஆசனம்' என்று வைத்த பக்கூஸ் பெட்டியில் வலு பக்குவமாகக் குந்திக் கொண்டது.

'ஐயோ பாவம். ஒலகம் அறியாத பச்சைக் கொழந்தை மாதிரி'

'உலகம் விழுங்கி'யான இவள், தனக்குள் அனு

'குடுகுடு' வென்று ஓடினாள்.

துரைக்கு நெஞ்சு 'படபட'வென்று அடித்தது.

சொற்பநேர மௌன விரதம்.

மறுபடியும் புதிய வெடில் - நாறல் - துரையின் நாசித் துவாரங்களில் மொய்த்தபோது, அவர் பாடு பெருஞ் சங்கடமாய்ப் போயிற்று.

'இந்த நரக வேதனை எதற்கு? எழுந்து போவதா விடுவதா?'

மனம் அடித்துக் கொண்டது

அந்த நேரத்திலே அருண்டு எழுந்த குழந்தை ஒன்று. குடிசை அதிருமாப்போல், 'அம்மே' என்று அலறி வீரிட்டுக் கத்தவே, துரைக்கு ஆகவும் திடுக்காட்டம் எடுத்தது

'நிலைவரம் சரியில்லை ..,

என்றாலும், இவன் கங்கணங்கட்டியபடி இந்த அக்கினிப் பரீட்சை-அதிலே தான் அடையும்

துச் சிரிக்க அருகில் நின்ற இரண்டு பையன்களும் சிணுங்கிக் கொண்டு அந்நியரான இந்தத் துரைக்குத் தங்களைக்காண்பித்த படி, ஏதோ ஒரு விந்தையான காட்சியைக் காண்கின்ற பாவனையில் முகங்களில் ஆவல் தேங்க, இந்த வெள்ளைத்துரையையே கண்ணூனிப் பார்த்தார்கள்.

சின்னப்பையன் மேலுதட்டில் வழிந்த மூக்குச் சளியை வலது புறங்கையால் ஒரு பாட்டம் தடவி, தனது தொடையில் துடைக்கவே, பையன் பக்கத்தில் நின்ற சிறுமி அக்காக்காறிக்கே புதுசாக அருவருப்பு உண்டாயிற்று.

அவள் துரையை ஒரு வித குற்ற உணர்வோடு பார்த்துத் தம்பிப் பயலை அதட்டி, 'டே மூக்குச் சளியை தொடையில பூசக்கிட்டியே? ஏன்டா செத்தையிலே துடையேண்டா' என்று ஒரு

போல் தொண்டைக்குள் ஒருவித அழுக்கம்.

கைலேஞ்சியை எடுத்து விரித்து முகத்தைத்தடவி மூக்கை அடைத்துப் பிடித்துக் கொண்டான்.

என்ன நினைப்போ தெரியவில்லை. சர்வ நிர்வாணியாகத் துரைக்கு முன்னே நின்ற அந்தப் பெண்குட்டி, 'சடா' ரென்று பக்கத்தே தாவி, தாயானவள் ஏலவே வெளியே இழுத்துப்

குது ...'

உண்மையாகவே இந்தச் 'சேர்' என்னும் விரத் துரையின் அடிவயிறு அப்போது பற்றி எரிந்தது.

வாயில் போட்டுச் சுவைக்கிற பண்டங்களில் ஒன்று கூட அவன் கையில் எடுத்து வரவில்லையே என்ற ஆதங்கம்.

'ஓ, நான் இந்தக் குழந்தைக்காகவா - இவர்களைப் பார்க்கவா

## (இருமாதக்குறுநாவல்)



எஸ். அகஸ்தியர்

போட்ட கிழிசல் துவாயை எடுத்து தனது அரையை மறைத்துக் கட்டிக்கொண்டு, ஒரு புதுமணப் பெண்போல் நாணிக் கோணிக் கொண்டு மறுபடியும் அவன் முன்னே வந்து நின்று சிரித்தாள்.

மூன்று குழந்தைகளை

வந்தேன்?'

ஒரு கணம் தன் மனச் சுமையை இறக்கிச் சமாளித்துக் கொண்டு ஒரு பெருமூச்சு விட்டு நிமிர்ந்தான்.

குழந்தைகள் அவனை வரும் ஏதோ ஒரு நம்பிக்கையோடு அணிலை ஏறவிட்ட நாய்க்குட்டி போல் துரையின் முகத்தையே ஒருவித தவிப்போடு ஏக்கமாகப் பார்த்துக்கொண்டு நின்றன.

'ஒன்றுமில்லை' என்று கை விரிக்க அவன் மனசு ஏவுதில்லை.

மெதுவாகச் சேட் பொக்கற்'றுக்குள் விரல்களால் கோதி எடுத்த ஒரு நோட்டை விரித்துப் பார்த்தான்.

ஐந்து ரூபாய்த் தாள்.

அதைக்கண்ட குழந்தைகள்-பெண்குட்டி உட்பட தங்களது சூப்பிணிக்கரங்களைக் கோர்த்துக் கொண்டு சண்களை அகலத் திறந்து சிமிட்டிச் சிமிட்டிச் சிரித்தார்கள்.

அந்தத் தவ்வல் குழந்தையின் கைக்குள்ளே 'நோட்'டைச் சுருட்டித் திணித்துவிட்டு. துரை முகம் மலரச் சிரித்தார். சிரித்துவிட்டு நிமிர்ந்த போது, அக் குழந்தைகளின் தாயானவள் - இந்தத் துரையை வரவேற்ற அந்தப் பெண்ணானவள் குரல் மறுபடியும் கணீரித்துக் கேட்டது.

'சேர், தேத்தண்ணி குடியுங்கோ'

அவன் கொஞ்சங்கூடத் தயக்கமோ கிலேசமோ அருசையோ கொள்ளாமல் அவள் கொடுத்த தேநீர்க் கிளாசைக் கையில் ஏந்தி வைத்துக் கொண்டு, அவளை ஒரு புன்னகை ததும்ப, ஞானிகளின் சம்பூர்ண விஸ்தாரப் பாணியில் கனன்று பார்த்தான்.

அவளும் துரைக்கு எதிரே திகைத்துப் போய் திமிறிச் சிரித்தபடி நின்றாள். ★

(வளரும்)

யும் அருவருப்போடும் இரக்க சிந்தையோடும் மனங் குழைந்து இவன் பார்த்தான். ஆகச் சின்னது மெல்லத் தவழ்ந்து போய், அவனின் - துரையின் காற்சட்டையை அப்பிப் பிடித்து எழுந்து நின்று முகத்தை ஏறிட்டுப் பார்த்துக் கேலிச் சிரித்தது.

'சீ, சனியன்' என்று அத்தவ்வலைப் பிறங்கையால் தள்ளிவிட அவன் மனம் ஆக்ரோஷமாக உந்திய போதும், அவன் அந்தக் குழந்தையைக் கை கொடுத்துத் தூக்கவோ, பிடித்துத் தள்ளி விடவோ, 'போ சனியனே' என்று விரட்டி விடவோ, அல்லது அணைத்தெடுக்கவோ முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தான்.

மிகச் சாதுரியமாக இதைக் கவனித்த மூத்த பெண்குட்டி, அந்தக் குட்டித்தம்பியைப் பிடித்துச் சற்றுப் பின்னுக்கிழுத்து வைத்துக் கொண்டு அதன் பாஷையைப் புதிய பரிமாணத்தில் மொழிபெயர்த்தாள்:

'சேர் எங்க தம்பி ஒங்க கிட்ட என்னமோ கேக்

வெற்றிவாகை-இவற்றையெல்லாம் யோசித்தபடியால் 'தாக்கற' இருந்து கொண்டான்.

அச்சமயம் சொல்லி வைத்த மாதிரி எங்கிருந்தோ ஆணும் பெண்ணுமாக 'படை எடுத்து' வந்த மூன்று சின்னஞ் சிறுசுகள், தங்களுக்கு ஒருபோதும் பழக்கமோ பாத்தியதையோ இல்லாத இந்த அந்நிய வீரன் முன்னே - துரைக்கு எதிரே, தங்கள் பிறந்த

பாட்டியாட்டம் 'புத்தி' சொல்லிவிட்டு, அவளே அந்த வழு சளியைத் துடைத்துத் தனது காற்பாதத்தில் தேய்த்தபின் துரையைப் பார்த்து புன்னகைத்தாள்.

குப்பி விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது.

அவர்கள் முகங்களில் அப்பிக்கிடந்த ஊற்றைப் படலம், திட்டுத் திட்டாக உறைந்து கிடப்பதை அப்போது அவன் கவனம் ஈர்ந்தது. சிலும்பலடித்துப் பரட்டையாய்ப்போன அவர்களின் தலைகளில் பிடித்த ஊற்றைப் பிசாண்களிலிருந்தே புதிதாக நாறும் வெடில் அடிக்கிறது என்பதை அவன் அனுமானிக்க, குடல் ஒரு பாட்டம் புரண்டு வயிறு 'குமுக்'கென்று குமட்டியது. ஓங்காளம் வருவது

## (அத்தியாயம் - 08)

மானித்துக் கொண்டே பக்கத்துச் செத்தைப் பாடத்திலிருந்து 'அவுக்'கென்று ஒரு கவடு பாய்ந்து முற்றத்துக்குக்

மேனிகளான கோலங்களைப் பற்றிய அருசை-கூச்சம் கொஞ்சங் கூட வின்றி, வெகு சாதாரணமாக நின்றனர்.

மூத்தபெண் 'கலகல'த்

# சிந்தனையின் வெளிப்பாடு

# மனிதனின் செயற்பாடு

மனித மனங்கள் ஒரு நிலைப்பாட்டில் இருப்பதில்லை என்பது வெளிப்படை. அதற்கு உள்புற உளைச்சல்களும், வெளிப்புறச் சூழ்நிலைகளும், வேறும் பலதரப்பட்ட தாக்கங்களும் காரணங்களாக அமைந்துள்ளன.

முக்கியமாக "விருப்பம்" "நடைமுறைச் சாத்தியம்" என்ற இரண்டும் மனித மனங்களைப் பெரிதும் ஆட்கொண்டுள்ளன. இவை வயது, பருவம் என்னும் இரண்டு சுற்று வட்டத்திற்குள் சிறகடித்துப் பறக்கின்றன.

குழந்தைகள் முதல் முதியோர்கள் வரை ஒவ்வொரு மனிதரும் வயது, பருவம் என்ற கட்டுக் கோப்புக்குள் இருந்து கொண்டு தத்தமது சிந்தனைகளை வெளிக்கொணருகின்றனர்.

குழந்தைகள் சிறுவர்கள் ஆகியோரின் சிந்தனைகள் வேறு. வளர்ந்தவர்களின் சிந்தனைகள் வேறு. இவை அவர்களின் உள்ளக் கிடக்கைகளாலும், வெளிப் புறத்தாக்கங்களினாலும் வேறுபடுவதை அவதானிக்கலாம்.

இவற்றை மனோதத்துவ அடிப்படையில் சொல்வதாக இருந்தால் "சிந்தனைகள் தாக்கத்தின் வெளிப்பாடே" என்பது புலனாகின்றது.

சிறுபராயத்தினர் வீட்டுச் சூழலிலும், சுற்றுப் புறங்களிலும் கண்ணால் கண்டவற்றையே ஆரம்பத்தில் சிந்திக்கின்றனர்.

அடுத்துத் தாய் தந்தையர்கள் சுற்றத்தவர்கள் சொல்லிக் கொடுப்பவற்றையும் மனதில் நிறுத்தி வைத்துக்கொண்டு சிந்திக்கின்றார்கள். கண்ணால் காணாத ஒரு பொருளைப் பற்றி மற்றவர்கள் சொல்லும்போது அதைப் பற்றி எண்ணிச் சிந்திக்கத் தலைப்படுகின்றனர்.

பள்ளிப்பருவம் இன்னும் ஒருபடி மேலான சிந்தனையைத் தூண்டுவதற்கு அடித்தளமாக அமைகின்றது. வீட்டுச் சூழல், வெளிப்புறச்சூழல் இரண்டையும் தாண்டிப் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளை தன் வனைத ஒத்த பல பிள்ளைகளுடன் கூடிப் பழகி, படித்து, விளையாடி மகிழும் போதும் வேறுபட்ட சிந்தனைகளின் பால் இட்டுச் செல்வதை அவதானிக்கலாம்.

பிள்ளைப் பருவத்திலேயே அவர்களின் மனத்தில் நல்ல ஆரோக்கியமான சிந்தனைகள் வெளிப்பட வேண்டும் என்ற நோக்கில் -

"ஓடி விளையாடு பாப்பா

நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா

கூடி விளையாடு பாப்பா

ஒரு குழந்தையையும் வையாதே பாப்பா"

என்று பாரதியார் தன் பாப்பாப்பாட்டின் மூலம் தெளிவுபடுத்துவதை அவதானிக்கலாம்.

எனவே சிந்தனைகள் கல்வியின் ஆரபத்தில் பெரிதும் தங்கியுள்ளது என்பதை சிந்தனையாளர்கள் தெளிவுபடுத்தியுள்ளமையை அவதானிக்கலாம்.

பிள்ளைகளின் மனோ வளர்ச்சிக்கும் சிந்தனைகளே முக்கிய பணியாற்றுகின்றன. நல்ல சூழலில் வளர்க்கப்படுகின்ற பிள்ளை சிந்தனைத் திறன் கொண்டு செயலாற்றுவதை அவதானிக்கும் போது அச் சிந்தனையின் பிரதிபலன் எமக்குப் புலனாகின்றது.

நல்ல சிந்தனைகள் பிள்ளைகளின் மனோ வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக அமைவதுடன் மட்டுமல்லாது மேலும் பயனுள்ள சிந்தனைகளைச் சிந்தித்து முன்னேற்றமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் உறுதுணையாகவுள்ளன. எனவே மனித செயல்பாட்டில் சிந்தனை எவ்வளவு தூரம் முக்கியம் பெற்றுள்ளது என்பது தெளிவாகின்றது.

நல்ல சிந்தனைகளோ அல்லது அதற்கு மாறான சிந்தனைகளோ ஒரு மனிதனில் வியாபித்திருக்கும் போது அதன் தாக்கங்கள் அவன் செயற்பாட்டில் பிரதிபலிக்கும். ஒருவனை நல்லவனாக்குவதும் தீயவனாக்குவதும் அவன் சிந்தனையைப் பொறுத்ததேயாகும். ★

தம்பு - சிவா

# கிழக்கிலங்கையின் கலங்கரை விளக்கு: மட்டு. பல்கலைக்கழகம்

## சிறப்புறச் செய்ய நன்முயற்சி தேவை

மட்டக்களப்புப் பல்கலைக்கழகம் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகமாக உதயமாகுமென்று கூறி இது எவ்வாறு திருத்தி அமைக்கப்படுமென்றும், இங்கு பாடப் புலன்களும் கலைத்திட்டமும் எவ்வாறு உருவாக்கப்படுமென்றும் மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரிப் பணிப்பாளர். கருத்துக்களைக் கண்ணுற்றேன் மகிழ்ந்தேன்.

இக்கல்லூரி நிறுவப்படுவதற்கு முன்னர் பல்கலைக்கழக மான்யக்குழு இதனையிட்டு சாட்சியம் கோரியிருந்தது.

"இக்கல்லூரி கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக கல்லூரி எனப் பெயரிடப்பட்டுகாலப்போக்கில் தன்நிறைவுபெற்ற பல்கலைக்கழகமாக உருவெடுக்க வேண்டும். அதுவரையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தோடு இணைத்து செயற்படவேண்டும். மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரியோடு திருகோணமலை, கல்முனை ஆகிய இடங்களில்இணைப்புக் கல்லூரிகள் நிறுவப்பட்டு இணைக்கப்பட வேண்டும். திருகோணமலையில் சமுத்திரப் பண்பு சார்பு சார்ந்த பொறியியற் நிறுவனம் அமைக்கப்படவேண்டும். கல்முனைப் பகுதியில் பொறியியற் கல்லூரி அமைக்கப்பட்டு மட்டக்களப்புப் பல்கலைக்கழக கல்லூரியோடு இணைக்கப்பட வேண்டும்.

—இக்கருத்துக்கள் இக்கட்டுரையாசிரியரினால் பல்கலைக்கழக மான்ய குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

அவ்வேளையில் இக்கருத்துக்கள் ஏற்கக்கூடியனவாக, மான்யக்குழு நினைக்கவில்லை.

கிழக்கிலங்கை அறிஞர்களோடும், நாடாளுமன்ற உறுப்பினர்களோடும் இவ்விடயமாக தொடர்பு கொள்ளப் பட்டபோது, இது அவர்களால் முக்கியமான விடயமாகக் கருதப்படவில்லை. மட்டக்களப்புப் பல்கலைக்கழகக் கல்லூரிக்கும், திருகோணமலைக்கும் தொடர்பில்லை என்னும் கருத்தும் நிலவியது.

கிழக்கிலங்கை பல்கலைக்கழகம் எனும் பெயரோடு இந்நிறுவனம் உருவாகுவது வரவேற்கப்படவேண்டியதாகும்.

இங்கு வர்த்தக முகாமைத்துவப் பீடம் ஆரம்பிப்பதும் பொருத்தமாகும்.

பல்கலைக்கழகத்தில் விளங்கும் விவசாயபீடம், பாரத நாட்டுப் பல்கலைக்கழகங்களோடு தொடர்பு கொண்டிருக்கும் எனும் தகவல் போற்றத்தக்கது. பேராதனை பல்கலைக்கழகத்திற்கும், கோயம்புத்தூர் விவசாயப் பல்கலைக்கழகத்திற்கும் உத்தியோக அடிப்படையில் தொடர்புண்டு. கோயம்புத்தூர் பல்கலைக் கழகம், அகில பாரத பல்கலைக்கழகம் மட்டுமல்ல, அது அகில உலக நிறுவனமாகவும் விளங்குகின்றது.

கவின்கலைப்பீடம் எதிர்வரும் கல்வி ஆண்டில் ஆரம்பிக்க வசதியாக விபுலானந்தர் இசை நடனக் கல்லூரியோடு இணைத்துக்கொள்வதன் மூலம் சாத்தியமாகும் எனும் பணிப்பாளரின் கருத்து தர்க்கக் கருத்தாகும்.

பிரதேச அபிவிருத்தி அமைச்சு இதற்கு இணக்கம் கொடுக்காது விட்டது கல்விக்கு அப்பாற்பட்ட காரணங்களால் தீர்மானிக்கப்பட்டது எனக்கொள்வது முறையாகும்.

விபுலானந்த இசைக் கல்லூரி, இந்நாட்டுத் தமிழ்மக்களின் பொதுச் சொத்து. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைக்கும் இசைத்துறைக்கும் பொறுப்பாயிருந்த விபுலானந்த அடிகள் கிழக்கிலங்கையில், பல்கலைக் கழகம் நிறுவப்படுகின்ற வேளையில் இசைக்கல்வியும் இங்கு சிறந்த இடம் பெற வேண்டுமென கேட்டுக்கொண்டவர். இங்கு அமைக்கப்படும் இசைத்துறை. கிராமியக் கலாசாரத்தையும் வளர்க்க வேண்டுமென்பது அவரது அவா.

கிழக்கிலங்கைக் கிராமிய கலைகள், முருகியல் வளர்ச்சி, பாரம்பரியக் கலைவளம், இயற்கைக் கவிதைவளம் ஆகியவற்றிற்கு புத்துயிர் கொடுத்தவர்களுள் முதல்வர் உபவேந்தர் வித்தியானந்தன் அவர்கள். அவருக்கு உறுதுணையாக நின்றவர்கள் பண்டிதர் வீ. சி. கந்தையா, எவ். எக்ஸ். சி. நடராசா, பேராசிரியர் சிவத்தம்பி, பேராசிரியர் சண்முகதாஸ், கலாநிதி மௌனகுரு, பிரதம கல்வி அதிகாரி தியாகராசா போன்றவர்கள். அமரர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களது முன்னோடி. இவர்களுள் நம்மை விட்ட கலா பேராசிரியர் கைலாசபதிக்கும் இடமுண்டு.

இவர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் கவின் கலைப்பீடம் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என்று ஆராய்

(6ம் பக்கம் பார்க்க)

பேராசிரியர் ப. சந்திரசேகரம்

# காலத்தால் அழியாத வரலாற்றுக் கடிதங்கள்

## நேருவிடமிருந்து இந்திராவுக்கு

### செல்வம் எங்கே செல்கிறது?

ஜனவரி 18, 1931

நீ முசூரியிலிருக்கும் போது நான் உனக்கு எழுதிய கடிதங்களில் மனிதன் முன்னேற்றம் அடைய அடைய எப்படி பல வகுப்புக்கள் தோன்றின என்று சொல்லியிருக்கின்றேன். ஆதி காலத்து மனிதன் வயிற்றுச் சோற்றுக்குக் கூட கஷ்டப்பட்டுப் பாடுபட வேண்டியிருந்தது. அவர்கள் நாள்தோறும் வேட்டையாடினார்கள். பழங்களையும் கொட்டைகளையும் சேகரித்தார்கள். உணவைத் தேடி இடந்தோறும் அலைந்து திரிந்தனர். பிறகு நாளடைவில் கூட்டம் கூட்டமாகச் சேர ஆரம்பித்தார்கள். இக்கூட்டங்களைப் பெரிய குடும்பங்கள் என்றே சொல்ல வேண்டும். தனியாக இருப்பதை விடக் கூடியிருப்பதில் பாதுகாப்பு அதிகம் என்று கருதி அவர்கள் சேர்ந்து வாழ்ந்தும் வேட்டையாடியும் வந்

தார்கள். பிறகு ஒரு பெரிய மாறுதல் நிகழ்ந்தது. உழவுத் தொழில் கண்டு பிடிக்கப்பட்டது. இது பழைய நிலைமையை அடியோடு மாற்றிவிட்டது. காலம் முழுவதும் வேட்டையாடிப் பிழைப்பதைவிட நிலத்தை உழுது பிழைப்பது மிகவும் சுலபம் என்று ஜனங்கள் கண்டு கொண்டார்கள். நிலத்தை உழுதல், விதைத்தல், அறுத்தல் முதலியன செய்வதற்கு ஓரிடத்தில் குடியிருக்க வேண்டும். பழையபடி கண்ட கண்ட இடங்களில் அலைந்து திரிய முடியாது. ஆகவே அவர்கள் தங்கள் தங்கள் நிலங்களுக்கருகில் நிரந்தரமாக வாழவேண்டி நேரிட்டது. இவ்வாறு ஊர்களும் பட்டணங்களும் உருவாயின.

விவசாயத்தினால் வேறுபல மாறுதல்களும் ஏற்பட்டன. நிலத்திலிருந்து விளைந்த உணவுப் பொருள்கள் முழுவதை

யும் அவ்வப் பொழுதே உபயோகித்துவிட முடியாமையால் மிச்சம் ஏற்படலாயிற்று. இம்மிச்சத்தை அவர்கள் சேமித்து வைத்தார்கள். வேட்டையாடிப் பிழைத்த பழைய வாழ்க்கையை விட இப்புதிய வாழ்க்கையில் சிக்கல்கள் சற்று அதிகமாயின.

சில வகுப்பார் வயல்களிலும் பிற இடங்களிலும் வேலை செய்ய வேறு சில வகுப்பார் அந்த வேலையை மேற்பார்லை செய்து நிர்வகிக்கத் தலைப்பட்டார்கள். இந்த நிருவாகிகளும் நிருமாணிப்போரும் சிறிது சிறிதாகப் பலம் பெற்று நாட்டாண்மைக்காரர்களாகவும், சிற்றரசர்களாகவும், அரசர்களாகவும், பிரபுக்களாகவும் ஆகிவிட்டார்கள். அவர்கள் கையில் அதிகாரம் இருந்தபடியால் விளைந்த உணவுப் பொருளில் செலவழிந்தது போக மிகுதியில் பெரும்பாகத்தைத் தங்களுக்கென்று வைத்துக் கொண்டார்கள். இவ்வாறு இவர்கள் செல்வம் அதிகரித்துவர, வயல்களில் வேலை செய்து வந்தவர்களுக்கு உயிர் வாழ்வதற்கு மட்டு

(6ம் பக்கம் பார்க்க)

## சின்ன மனிதர்களே சிந்தித்துப் பாருங்கள்!

மனைவி இறந்துவிட்டால்
மறுமணமே முடிக்கின்றார்
கணவன் இறந்த பெண்ணை
கடும் சோதனை செய்கின்றார்
வெள்ளைச் சேலை உடுத்து
தள்ளி விடும் பொழுதும்
அள்ளி முடித்த கூந்தல்
அவிழ்ந்து விழும் பொழுதும்
மங்கலத் திலகம் அது
மறைந்து விடும் பொழுதும்
தலை விதியை எண்ணி
தலையேதான் சுத்து தையோ
அழகு வனிதை அவள்
ஆகி விட்டாள் விதவை
அயல வர்கள் கூடி
அவளை யேதான் திட்டுகிறார்
இவளின் கொடிய விதி
இதற்க துவே காரணமாம்
தாலி இழந்து விட்டாள்
வேலி ஒன்று போடுகிறார்
பெண்ணாய்ப் பிறந்த அவள்
பேயாகிப் போய் விட்டாள்
அழகுச் சிலை அவளை
ஆரும் தொடக் கூடாதாம்
ஆடவன் முன்னால் அவளோ
ஆள்க் காட்டக் கூடாதாம்
எல்லாமே இழந்து விட்ட
இல்லாளே ஆகி விட்டாள்
என்ன விதி இதுவோ
இத்தனை யும் பெண்ணுக்கோ
சின்ன மனிதர்களே
சிந்தித் துப் பாருங்கள்.

— வ. யோகானந்தசிவம்

## பயம் போக்க உதவும் நிபுணர்

பிரிட்டனில் வீடு வீடாக தபால் பட்டுவாடா செய்யும் ஆண், பெண் ஊழியர்களும் வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களுக்குப் பயப்படுகின்றனர். இத்த 'நாய்ப்பயத்தை' அகற்றிக்க பிரிட்டிஷ் அரசு உளவியல் வல்லுநர்களை வேலைக்கமர்த்தியுள்ளது.

அரச ஊழியரின் மனோதிடத்தை வளர்க்க பிரிட்டிஷ் அரசு எடுக்கும் நடவடிக்கையின் ஒரு கட்டமாகவே இது அமைந்துள்ளது.

(உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையிலையைத் தாக்கும் நோய்கள் அதனைப் பாதுகாக்கும் வழிமுறைகள்

**பொ. சுந்தரானந்தா**
(விவசாய ஆலோசகர்)

புகையிலைப் பயிரைத் தாக்கும் நோய்களை 3 விதமாக வகுத்துக் கொள்ளலாம்.

1. பக்ரீறியா நோய்கள்.
2. பங்கஸ் நோய்கள்
3. வைரஸ் நோய்கள்

**பக்ரீறியா நோய்கள்:**

(அ) பக்ரீறியா வாடல் அல்லது கிறன்வில் வாடல்:-

இவ்வாடல் நோய் சியூடோமோனஸ் சொலனேசியாரம் என்னும் பக்ரீறியாவால் ஏற்படுகின்றது. தாக்கப்பட்ட பயிர்களின் இலைகள் பச்சையாகஇருக்கும்போதே திடீரென வாடுகின்றன. முதல் இரு நாட்களிலும் ஒன்று அல்லது இரு இலைகள் பகல் வேளையில் வாடியும் மாலையில் மீண்டும் செழிப்பாக இருப்பதனையும் அவதானிக்கலாம். ஓரிரு நாட்களில் பயிர் முற்றாக வாடும். இறுதியாக தாக்கப்பட்ட பயிர் இறப்பதனால் இலைகள் முற்றாகத் தூங்கிய நிலையில் இருப்பதனைப் பார்க்கலாம்.

தாக்கப்பட்ட தாவரத்தின் தண்டை முறித்துப் பார்த்தால் உடைந்த பகுதியிலிருந்து வெண்மையான சீழ்போன்ற பதார்த்தம் வெளிவருவதனை நீங்கள் அவதானிக்கலாம். இவற்றின் கலன் கட்டுக்கள் மஞ்சள் அல்லது மெல்லிய கபில நிறமாக மாறுகின்றன. தாக்கத்தின் இறுதியில் தாக்கப்பட்ட பயிர்களின் வேர்களும் அழுகிக் கருமை நிறமடைகின்றன.

**பங்கஸ் நோய்கள்**

(அ) கருந்தொடை:

நீர் வடிகால் குறைவான பிரதேசங்களிலேயே இந்நோயின் தாக்கம் பெருமளவில் அவதானிக்கப்பட்டுள்ளது. 1'-2' உயரமான பயிர்கள் தாக்கம்படும்போது, அதன் அறிகுறியாக இலைகள் திடீரென வாடும். சில நாட்கள் செல்ல இலைகள் மஞ்சள் நிறமடைந்து தண்டிலிருந்து தொங்கியநிலையில் இருக்கும். நோயின் ஆரம்பப் பருவத்தில் தாவரத்தை வேருடன்பிடுங்கிப்பார்த்தால் சில பக்கவேர்கள் கருமையடைந்து இறந்து காணப்படும். ஆனால் தாக்கம் கூடும்போது முழுவேர்ப்பகுதியும் தண்டின் அடிப்பகுதியும் அழுகி இறக்கின்றன. நன்கு வளர்ந்த தாவரங்கள் தாக்கப்படும்போது, நிலத்திலிருந்து ஒரு அடி உயரத்துக்கு தண்டுப் பகுதி கருமையாகக் காணப்படும். தொடர்ந்து, இலைகள் மஞ்சள் நிறமாக மாறி, பின் கபில நிறமாக மாறி காய்ந்துசுருங்கிக் காணப்படும். தண்டின் நடுப் பகுதியைப் பிரித்துப் பார்த்தால் கருமை நிறமாகக் காய்ந்து வெடித்திருப்பதனை அவதானிக்கலாம்.

(ஆ) அடி அழுகல் அல்லது காறை அழுகல்:

இந்நோயை உண்டாக்கும் பூஞ்சணம் நாற்றுக்களையும், சிறிது வளர்ந்து தாவரங்களையும் நிலமட்டத்துக்கு அருகிலுள்ள தண்டின் காறைப்பகுதியில் தாக்குகின்றன. இதனால் காறைப்பகுதியில் ஆரம்பத்தில் கபில நிற அழுகல் தோன்றுகின்றன. சூழல் சாதகமாக ஈரப்பதன் அதிகரித்துக் காணப்படும் போது காறைப்பகுதியைச்சுற்றி அழுகல் பரவுகின்றது. இதனால் தாவரம் வீரியம் குறைந்து காற்றடிக்கும்போது சாய்கின்றன. ஆரம்பத்தில் தாக்கப்பட்ட பயிர்களின் வேர்கள் உக்காது பயிர்கள் இறந்தபின்னரே அவை உக்க ஆரம்பிக்கின்றன, வளர்ந்த தாவரங்கள் தாக்கப்படும்போது அவற்றின் வளர்ச்சி தடைப்பட்டு, இலைகள் மஞ்சள் நிறமடையும்.

(இ) நாற்றழுகல்:

நாற்றுமேடைப்பருவத்திலேயே இந்நோயை உண்டாக்கும் பங்கசின் தாக்கம் பெருமளவில் காணப்படுகின்றது. தாக்கப்பட்ட பயிர்களின் அடிப்பகுதிஅழுகி, கருமை நிறமாக இருப்பதனை நீங்கள் அவதானிக்கலாம். இந்நோய் நாற்றுமேடையில் பரவி பயிர்களைத் தாக்கும்போது பயிர்கள் வட்டம் வட்டமாக கூட்டாக இறக்கின்றன. அழுகி இறந்த நாற்றுக்கள் காய்ந்து வெண்மையாக நாற்றுமேடையில் கிடப்பதனையும் அவதானிக்கலாம்.

(ஈ) தவளைக்கண்:

இந்த இலை நோய் தாவரத்தின் இலைகளை நாற்றுப் பருவத்திலும், வளர்ந்த பருவத்திலும் தாக்குவதோடு, பதப்படுத்தும் இலைகளிலும் தோன்றுகின்றது. இந் நோயின் காரணமாக இலைகளில் 2-15 மி.மீ விட்டமுள்ள வட்ட அல்லது கோண வடிவத்தில் இறந்த புள்ளிகள் தோன்றுகின்றன. இப்புள்ளிகள் தெளிவான, ஒடுங்கிய, கபிலநிற ஓரத்தையும், மென் கபில அல்லது சாம்பல் நிற மையத்தையும் கொண்டுள்ளதால் தவளைக்கண் போன்று தோன்றுகிறது

ஆரம்பத்தில் பயிரின் கீழுள்ள முதிர்ந்த இலைகளில் தாக்கம் ஆரம்பித்து, பின் காலநிலை சாதகமாக இருக்கும்போது மேலுள்ள இளம் இலைகளுக்கும் பரவுகின்றது.

சில வேளைகளில் புள்ளிகளின் கருகிய நடுப்பகுதி வீழ்வதனால் அவை துவாரமுள்ள புள்ளிகளாகத் தோன்றுகின்றன. இந்நோயை ஏற்படுத்தும் பங்கஸ் மண்ணில் காணப்படுகின்றன. மழை பெய்து நீர் மண்ணுடன் சிதறும்போது அவை இலைகளுக்குப் பரவுகின்றன. முதிர்ந்த பருவத்தில் இந்நோய் ஏற்படும் போது உடனடியாக அறிகுறிகள் தோன்றுது விடினும், போறணையில் உயர் வெப்பநிலையில் பதப்படுத்தப்படும் போது, தாக்கப்பட்ட இடங்களில் கரும்புள்ளிகள் தோன்றுகின்றன. இவை போறணைக் கரும்புள்ளிகள் என அழைக்கப்படுகின்றது.

(உ) கபிலப்புள்ளி:

இக்கபிலப்புள்ளிசாதாரணமாக புகையிலைக் குடும்பமான எல்லா சொலனேசியக் குடும்பப் பயிர்களிலும் காணப்படுகிறது. வட்டமான இப்புள்ளிகளின் நடுப் பகுதி இறந்ததாக இருக்கும்.

இப்புள்ளிகளின் ஒரு மையத்தையுடைய பல வட்டங்கள் இருப்பதனை பார்க்கலாம். இப்புள்ளிகள் 10 - 30 மி. மீ. விட்டமுடையவையாக இருக்கும். முதிர்ந்த இலைகளில் இப்புள்ளிகளைச் சுற்றி மென்மஞ்சள் வடிவமாக இருக்கும். இப்புள்ளிகளின் பெருக்கத்தினால் அவை ஒன்றோடொன்று சேரும்போது முழு இலைகளும் கபில நிறமடைந்து அவற்றின் தரம் குறைவடைகின்றது.

**வைரஸ் நோய்கள்**

(அ) இலைச்சுருள்:

இந்நோயை வெண் ஈக்களே பயிருக்குப்பயிர் கடத்துகின்றன. தாக்கமுற்ற பயிர்கள் கீழ்ப் பக்கமாகவும் உட்பக்கமாகவும் சுருண்ட இலை ஓரங்களையும், இலையின் கீழ்ப்பக்கத்தில் தடித்துப் பச்சைநிறமடைந்த நரம்புகளையும், கீழப் பக்க நரம்புகளிலிருந்து வளரும் இலையை ஒத்த

(7ம் பக்கம் பார்க்க)




# பஞ்சாமிர்தம்

## சிவபுரம் சிலைகள் இந்தியா திரும்பின

19 ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டிலிருந்து அமெரிக்காவுக்குக் கடத்திச் செல்லப்பட்ட சிவபுரம் நடராஜர் சிலையும், மற்றொரு நடராஜர் சிலையும் தமிழகத்துக்குத் திரும்பக் கொண்டுவரப் பட்டன.

சிவபுரம் நடராஜர் சிலை ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் சோழர் காலத்தில் வடிக்கப்பட்டது. இதன் மதிப்பு ஏறத்தாழ இலங்கை நாணயப்படி 3 கோடி ரூபாவாகும்.

மற்றொரு நடராஜர் சிலை ஒன்றரைக்கோடி ரூபா மதிப்புள்ளது.

சில கடத்தல் காரர்கள் இச்சிலைகளைக்கடத்தி அமெரிக்காவில் விற்பனை செய்திருந்தனர்.

சிலைகளை வாங்கிய நார்டன் சைமன் என்ற நிறுவனம்மீது வழக்கு தொடரப்பட்டது.

10வருடங்கள் சிலையை வைத்திருந்துவிட்டு திருப்பி இந்திய அரசிடம் ஒப்படைப்பதாக அந்த நிறுவனம் அப்போது இந்திய அரசிடம் ஒப்பந்தம் செய்திருந்தது.

அதன்படி இந்தச் சிலைகள் தற்போது மீட்கப்பட்டு சென்னை கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

(உ- 5)

## குரங்காட்டி திருடன்

ஈரான் நாட்டுப் பொலீஸார் தீவிரமாக துப்பறிந்ததன் விளைவாக முகமது அலி காதமி என்ற குற்றவாளியைக் கையும் மெய்யுமாகப் பிடித்தனர்.

முகமது அலி என்ன குற்றம் செய்தார்?

தந்திரமாக ஒரு குரங்கைப் பழக்கிப் பிக் பொக்கட் அடிக்கவும், திருடவும், பிறரது கைப்பையை பிடுங்கவும் அதற்குப் பயிற்சி அளித்திருந்தார்!

ஈரானில் பலர் திடீரெனப் பணத்தைப் பறிகொடுத்ததற்கு இந்த குரங்கும், அதன் எஜமானுடைய சாமர்த்தியமுமே காரணம்.

முகமது அலிமீது திருட்டு, கற்பழிப்பு மிரட்டல், ஏமாற்று போன்ற பல குற்றங்கள் ஏற்கனவே பொலீஸில் பதிவாகியுள்ளன

சாட்டையடி நிச்சயம்.

## புரு விடு தூது

ஆதிகாலத்தில் புரு மூலம்தூது அனுப்பப்பட்டது. பின்னர் மயில் மூலமும், இப்போ மெயில் மூலமும் அனுப்பப்படுகிறது.

புரு மூலம் செய்தி அனுப்புவது மிகவும் பழைய காலச் சமாச்சாரம் என்று எண்ணி விடாதீர்கள்?

இந்தியாவில் ஒரிஸா மாநில பொலீஸார் தங்களுடைய தொலைபேசிகள் சமயத்திற்கழுத்தறுக்கின்றன என்பதால் புருக்கள் மூலம் செய்தி அனுப்புவதைஇன்னும்நிறுத்தவில்லையாம்.

ஒரிஸா மாநில காவல் நிலையங்களுக்கு செய்திகள் அனுப்ப வென்று ஆயிரம் புருக்கள் கொண்ட படை ஒன்று அங்கு உள்ளதாம்.

இந்தப் புருக்கள் தொடர்ந்து 15 மணி நேரம் பறக்கக் கூடியன. மணிக்கு 100 கிலோ மீற்றர்வரை பறக்கக்கூடிய இப்புருக்களுக்கு 'ஹோமர்' என்று பெயர் வைத்துள்ளனர்.

ஒரு சமயம் பிரதமர் நேரு சம்பல்பூரிலிருந்து கட்டக்கிற்கு புரு மூலம் செய்தி அனுப்பிவிட்டு உடனே கட்டக்கிற்கு புறப்பட்டிருக்கிறார். கார், விமானம் மூலம் அந்த 292 கிலோ மீற்றர் தூரத்தைக் கடக்க அவருக்கு 6 மணி நேரம் ஆகியது. ஆனால் தூது அனுப்பிய புரு, அவர் வருவதற்கு 40 நிமிடங்களுக்கு முன்னதாக வந்து சேர்ந்து விட்டதாம். (உ - 5)

## அமெரிக்க அறிவு

அமெரிக்காவில் வாழும் மக்களில் 13 சதவீத மானவர்களுக்கு ஆங்கிலமே தெரியாது.

ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்டவர்களில் 9 சதவீதமானவர்களுக்கு படிப்பறிவே கிடையாது.

ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்களில் 48 சதவீத மானவர்களுக்கு படிப்பறிவு இல்லை.

(உ)

## பண்டிதமணியின் வரலாறும் - - -

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்குப் பெரும் பேருகவும் பெருவிருந்தாகவும் அமைந்தன.

கனகரத்தின உபாத்தியாயர் என்பார் நாவலரின் மாணக்கருள் ஒருவராயிருந்ததோடு அவரின் வரலாற்றையும் அகவை அடிப்படையில் அருமையாக முதியுள்ளார்.

நல்லூர் சதாசிவம் பிள்ளை நாவலரின் மாணக்கரான பெருவர்த்தகர். நாவலரின் தருமப்பணிகளுக்கு அளவு கோலின்றி அள்ளிக் கொடுத்தவர். பஞ்சகாலத்தில் தானியங்களைக் கொள்விலைக்கே விற்கச் சொல்லி நாவலர் பணித்தமையைக் கேளாத வர்த்தகரை நாவலர் அவர்கள் மதிக்கவில்லை

இணுவில் அம்பிகைபாகர் பெரும்புலவர். அவர் நாவலரிடம் முறையாகப் படித்த முட்டறுத்த கல்விப்பலத்தினால் தமிழ் நாட்டில் நன்றாகப் பிரகாசித்தவர். தமிழ்த் தாத்தா தாமோதரம் பிள்ளை தமது தமிழ்ப் பணிகளுக்கு அம்பிகைபாகர் அவர்களையே பெருந்துணையாகக் கொண்டிருந்தார். கச்சியப்பமுனிவர் பாடிய ருளிய தணிகைப் புராணத்தைத் தமிழ் நாட்டார் இரும்புக் கடல் எனக் கருதியிருந்த காலத்தில் அம்பிகைபாகர் அதனை எல்லோரும் சுவைக்கும் வண்ணம் உரையெழுதி விளக்கினார்.

இணுவில் ஊரைச் சேர்ந்த இன்னொரு பெரியவர் நடராஜ ஐயர். ஐயரவர்கள் சைவசித்தாந்தத்துறையில் பெருமை பெற்று விளங்கிய போது, சிவஞான சித்தியாருக்கு ஆறுபேர் எழுதிய உரைகள் அகலமாகக் கற்று, அவற்றுள் நாவலரின் முன்னோரான ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகளின் உரையை வெகுவாக மெச்சி அதனை ஏட்டுருவிலிருந்து அருமையான முறையில் 1880 ஆம் ஆண்டில் அச்சிட்டு வழங்கினர்.

பொன்னுத்துரை ஐயர் என்பார் நீண்டகாலம் வாழ்ந்தவர். அவர் நாவலர் பாடசாலைக்குக் கிழக்குப் பக்கத்தில் சந்தியை அடுத்த வளவொன்றில் ஒழுக்குக் கொட்டிலில் பெட்டகத்தின் மேல் படுத்திருப்பாராம். பாடசாலையில் பெரிய இலக்கணங்கள் கற்பித்த ஆசிரியர்கள் தமக்குண்டான சந்தேகங்கள் ஐயங்களுக்கு ஐயரவர்களிடம் ஓடுவார்களாம். பொன்னுத்துரை ஐயரவர்கள் ஆழமான கல்விமான் என்பதைப் பிள்ளை அவர்களும் நன்கறிந்திருந்தார்.

நல்லூர் தியாகராச பிள்ளையைப் பிற்காலத்தவருக்கு நினைப்பூட்டிய மேலைப் புலோலி கதிரவேற்பிள்ளை அவர்களாவர். கதிரைவேற்பிள்ளை தாம் நாவலரின் கல்விப் பாரம்பரியத்தில் அன்னாரின் மாணக்கரின் மாணக்கர் எனப் பெருமைப்பட வைத்தவர் தியாகராசபிள்ளை. தியாகராசபிள்ளை அவர்களிடம் விவேக முறுக்கேறிய கதிரைவேற்பிள்ளை அவர்கள் தமிழ் நாட்டில் சைவம் வளர்த்த சான்றோராயும் தமிழ் வளர்த்த செம்மணியாயும் பணிபுரிந்த போது உருவாக்கிய சான்றோர் வரிசையில் தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாணசுந்தர முதலியார், அவரின் அண்ணன் உலகநாத முதலியார், சொக்கலிங்கம் செட்டியார் ஆகியோர் முன்னணியில் நின்றவர்கள். 'என் குருநாதன்' என்று திரு. வி. க. கும்பிட்ட பெருமைவாய்ந்த கதிரைவேற்பிள்ளை அவர்களின் குரு தியாகராச பிள்ளை அவர்களாவர்.

வடகோப்பாய் சபாபதி நாவலர் அவர்கள் நாவலரவர்களிடம் முறையாகக் கற்றுவிற் பத்திமானுகிச் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையை நடத்தியவர். அவருடைய அருமை பெருமைகளைக் கேட்டறிந்த இராமநாதபுரத்து இராசா அவரிடம் வந்து அவருக்கு வேண்டிய உதவிகள் வசதிகள் யாவும் செய்துகொடுத்து சைவத்தையும் தமிழையும் செவ்வனே வளர்க்குமாறு ஊக்கமளித்தார். அவரின் ஆற்றலை அறிந்த திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன மகாசந்நிதானம் அவர்கள் அவரை அழைத்துக் கௌரவித்து ஆதீன மகாவித்துவானுக இருக்குமாறு பணித்தருள அவரும் அங்கே பன்னிரண்டாண்டுகாலம் அலங்கரித்து நாவலர் பட்டம் பெற்றுச் சைவமும் தமிழும் வளர்த்து இனிதிருந்தார்.

சபாபதி நாவலர் அவர்கள் ஆதீனத் தொடர்பால் சிவஞான முனிவரைப் பெரிதும் மதித்து அவரைத் தமது உபாசனு மூர்த்தியாகக் கொண்டிருந்தார். சிவஞான முனிவர் தென்மொழி, வடமொழி நிலை கண்டுணர்ந்த பெரிய முனிவர். அவர் பெரிய நூல்கள் செய்ததோடு, சிவஞான சித்தியாருக்கும் உரை எழுதியவர். தமது உரையில், தமக்கு முன் உரையெழுதிய ஞானப்பிரகாசத்தம்பிரான் சுவாமிகள் சிவ சமவாதம் கூறியதாக வலிந்து பொருள் கொண்டு வீண்பழி சுமத்தி நாகரிகமில்லாத முறையிற் கண்டித்தவர்.

அவருடைய கண்டனத்தை ஆறுமுகநாவலர் அவர்கள் விரும்பவில்லை, ஆனால் சிவஞானமுனிவரை உபாசனுமூர்த்தியாகக் கொண்ட சபாபதி நாவலர் பெரிதும் மதித்து வந்தார். இதனால் நாவலர் இருவரும் ஒருவரை ஒருவர் நேரிற் சந்திப்பதைக் கூடத் தவிர்த்திருந்தனர்.

சிவஞான முனிவரின் கல்வித் தகைமையைக் [illegible]

தமிழ்நாட்டில் இன்று மும்மொழிப் பேராசிரியராய் விளங்கும் பேரறிஞர் மு. அருணசலம் அவர்கள் மதித்தவாறே, அவர் ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகளின் உரை நுட்பத்தை அநாகரிமாகக் கண்டித்த தன்மையை அருவருத்து எழுதியுள்ளார்.

சித்தன்கேணி அம்பலவாண நாவலர் அவர்கள் ஆறுமுகநாவலர் அவர்களைப் பெருங்குருவாக மதித்து நாவலர் சற்குரு மணிமாலை பாடிச் சூட்டியுள்ளார். ஆறுமுகநாவலரின் இறுதியாத்திரையின் போது, அவரின் பாதக்குறடுகளைக் கையிலேந்தியவாறு பிரதட்டை பண்ணிக் கோம்பையன் மணல் மயானத்தை அடைந்தவர். அவரே வட்டுக் கோட்டை இந்துக்கல்லூரியின் தாபகருமாவர்.

பெரியபுராணத்துக்கு முதலில் உரையெழுதிய ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலரவர்களிடம் நன்ருகப் படித்தபின், தமிழ் நாட்டுக்குப் போனவர். அவர் என்றுமே சைவராயே சமாதியெய்தியவர். அவரின் வேருய்த் தமிழ்நாட்டில் ஓர் ஆறுமுகத்தம்பிரான் மதம் மாறிக் கொண்டவர். வரலாற்றுசிரியர் சிலர் இருவரையும் தவருகக் குறிப்பிட்டுள்ளமை வருந்தத்தக்கதாகும்.

தமிழ் நாட்டவராய இராமசாமிப்பிள்ளை, நமசிவாயத்தம்பிரான், வன்றெண்டச்செட்டியார் என்னும் மூவரும் ஆறுமுகநாவலர் அவர்களை அண்டி முட்டுத் தீர்த்துக் கொண்டவர்கள்.

இவ்வாறான வரலாற்று உண்மைகளையும்நிகழ்ச்சிகளையும் மனேச்சர் அவர்கள், பிள்ளை அவர்களின் ஈரநெஞ்சில் இளமையிலேயே நிலைகொள்ளச் செய்ததும், பிற்காலத்தவர்களுக்கெல்லாம் பெரு [illegible]

## கிழக்கிலங்கை --

(5ம்பக்கத் தொடர்ச்சி)

தல் நன்மை பயக்கும்.

அரபு - இஸ்லாமிய பீடம் காலப்போக்கில் இங்கு அமைக்கப்படுவது பொருத்தமாகும். இப்பீடம் கிழக்கிலங்கையின் தொன்மையான தமிழ் - முஸ்லிம் ஒற்றுமையை வலுப்படுத்த வழிகோல வேண்டும்.

கிழக்கிலங்கைக்கு ஒரு தனித்துவமுண்டு. இராமகிருஷ்ண -விவேகானந்த- விபுலானந்த தத்துவம் இப்பிரதேசத்தில் பல் நன் முறைத் தாக்கங்களைக் கொண்டு வந்துள்ளது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இந்து சமய கலாசாரதுறை விளங்குவது போல டக்களப்பில் இராமகிருஷ்ண - விவேகானந்தா - விபுலானந்த படிப்புத்துறை அமைக்கப்படுவது முக்கியமாகும்.

இராமகிருஷ்ண மடத் தலைவர் சுவாமி ஜீவானந்தா, முன்னை நாள் சிவானந்தா வித்தியாலய அதிபர் கணபதிப் பிள்ளை, பதிவாளர் சிவராசா போன்றோர் இத்துறை எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என அறிவுரை பகரலாம்.

பாரதி, பாரதிதாசன், கல்யாணசுந்தரனுர், வ. உ. சிதம்பரனுர், மறைமலைஅடிகள் போன்றோரின் படிப்புத்துறைகள் தமிழ்நாட்டில் உதயமாகின்றன. அதே போன்று நம்நாட்டுத் தமிழ் அறிஞர்களின் தொண்டினையிட்டும் யாழ்ப்பாண, கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகங்கள் ஆய்வு நடத்துதல் பயனளிக்கும்.

ஐக்கிய இராச்சியத்தில் சசெக்ஸ் பல்கலைக்கழகம் ஒரு நவீன தொழில் நுணுக்கவியல் பல்கலைக்கழகமாக விளங்குகின்றது. இப்பல்கலைக் கழகத்தோடு கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் கல்வித்தொடர்பு வைத்திருப்பது போன்று, தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களோடும் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தோடும் ஆத்மீகத் தொடர்பு வைத்திருப்பது, இப்பல்கலைக்கழகத்திற்கு கூடிய தமிழ் மணம் அளிக்கும்.

இந்நிறுவனத்தில் ஆங்கிலமே போதனுமொழியாக இருக்குமென்பதில் கருத்து வேறுபாடுண்டு. இது தாய் மொழிப் போதனைத்தத்துவத்துக்கு முரணுகும். ஆங்கிலம் உலக அறிவியல் மொழிகளில் ஒன்று என்பது உண்மை. ஆங்கிலம் கற்கின்ற அதே வேளையில், தமிழ்மொழி இந்நிறுவனத்தில் புறக்கணிக்கப்படக்கூடாது.

தமிழ்ப் பிரதேசங்களில், திருமலைப் பிரதேசத்திலேயே சைவக் கோயில்கள் கூடிய அளவு சிறந்து விளங்கின. இத்தமிழ், சைவப்பாரம்பரியம் பல்கலைக்கழக நிறுவனங்கள் மூலம் தொடர்பு பெறுதல் வேண்டும்.

ஒரு பல்கலைக்கழகம் அறிவியல் உணர்வினையும், இலக்கியஉணர்வினையும் ஒன்றிணைக்கும் கலசமாக விளங்குவதன் மூலம் இது முழுமை பெறும். கலைத்துறைப் பட்டதாரிகள் அறிவியல் உணர்வினையும், அறிவியற் பட்டதாரிகள் கலை உணர்வினையும் பெறுதலும் முக்கியம் ஆகும். எனவே கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம், கலைத் துறைகளையும் ஆரம்பிப்பதன் மூலம் சமன் நிலை கொண்ட நிறுவனமாக விளங்க முடியும்.

இந்நிறுவனத்தின் முன்னைநாள் பணிப்பாளர் இதற்கு கரு அளித்தார்கள்; பேராசிரியர் அருட்பிரகாசம் அவர்கள் பொலிவு நிறைந்த உரு அளிப்பார்கள் என்பது திண்ணம்.

இது தேசியப் பல்கலைக் கழகமாக விளங்கினலும், கிழக்கிலங்கையின் கலங்கரை விளக்கமாக விளங்க வேண்டும்.

விபுலானந்த அடிகள் கூறுவது போல, 'யாவரும் ஏத்தும் சிந்தாதேவியாக விளங்கவேண்டும். கிழக்கிலங்கை இந்நிறுவனத்தின் மூலம் அறிவியல் சார் பண்பாட்டுக் காவியமாக உருவெடுக்க அயராது உழைப்போமாக. *

## காலத்தால்---

(5ம் பக்கத் தொடர்ச்சி)

போதியஉணவு கிடைத்து வந்தது. பிற்பாடு இந்த நிர்வாகிகளும் நிர்மாணிப்போரும் தங்கள் வேலையைச் செய்வதற்குக் கூடத் திறமையற்றவர்களாகவும் சோம்பேறிகளாகவும் ஆனுர்கள். அவர்கள் ஒரு தொழிலும் செயயாமல் தொழிலாளிகளின் உழைப்பினுல் விளைந்த உணவில் பெரும் பகுதியைத் தங்களுக்கென்று எடுத்துக் கொள்வதில் மட்டும் அக்கறை காட்டி வந்தார்கள். தாங்கள் ஒன்றும் செய்யாமல் பிறருடைய உழைப்பினுல் வாழ்வதற்கு தங்களுக்கு உரிமை உண்டு என்று அவர்கள் நினைக்க ஆரம்பித்தார்கள்.

ஆகவே மனிதர்கள் உழுதுண்டு வாழத் தலைப்பட்ட பிறகு அவர்கள் வாழ்க்கையில் எவ்வளவு பெரிய மாறுதல் நிகழ்ந்தது என்று தெரிகிறதல்லவா? உணவு தேடும் முறையை அபிவிருத்தி செய்து அது எளிதில் கிடைக்கும்படி செய்த காரணத்தால் உழவுத் தொழில் [illegible] சமூகத்[illegible]யை அடியோடு மாற்றிவிட்டது.

உணவைப் போலவே மனிதன் வேறு பல பொருள்களையும் விரும்ப ஆரம்பித்தான். ஆகவே உற்பத்தி முறைகளில் ஏற்படும் பெரிய மாறுதல்கள் சமூகத்திலும் பெரிய மாறுதல்களை உண்டு பண்ணின. இதற்கு ஒரு நல்ல உதாரணம் சொல்கிறேன். நீராவியின் சக்தி கண்டுபிடிக்கப்பட்டதும் தொழிற்சாலைக்கு அதை உபயோகிக்க ஆரம்பித்தார்கள். நீராவியின் உதவியால் ரயில் வண்டிகளும் கப்பல்களும் ஓட ஆரம்பித்தன. இதனுல் பொருள்களை உற்பத்தி செய்யும் முறையிலும் விநியோகிக்கும் முறையிலும் பெரிய மாறுதல் ஏற்பட்டது. தொழிலாளி சாதாரணக் கருவிகளைக் கொண்டு கையினுல் செய்வதைவிட வெகு விரைவாக நீராவித் தொழிற்சாலைகளில் பல பொருள்களை உற்பத்தி செய்ய முடிந்தது. இயந்திரம் உண்மையில் ஒரு பெரிய கருவியே ஆகும். ரயில் மார்க்கமாகவும், நீராவிக் கப்பல்கள் மூலமாகவும் உணவுப் பொருள்களும் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களும் தூரதேசங்களுக்கு விரைவில் போய்ச் சேர்ந்தன. இம்முறை உலகம் பூராவும் எவ்வித மாறுதலை விளைவித்திருக்க வேண்டுமென்பதை நீ எளிதில் அறியலாம்.

உலகில் உணவுப் பொருள்களையும் மற்றப் பொருள்களையும் மேலும் விரைவாக உற்பத்தி செய்யும் புதிய சாதனங்கள் அவ்வப் போது கண்டுபிடிக்கப் பட்டு வருகின்றன. சிறந்த உற்பத்தி முறைகளைக் கையாளுவதால் உற்பத்தி மிகவும் அதிகரிக்குமென்றும், அதனுல் உலகின் செல்வநிலை உயர்ந்து எல்லோருக்கும் க்ஷேமம் உண்டாகும் என்றும் நீ நினைக்கலாம். ஓரளவுக்கு நீ நினைப்பது சரி; ஓரளவுக்கு அது சரியல்ல. உற்பத்தி முறைகள் விருத்தியடைய உலகத்தில் செல்வம் பெருகி இருக்கிறதென்பதில் ஆட்சேபனை இல்லை. ஆனுல் உலகில் யாரிடம் அச்செல்வம் சென்று தங்கியிருக்கிறது?

(கடிதத்தின் மிகுதிப் பகுதி அடுத்தவாரம் வெளிவரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் வீரத்தில் விளைந்த வீரமாகாளி அம்மன் ஆலயம்

யாழ்ப்பாணத்து நல்லூரைத்தலைநகரமாகக் கொண்டு, ஆரிய சக்கரவர்த்திகள் என்னும் பெயரோடு, தமிழரசர்கள் 1250 ஆம் ஆண்டு முதல் 1621 ஆம் ஆண்டுவரை அரசு செய்த காலம் ஒரு பொற்காலம். அக்காலத்தைப்பற்றிச் சின யாத்திரிகள் வெகுவாகப் புகழ்ந்துள்ளார்கள் தமிழரசர்களுள் கனகசூரியன் 1415 ஆம் ஆண்டளவில் பட்டத்துக்கு வந்தவன் அவனுடைய மைந்தர்களே பரராசசேகரன், செகராசசேகரன் என்பவர்கள் இவர்கள் 1468 ஆம் ஆண்டளவில் நிறுவிய அம்பிகை ஆலயம் வீரமாகாளி கோயில்.

அந்த ஆலயத்தின் தீர்த்தோசற்சவம் இன்று அதனையொட்டி இக்கட்டுரை இங்குபிரசுரமாகின்றது.

இங்கிலாந்தில் ரியூடர் வம்சத்து அரசர் தங்கள் ஆட்சியை நிலை நிறுத்துவதற்கு முன் - இங்கிலாந்தில் ஆங்கில மொழி உத்தியோக மொழியாவதன் முன் - யாழ்ப்பாணத் தமிழரசு 1250 ஆம் ஆண்டளவில் நிலைகொண்டு வலிமை வாய்ந்ததாய் நிலவியது

ஆரிய சக்கரவர்த்திகள் என்னும் பெயர் புனைந்த தமிழ் மன்னர்கள்அயற் பிரதேசங்களையும் கையாண்டு ஆட்சி செய்து வந்தார்கள்.

அந்த வீரதீரச் செயல்களை இன்றைய சூழ்நிலையில் எழுதிக் கொள்வதைத் தவிர்த்து, ஓரளவு பெருமைகளை நினைவு படுத்துவதாயின் அவர்கள் தமிழ் நாட்டின் சேதுக்கரையையும் இராமேசுவரத் தீவையும் பரிபாலித்ததோடு, இலங்கையின் தென்பாகத்திலும் அதிகாரஞ் செலுத்தியவர்கள். தமிழ்நாட்டில் உள்ள பல நல்லூர்களுள் சக்கரவர்த்தி நல்லூர் என்பதும் ஒன்று.

பிற்காலப் பாண்டிய மன்னர்களிடம் படைமுகத்துப் பணிபுரிந்த ஆரிய சக்கரவர்த்தி என்னும் வீரனையே யாழ்ப்பாணத்தார் அழைத்து வந்து முடிசூட்டினார்கள் என்றும் கூறுவர்.

யாழ்ப்பாணத் தமிழரசர்களுள் குலசேகரன், குலோத்துங்கன், விக்கிரமன், வரோதயன் மார்த்தாண்டன், குணபூஷணன் முதலானோர் சிறந்த வீரர்களாயும் இருந்தனர்.

இவர்களுள் 1310 ஆம் ஆண்டில் அரசு செய்த வரோதயனின் வீரச் செயல் கல்வெட்டுக்களில் குறிக்கப் பெற்றவை. அவன் பெரிய புலவனும் புலவர்களை ஆதரித்த புரவலனும் இருந்தான். அவன் பாண்டிய மன்னர்க்குப் படைத்துணை போன பெருமையுமுடையவன்.

சீன யாத்திரிகனான இபின்பத்துடா 1344ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்தபோது உபசரித்துச் சிவனொளிபாத மலைக்கு அனுப்பியவன் யாழ்ப்பாணத்து அரசன். அவனையே பெரிய இராசா எனச் சீனப் பெரியார் எழுதியுள்ளார். பெரிய ராசாவின் முற்றத்தில் முதற்றரமான முத்துக்கள் காய்ந்தமையைச் சீனர் கண்டனர்.

தமிழரசர்களுள் கனகசூரியன் 1415 இல் பட்டத்துக்கு வந்து படைச் செலவைக் குறைத்துச் சமாதான சகசீவியம் போதித்துச் சைவத்தமிழ்

தொண்டு செய்து வந்தான்

அக்காலத்தில் கோட்டே என்னும் ஜெயவர்த்தனபுரம் ஆளும் பராக்கிரமபாகு என்பவனால் சிறப்புற்று வந்தது. அவனுடைய சகோதரர் அவனுக்கு எதிரிகளாயிருந்தமையால் அவன் மலையாளத்துப் பணிக்கன் ஒருவனைத் துணைக்கொண்டு, தன் குடும்பத்தில் திருமணஞ் செய்து வைத்தான். பணிக்கனுக்குச் சிங்கக் குட்டிகள் போன்ற வீர மைந்தர்கள் பிறந்தனர்.

மூத்தவனுக்குச் செண்பகப்பெருமாள் என்று பெயர் சிங்களவர் அவனைத் தங்கள் மொழியில் சப்புமல்குமரய என வழங்கி வந்தனர். அவன் மிகப்பெரிய வீரனாய் உருவாவதைக் கண்ட மன்னனே அவனுக்கு வெகுவாக அஞ்சி, அவனைத் தொலைக்க எண்ணி யாழ்ப்பாணத்தின் மீது படையெடுக்குமாறு பணித்தான். தமிழர் அவனைத் தொலைத்து விடுவார்கள் என்று பராக்கிரமபாகு கருதினார்.

விதி வேறு விதமாக விளையாடியது. செண்பகப் பெருமாள் பென்னம் பெரிய சரிய குதிரை மீதேறி வந்த வழியில் வன்னியரையும் வென்ற செய்திகேட்ட நல்லூர் அரசன் கனகசூரியன் ஆயத்தமில்லாமலிருந்த வனையால், இரகசியமாக மனைவி மக்களுடன் கொழும்புத்துறையில் ஓடமேறித் தமிழ் நாட்டுக்குச் சென்று திருக்கோவலூரில் தஞ்சம் புகுந்தான்.

செண்பகப்பெருமாள் வெற்றிக்களிப்பில் நல்லூரிற் புகுந்த வைபவத்தைச் சிங்களப்பெரும் புலவரும் ராசகுருவுமான குலதிலகபரிவேணுதிபதி என்னும் தோட்டகமுவ ராகுலதேரர் தாம் பாடிய கோகுலசந்தேசய என்னும் மலைநாட்டு மைனாவிடுதூதுப் பிரபந்தத்தில் விரித்துரைத்துள்ளார்.

செண்பகப்பெருமாளைத் தாரத்திலோ வைத்திருக்க விரும்பிய பராக்கிரமபாகு, அவனை முடிசூடி யாழ்ப்பாணத்தை ஆளுமாறு பணித்ததும், அவன் பணிக்கன் புவனேகபாகு என்னும் பட்டப்பெயருடன் 1450ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தை ஆட்சி புரியத் தொடங்கி அரசியற்றினன்.

அவன் முருகப்பெருமான் தனக்கு வெற்றி தந்தருளினார் என்பதை மனத்துட்கொண்டு நல்லூரில் கந்தனாலயத்தைப் புனரமைத்துக் கும்பாபிஷேகமும் செய்வித்தான்.

அக்கோயில் முத்திரைச் சந்தைக்குக் கிழக்கில் தற்போதைய கல்வித் திணைக்களத்துக்கு மேற்கில் அமைந்திருந்தது.

அது 1622 ஆம் ஆண்டளவில் போத்துக்கேயரால் சிதைவுற்றது. பஞ்சமாபாதகத்துக்கு அஞ்சாத பறங்கிப் படைகள் அத்திபாரத்தையும் கிளறி விட்டார்கள். அது நிற்க.

ஜெயவர்த்தனபுர மன்னன் பராக்கிரமபாகு 1467 ஆம் ஆண்டில் தன் மகள் வயிற்றுப் பேரனை

## கோயில் உருவான சரித்திரப் பின்னணி

ஜெயவீரபராக்கிரமபாகு என்னும் பெயரில் பட்டங் கட்டியபின் இறந்ததும், யாழ்ப்பாணத்தைப் பதினேழு ஆண்டுகள் ஆண்ட புவனேகபாகு என்னும் சண்பகப்பெருமாள், தன் நண்பன் ஒருவனை விஜயபாகு எனப் பட்டங்கட்டிவிட்டு, ஜெயவர்த்தனபுரஞ் சென்று குழந்தை அரசன் ஜெயவீரபராக்கிரமபாகுவைக் கொன்று விட்டுத் தானே ஆறும் புவனேகபாகுவென முடிசூடி அரசனானன்.

யாழ்ப்பாணச் செய்தியை அறிந்ததும் திருக்கோவலூரில் தஞ்சம் புகுந்திருந்த கனகசூரியன் மிகுந்த பக்தி முதிர்ந்த கோலத்தில் சிங்கங்கள் போன்ற தன் மைந்தர்கள் பரராசசேகரன். ஜெயராசசேகரன் ஆகியோருடன், தக்க படைத்துணை புடைசூழ நல்லூரை அடைந்ததும், பொதுமக்கள் மழைமுகில் கண்ட மயில் என மகிழ்ந்து ஆடிப்பாடி வரவேற்றனர்.

அபிமானத்துக்குரிய இளவரசர்கள் நந்திக் கொடியின் கீழ்ப் படைகளை அலங்காரமாக நடத்திவந்த காட்சியைக் கண்ட யாழ்ப்பாணத்து வீரர்கள் துள்ளிக் குதித்துப் பக்கபலமாக அணிதிரண்டர். மகிழ்ச்சிப் பெருக்கில் முகமலர்ச்சி பெற்ற மகளிர் மங்கல விளக்கு நிறை குடம் வைத்து வாசல்களில் பல்லாண்டு பாடினர்.

விஜயபாகு வீராவேசத்துடன் போர் புரிவதற்கு எழுந்து ஆர்ப்பரித்த போது, பரராசசேகரனின் வாள் வீச்சில் இரண்டு துண்டுகளாய் வீழ்ந்திறந்தான் பதினேழாண்டுக்காலம் பிரிந்திரிந்த மக்கள் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர்.

கனகசூரியன் முடிசூடியதும் திருகோணமலையிலிருந்து கருங்கற்கள் கொண்டு சென்று இராமேசுவரத் திருப்பணிகளைச் செய்தபின், திருக்கேதீஸ்வரம், திருகோணமலைத் திருப்பணிகளையும் முட்டின்றிச் செய்து நிறைவேற்றினான்.

பின்னர் தலைநகராய நல்லூரை அழகுபடுத்தி. நாற்றிசைகளிலும் எல்லைக்கோயில்கள் என்னும் பெயரில் காவற்கோட்டங்களைக் கவின்பெற அமைப்பதற்குக் கால்கோள் செய்து, கிழக்கில் வெயிலுகந்தபிள்ளையார் கோயிலையும், தெற்கில் கைலாசநாதர் கோயிலையும், மேற்கில் வீரமாகாளியம்மன் கோயிலையும், வடக்கில் சட்டநாதர் கோயிலையும் அமைப்பதற்கு ஆயத்தங்கள் செய்தான்.

அக்காலத்தில் அவன் முதியவனாயிருந்தமையால் வேலைப்பளுவதிகங் காரணமாக இறந்ததும், மைந்தர் அவ்வேலைகளைத்துரிதமாகச்செய்து நிறைவேற்றினர்.

கனகசூரியனின் மூத்த மைந்தன் சிங்கைப் பரராசசேகரன் என்னும் பெயரில் முடிசூடி அரசனானதும் நாட்டில் பெருமளவில் சைவத் தமிழ் மறுமலர்ச்சி உண்டானது. அவன் தன் பக்திப் பெருக்கால் நாற்றிசைக் கோயில்களையும் விரைவிற் கட்டியெழுப்பினான் புலவர்களை வரவேற்றுத் தமிழ் வளர்த்தான் நாடு நாடாயிற்று.

அம்பிகைக்குரிய மூர்த்தங்களுக்குள் வீரத்துக்குரிய அழகிய திருவுருவத்தைத் திருக்கோவலூரர் ஸ்தபதிகளைக் கொண்டு செய்வித்து,

> "நல்லூரும் நாற்றிசைக் கோயில்களும்" என்ற தலைப்பில் க. சி குலரத்தினம் அவர்கள் எழுதிய கையெழுத்துப் பிரதியின் ஒருபகுதியே இக்கட்டுரை.

வடக்கு வாசற்கோயிலில் எழுந்தருளுவித்தான்.

அவளுக்கு வடக்கு வாசலே உரித்தானது. அவளுக்கு வடவாயிற் கிழத்தி என்னும் திருநாமமும் உண்டு. பெருஞ்சாந்நித்தியம் பெற்ற வீரத்திருவாக விளங்குகின்ற வேளையிலும், அம்மை என்ற காரணத்தால் அவள் அன்னையாய் அருள்வடிவமுள்ள அம்பிகையாய் அண்டியவர்களுக்கு அருள் வழங்கி ஆதரித்து வளர்த்து வருகின்றாள். அவள் திருவருள் பாலிக்கும் போது பாகத் திருவுருவினளாய் உண்ணமுலையம்மையாய், அழகிய கன்னியாகவே எழுந்தருளியுள்ளாள்.

அவள் கன்னியாகக் காட்சி தருகின்ற போதிலும், அகத்தடிமை பூண்

(8 ஆம் பக்கம் பார்க்க)


## தொழில் நுட்ப வகுப்புக்கள்

உடன் ஆரம்பம்

* RADIO, T.V. வகுப்புக்கள் (பௌதீக இலத்திரன் விளக்கத்துடன் செய்முறைப் பயிற்சியின் பின் 2 Band Radioக்கு சொந்தக்காரராகலாம்.)
* வயரிங் வகுப்புக்கள்
* பிளம்பிங் வகுப்புக்கள்
* மோட்டார் மெக்கானிசம்
* Engineering & Mechanical Drawing.

CONTACT:

**North Ceylon Technical Institute**

14, ST. PETERS LANE, JAFFNA

Telephone: 24355



## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா

★ ஜேர்மன்

★ பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும் மற்றும் பாஸ்போட், விசா சொண்ட் (Bond) ரிக்கட் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ளவும்:

**INTERSUN GROUP**

சின்னத்தம்பி அவெனியு.
(மகளிர் கல்லூரிக்கருகாமையில்)
மானிப்பாய்.

குறிப்பு: பிரான்ஸ், ஜேர்மன், கனடா ஆகிய நாடுகளுக்கு முற்பணம் தந்தவர்கள் 25-06-86க்கு முன் தொடர்பு கொள்ளவும்.


## புகையிலை---

(6ம் பக்கத் தொடர்ச்சி)

சிறிய இலை உருவங்களையும் கொண்டிருக்கும். இதனால் பயிரின் வளர்ச்சி தடைப்படுவதனால் இலைகளின் வளர்ச்சியும் பருமனும் குறைவடைகின்றன.

(ஆ) சித்திரவடிவு:

இந்நோயின் தாக்கத்தினால் இலைப்பரப்பில் கடும் பச்சையும் மென் பச்சையும் அல்லது மென் மஞ்சளும் கலந்த சித்திரவடிவு தோன்றுகிறது கடும்பச்சையான பகுதியில் சிலவேளைகளில் கொப்புளங்கள் போன்று தோன்றக்கூடும். சில வேளைகளில் இலைகள் ஒழுங்கற்ற ஓரத்தை உடையனவாகவும்,வேல் போன்று ஒடுங்கியும் காணப்படும். இளம் பயிரில் இந்நோய் ஏற்படும்போது பயிர் வளர்ச்சி குன்றுகிறது

(இ) சதபத்திரவுரு:

இவ் வைரஸ் நோய் அழுக்கணவனினால் பயிருக்குப் பயிர் கடத்தப்படுகிறது, தாக்கமுற்ற பயிர்கள் வளர்ச்சி குன்றுகின்றன. புதிதாகத் தோன்றும் இலைகள் வளர்ச்சி குன்றி தண்டைச் சுற்றி நெருக்கமாகக் காணப்படுவதனால் மேலிருந்து பார்க்கும் போது சதபத்திரவுருபோல் தோற்றமளிக்கும் அத்துடன் இலைகள் சுருண்டும், வளைந்தும், கரகரப்பாகவும் காணப்படும்.

கட்டுப்பாட்டு முறைகள்:

பங்கஸ் அல்லது பக்ரீறியாக்களினால் தோன்றும் நோய்களை அவற்றைக் கட்டுப்படுத்தும் இரசாயனங்களைத் தெளிப்பதாலும், விதைகளைத் தொற்றுநீக்கம் செய்வதனாலும் கட்டுப்படுத்தலாம்

பங்கஸ் நோய்கள் வழக்கமாகத் தோன்றும் இடங்களில் செப்புப் பங்கஸ் நாசினிகளையும், காபமேற் பங்கசு நாசினிகளையும் பயன்படுத்தலாம். நாற்று மேடையில் செப்பு ஒட்சைட் நாசினியைப் பாவிக்காலாம். விதைகளைத் தொற்று நீக்குவதற்கு ஒகனோ - பாதரச, டைதியோகாபமேற் பூஞ்சண நாசினிகளைப் பாவிக்கலாம்.

காவிகளைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் பூச்சிகளால் பரவும் வைரஸ் நோய்களை ஓரளவு கட்டுப்படுத்தலாம் தோட்டத்தினைச் சுத்தமாக வைத்திருத்தல் (களை அகற்றல், தாவரக் கழிவுகளை அகற்றல்). நோய்களைத் தாங்கி அல்லது எதிர்த்து வளரும் இனங்களைப் பயிரிடல், பயிர்ச்சுழற்சி முறை கைக்கொள்ளல் என்பனவும் நோய்களைத் தவிர்க்கப் பெரிதும் உதவுகின்றன. ✱

## எமது மனத்திற்கு...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

போய் விட்டதே. இதில் உனக்கு ஏற்பட்ட இழப்பு என்ன? ஆற்றங் கரைக்கு வரும்போது சும்மாதானே வந்தாய்? வீடுபோகும்போது வந்த மாதிரித்தானே போகப் போகிறாய். இதில் எதை இழந்து விட்டாய்? - என்றார்.

இந்த உலகிற்கு வரும் போது சென்ற பிறப்பில் செய்த பாவபுண்ணியங்களோடுதான் வந்தோம். உலகப் பொருள்கள் எவற்றையும் கொண்டு வரவில்லை; இங்கு தேடிய பொருள் இங்கேயே தவறிவிட்டால் அதற்காக ஏன் தான் ஒப்பாரி வைக்க வேண்டும்? இவற்றுக்கெல்லாம் காரணம் ஆசையேதான்.

பெருகிவரும் ஆற்று நீரை அப்படியே வயலுக்குள் பாயவிட்டால் நெற் பயிரும் இருக்க முடியாது. வயலும் இருக்க முடியாது. ஆனால் ஆற்று நீரை சிறிய வாய்க்கால்கள் மூலம் மடைமாற்றுச் செய்துவிட்டால் நெற் பயிரும் செழித்து வளரும்; வயலும் வளம் பெறும், இதே போன்று மனிதனும் தனது ஆசைகளை இறைவன்பால் திருப்பிவிட்டால், வாய்க்கால் மூலம் திருப்பிவிடப்பட்ட நீர் போன்று ஆகிவிடும்,

(அடுத்த வாரம் தொடரும்)

## விடுதலைப் போரில்---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வாயப்பதிகம் - இவற்றை பக்தியுடனும் விசுவாசத்துடனும் பாடுவோம். நமசிவாய வாழ்க என ஓதுவோம். கந்தசஷ்டி கவசத்தை ஏந்துவோம்.

நாம் செய்த பாவங்கள் நீங்கவே எமக்கு இந்த சோதனை. ஆகவே பாவங்கள் நீங்கி நாம் விரைவில் சாந்தி அடைய இறைவனை சரண் அடைவோம்.

எமது பாவங்கள் நீங்க இறைவன் நாமத்தைப் பாடுங்கள் என்றார் ராமகிருஷ்ணர். இறைவ நாம ஜெபமே எமக்குண்டான தீமையை அழிக்க வல்லது என்கிறார் சத்ய சாயிபாபா.

ஆகவே விடுதலைத் தாகம் கொண்டவர்களே! அமைதியை பெற விரும்புகிறீர்களே- நீங்களும் ஒரு பங்காளியாக மாறுங்கள். எம் இனத்தின் பாவங்களை நீங்க பிரார்த்தியுங்கள். இறைவனையே சரண் அடையுங்கள். ஏதோ உங்களுக்குப் பிடித்த ஒரு நாமத்தை அடிக்கடி ஜெபியுங்கள்.

ஒவ்வொரு கிராமத்திலும் நாலாபங்கங்களிலும் கோவில்கள், வீடுகள். சனசமூகநிலையங்களில் கூட்டுப்பிரார்த்தனை செய்ய முன் வாருங்கள்,இந்த வேண்டுகோளை சரியாக நீங்கள் உணர்ந்தால் உடனடியாக உங்களால் இயன்ற அளவு பிரார்த்தனைகளை ஆரம்பியுங்கள்.

பிரார்த்தனை சக்தி வாய்ந்தது. சுலபமானது.

ஆகவே விடுதலை பெற இறைவனை சரணடைவாம். ஒவ்வொரு இல்லத்திலும் தினசரி ஒன்று சேர்ந்து பிரார்த்தனை நடத்துவோம்.ஒவ்வொரு ஆலயங்களிலும் இந்த நோக்குடன்பிரார்த்தனை செய்வோம். பாடசாலைகளிலும் பிரார்த்தனை செய்ய முன்வாருங்கள்.

சுயநலத்தை களைவோம்.

ஒன்றுபடுவோம்.

தர்மத்தைக் காப்போம்.

இறைவனைச் சரணடைவோம்


சாந்தி பெறுவோம்.

(நன்றி: இறைவனடியார்கள் அருள் ஒளி மன்றம் நல்லூர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம்

### போட்டி இல. 21



அனுப்புவோர் பெயர்: ....................

விலாசம்: ....................

....................

கையெழுத்து: ....................

**இடமிருந்து வலம்**

1 எல்லாவற்றையும் ஒன்றாக மதிக்கும் பண்பு
6. மறைய
7 இப்போதெல்லாம் விலை கொடுத்துத் தான் இவனை வாங்குகிறார்கள். ஆனால் கடை யெழுத்து இல்லாமல் இருக்கிறான்
8 ஆகாயம்
9 ஒரு திசை
10 செய்
11. இடமிருந்து வலம் 7இல் வருபவனுக்கு கொடுப்பது
12 வீடு
14 பொட்டலம்
16 கணபதி
19. மண் திரண்டு பல வருடம் உருண்டு இது உருவாகிறது.
20. மாதத்தில் இது நான்கு
21 குளிகை
22. படிப்பதற்கு உதவும்
23. மகள்

**மேலிருந்து கீழ்**

1. தாழ்ந்து போகும் படி ஒருவனைத் தூற்று
2. படைவீரர்
3. துப்பாக்கி
4. சிறு தானியம்
5. தீமைக்கு எதிரானது
8. மணம்
11. இலட்சுமி
12. பத்தி
13. சோகத்தின் 'ம்' மைக் காணோமே!
14. தங்கம்
15. நல்லூரின் சுருக்கம்
17. மரக்கலம்
18. தடி
19 அறிவு
21. தொன்மையான யுத்த ஆயுதம்

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் 'சொற்சிலம்பம்' குறுக்கெழுத்துப் போட்டியில் கலந்து கொள்ளலாம்
2. ஒருவர் எத்தனை கூப்பன்களும் நிரப்பி அனுப்பலாம்.
3. 'சஞ்சீவி'யில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேருக்கு முறையே 50, 25, 15 ரூபா பரிசில்கள் வழங்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் 'சொற்சிலம்பம்' போட்டி இல. 21. சஞ்சீவி, தபால் பெட்டி இல. 23, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அடுத்துவரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.
7. உதயன் பப்ளிகேசன்ஸ் லிமிட்டெட், தஷப்று - உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், ஷப்று யுனிகோ பினான்ஸ் லிமிட்டெட் ஆகியவற்றில் பணிபுரியும் ஊழியர்களும் அவர்களது உறவினர்களும் இந்தப் போட்டியில் பங்குபற்ற முடியாது.

✱ சொற்சிலம்பம் போட்டிகளில் பங்குபற்றும் வாசகர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது சில சமயங்களில் மூன்றுக்கும் அதிகமான வாசகர்களும் சரியான விடையை அனுப்புகிறார்கள். அப்படியான சந்தர்ப்பங்களில் சரியான விடை எழுதுவோரிலிருந்து அதிஷ்ட சீட்டு மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை வாசகர்களின் கவனத்துக்கு அறியத்தருகிறோம்.

### வெற்றி பெற்றவர்கள் விவரம்
### சொற்சிலம்பம் இல 19

முதலாம் பரிசு:- ச. வித்தியாரூபிணி
பிள்ளையார் கோவிலடி,
சித்தங்கேணி.

இரண்டாம் பரிசு:- ஆர் பவானந்தன்
மேப்பா பி இராஜேஸ்வரச்,
நன்னீர் கிணற்றடி,
திருநெல்வேலி.

மூன்றாம் பரிசு:- எம். எஸ். சுந்தரலிங்கம்
126, 3 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

சொற்சிலம்பம்

இல. 19

விடைகள்

**இடமிருந்து வலம்:**

1. வலிகாமம் விரிகுடா 6. டகா 7 கருத்து 9. நம் 10. திரிகல் 13. பகை 14. கலை 15. அணி 16. செல்வன் 18. கப்பம் 19. தனிமை 21. திபு 22. புயம்.

**மேலிருந்து கீழ்**

1. வரகவி 2.கார்த்திகை 3. விலை 4: குடம் 5 டாக 8. துரி 9. நல் 12. விலை 13. பணிப்பு 14. கன்னி 15. அகதி 16. செம்பு 17. வதம் 20 மாமதா.

'காலம் பெறுமதியானது'
துரித சலவைக்கு நுரைவளம் கூடிய
'மில்க்வைற் சலவைப் பவுடரை'
வாங்கி உபயோகியுங்கள். 56 கிராம் சிறிய
பைக்கற் ரூபா. 2.00 மட்டுமே!
20 மேலுறைகளை அனுப்பி
அழகிய கைலேஞ்சி ஒன்றைப்
பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.
'மில்க்வைற் — யாழ்ப்பாணம்:'

# சஞ்சீவி

21 - 06 . 1986 சனிக்கிழமை

பிரகாசமான
சலவைக்கு
நுரைவளம் கூடிய
'சுப்ப
மில்க்வைற்
சோப்'
புதிய விலை ரூ 4-50
பட்டுமே!
''மில்க்வைற் — யாழ்ப்பாணம்''

# காமன்வெல்த்தையே ஆட்டம் காணச் செய்யும் தென் ஆபிரிக்க பிரச்சினை

**உலக உலா** — என்.பி.சீலன்

சொவேட்ரோ கிளர்ச்சியின் 10 ஆவது நினைவு தினம் இவ்வாரம் தென் ஆபிரிக்காவில் அனுஷ்டிக்கப்பட்டது.

இதற்கு மூன்று தினங்களுக்கு முன்னர் தென் ஆபிரிக்க வெள்ளையர் அரசாங்கம் நாடு முழுவதும் அவசரகால நிலையைப் பிரகடனம் செய்தது.

ஆர்ப்பாட்டங்கள், பொதுக் கூட்டங்களுக்கு தடை விதிக்கப்பட்டது.

கடுமையான பத்திரிகைத் தணிக்கை அமுல் செய்யப்பட்டது.

நூற்றுக்கணக்கான கறுப்பர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

அரசுடனான பலத்தைப் பரிட்சிப்பதற்கு சொவேட்ரோ கிளர்ச்சி நினைவு தினத்தைக்கெரில்லாக்கள் பயன்படுத்த முனையலாம் என்று பி. டபிள்யூ. போத்தாவின் தென் ஆபிரிக்க அரசு கருதியதே அவசரகாலநிலை பிரகடனத்தின் நோக்கம் ஆகும்.

**ஆபிரிக்கதேசிய காங்கிரஸ்**

தென் ஆபிரிக்க இனவாத அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் முக்கிய கெரில்லாப்பிரிவு ''ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்'' ஆகும்.

இதன் தலைமையகம் ஸாம்பியாவின் தலை நகரான லுசாக்காவில் இருக்கிறது. தென் ஆபிரிக்க இனவாத அரசை எதிர்க்கும் 6 ஆபிரிக்க முன்னணி நாடுகளில் ஸாம்பியாவும் ஒன்று.

இனவாத அரசை எதிர்க்கும் மற்றைய கெரில்லாப் பிரிவு ''ஐக்கிய ஜனநாயக முன்னணி''

இந்த கெரில்லா இயக்கங்களின் ஆயுதப்பலத்துடன் ஒப்பிடுகையில் தென் ஆபிரிக்க அரசின் ஆயுதபலம் பூதாகாரமானது.

முழு கறுப்பு ஆபிரிக்க நாடுகளையும் அழித்து விடும் பலத்தை அது கொண்டிருக்கிறது.

அதனால்தான் கெரில்லாக்களின் ஆயுதப் போராட்டத்தை விட சர்வதேச நிர்ப்பந்தம் அதிக பலனைக் கொடுக்கும் என்பது அரசியல் அவதானிகளின் ஏகோபித்த கருத்து.

**அமெரிக்கா, பிரிட்டன்**

இதற்கு இன்று முட்டுக்கட்டை போடும் முக்கிய நாடுகள் அமெரிக்காவும் பிரிட்டனும் தான்.

தென் ஆபிரிக்கா மீது சில பொருளாதாரத் தடைகளை விதிக்கும் தீர்மானம் இவ்வாரம் ஐ. நா. பாதுகாப்புச் சபையில் கொண்டு வரப்பட்டது.

அமெரிக்காவும் பிரிட்டனும் ''வீட்டோ'' செய்து தீர்மானத்தை செயல் இழக்கச் செய்து விட்டன.

சிறுபான்மை வெள்ளையர் ஆட்சி நடைபெற்ற ரொடீஷியாவைப் பணிய வைத்து போன்று தென் ஆபிரிக்காவையும் பணிய வைக்கமுடியாமற்போனதுக்கு தென் ஆபிரிக்கா மீதான சர்வதேச நிர்ப்பந்தம் வலுவானதாக இல்லாததே காரணம்.

தற்போது நடைபெற்று வரும் வல்லரசுகளின் ஆதிக்கப்போட்டியில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் உள்ள நட்பு நாடு ஒன்றை இழப்பதற்கு அமெரிக்காவும் பிரிட்டனும் தயாரில்லை.

தென் ஆபிரிக்க விடயத்தில் இந்த இரு நாடுகளின் அணுகு முறைகளும் இதனை எடுத்துக் காட்டுகின்றன.

அமெரிக்க அதிபர் றெனல்ட் றேகனின் எதிர்ப்பிற்கு மத்தியில் அமெரிக்க ஜனப்பிரதிநிதிகள் சபையான காங்கிரஸ் தென் ஆபிரிக்கா மீது சில பொருளாதாரத் தடைகளை விதிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறது.

இத்தீர்மானத்தை இனி செனட் அங்கீகரிக்க வேண்டும். இறுதியாக அதிபர் றேகன் அதில் கையெழுத்திட வேண்டும். அதன் பின்பே தீர்மானம் அமுலுக்கு வரும். தீர்மானத்தை செனட் அங்கீகரித்தாலும் றேகன் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இதனை அவரின் நடவடிக்கைகள் தெளிவாக்குகின்றன.

**சொவேட்ரோ கிளர்ச்சி**

தென்ஆபிரிக்க வெள்ளையரின் மொழி ஆப்ரிக்கான்ஸ் ஆகும்.

டச்சு மொழியை இது அடித்தளமாகக் கொண்டது.

தென் ஆபிரிக்காவின் சனத்தொகையில் சிறுபான்மையினரான இந்த வெள்ளையர்கள் அங்குள்ள பெரும்பான்மையினரான கறுப்பரை ஆயுதப் பலத்தால் ஆட்சி செய்து வருகிறார்கள்.

உலகிலேயே வேறு எந்த ஒரு நாட்டிலும் இல்லாதவாறு, அங்கு வெள்ளையருக்கு ஒரு சட்டமும் கறுப்பருக்கு இன்னொரு சட்டமும் இருந்து வருகிறது.

1976 ஆம் ஆண்டு ஆப்ரிக்கான்ஸ் மொழியைக் கறுப்பு இன மக்களிடையே திணிக்கும் முயற்சியை தென் ஆபிரிக்கா மேற்கொண்டது.

கறுப்பு இன மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகளில் ஆப்ரிக்கான்ஸ் மொழி மூலம் சில பாடங்களை கற்பிக்க தென் ஆபிரிக்க இனவாத அரசு முயன்றது.

இதன் எதிரொலிதான் சொவேட்ரோ கிளர்ச்சி.

கறுப்பு இன மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இக் கிளர்ச்சி பெரும் போராட்டமாக மாறிய போது அரசாங்கத் துருப்புக்கள் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் 700 கறுப்பர் வரை கொல்லப்பட்டனர்.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் முடுக்கிவிடப்பட்ட இந்தக் கிளர்ச்சியில் இதுவரை 1500க்கும் அதிகமான கறுப்பர்கள் உயிரிழந்துள்ளனர்.

அண்மையில் அண்டை நாடுகளான ஸாம்பியா, பொட்ஸ்வானா, சிம்பாப்வே ஆகியவை மீது தென் ஆபிரிக்கா விமானத் தாக்குதல் நடத்தியது.

அதனால் இப்பிரச்சினையை சமாதானமாகத் தீர்க்கும் வாய்ப்புகள் தற்போது அற்றுப்போய் விட்டன.

தனது நாட்டுக்கு எதிரான கெரில்லாக் குழுக்கள் மேற்கண்ட மூன்று நாடுகளிலும் தளம் அமைத்திருந்ததாலேயே தான் தாக்குதல் நடத்த வேண்டி இருந்ததாகத் தென் ஆபிரிக்க அரசு கூறுகிறது.

மத்திய கிழக்கில் இஸ்ரவேல் போன்று ஆபிரிக்கக் கண்டத்தில் தென் ஆபிரிக்கா பயங்கர ரூபம் எடுத்து வருவதை இந்தச் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

49 நாடுகள் அங்கம் வகிக்கும் காமன் வெல்த் அமைப்பையே ஆட்டம் கொள்ளச் செய்யும் அளவுக்கு இந்தப் பிரச்சினை இன்று விஸ்வரூபம் எடுத்துள்ளது.

தென் ஆபிரிக்காவுக்கு எதிரான சர்வதேச பொருளாதாரத் தடைக்கு பிரிட்டன் சம்மதிக்காவிட்டால் காமன் வெல்த் அமைப்பில் இருந்து விலகிவிடப் போவதாக அதில் அங்கம் வகிக்கும் கறுப்பு இன நாடுகள் எச்சரித்துள்ளன.

இதனால் ஆகஸ்ட் மாதம் காமன் வெல்த் மாநாடு நடைபெறும் போது பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரட் தட்சர் பெரும் நெருக்கடி ஒன்றை எதிர்நோக்க வேண்டி வரும்.

அணிசேரா நாடுகளின் தலைமைப் பதவியும் முன்னாள் ரொடீஷியாவான சிம்பாப்பேயிடம் செல்வதால் தென் ஆபிரிக்க இனவாத அரசுக்கு எதிர்காலம் பெரும் சோதனை மிக்கதாகவே இருக்கப் போகிறது.

## கிறிஸ்தவ துறவி - --

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வென்செஸ்லோஸ்

இந்தியாவில் கோட்டாறு மாவட்டத்தில் கொட்டுவிலார் ஊரைச் சேர்ந்தவர் இத்துறவி.

துறவி நின்ற இடத்துக்குக்கிட்டே சென்ற சிப்பாய்கள் 'சிலிண்டர் தாக்குதலை யார் மேற்கொண்டது' என்றுகேட்டனராம்.

'நான் துறவி. எனக்கு எதுவுமே தெரியாது' — என்று துறவி பதில் அளித்தாராம்.

பின்னர் துறவியார் இருகரங்களையும் சேர்த்துக் கும்பிட்டபடி, கழுத்தில் தொங்கிய சிலுவையைத் தூக்கிச் சிப்பாய்களுக்குக் காட்டினார்.

ஆனால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. குவிபிட்ட கரங்களினூடாகச்சென்ற துப்பாக்கிச் சன்னங்கள், துறவியின் மார்பைத் துளைத்துச் சென்றன.

இரு கரங்களினாலும் நெஞ்சைப் பிடித்தவண்ணம்அந்த இடத்திலேயே இரத்த வெள்ளத்தில் சுருண்டு வீழ்ந்து உயிரிழந்தார்

அந்த நேரத்தில் துறவிகளுக்கான அங்கியையே அவர் அணிந்து இருந்தார்

**அட்டகாசம்**

இதன்பின்னர் சிப்பாய்கள் தோலகட்டி ஆச்சிரமக் கோயிலைச்சோதனை இட்டனர்.

பின்னர் கோயிலில் உள்ள குருவானவரின் அறை உடைத்துத் திறக்கப்பட்டது.

அருள் திரு மேரி யோசப் செலஸ்ரின் அடிகளாரும், தேவாலய ஊழியர்கள் இரண்டு பேரும் உள்ளே இருந்தனர் இம் மூன்றுபேரையும் இராணுவத்தினர் முழங்காலில் நிற்க வைத்து விசாரித்தனர்.

எதுவுமே தெரியாது என்று செலஸ்தின் அடிகளார் கூறியதைத் தொடர்ந்து சிப்பாய்கள் வெளியேறினர்

இச்சம்பவத்தைத் தொடர்ந்து, வயாவிளான்பகுதி நேற்று சோகமயமாகக் காட்சியளித்தது,

அயல் புறங்களிலிருந்து பெரும் திரளான மக்கள் ஆச்சிரமத்தை நோக்கி வந்தவண்ணம் இருந்தனர். ஆச்சிரமத்தில் வைக்கப்பட்டுள்ள துறவியின் பூதவுடலுக்கு சாரிசாரியாக மக்கள் நேற்று அஞ்சலி செலுத்திக் கொண்டு இருந்தனர்.

(உ-எ-5)

### சிலுவையை...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

கள் அவரிடம் கேள்விகள் கேட்டனர்.

''யார் சிலிண்டர் வைத்தது? '' — சிப்பாய்கள் இப்படி துறவியைக் கேட்டனர்.

''எனக்கு ஒன்றுமே தெரியாது. நான் ஒரு இந்தியத் துறவி''—இப்படி இறந்த துறவி பதிலளித்தார்

தன்னை அடையாளம் காட்டுமுகமாக தனது கழுத்தில் இருந்த சிலுவையை வெளியே இரு கரங்களாலும் எடுத்து சிப்பாய்களிடம் காட்டினார் துறவி.

அப்போது ஒரு சிப்பாய் துப்பாக்கிப் பிரயோகம் செய்தான். துறவியார் தூணில் சாய்ந்தபடி கீழே விழுந்தார்.

துறவியை அப்படியே விட்டுவிட்டு கோயிலின் உட்பகுதிக்கு சிப்பாய்கள் சென்றனர்

நான் பயத்தினால் மரத்தின் பின்னே பதுங்கிக் கொண்டேன். சிப்பாய்கள் ஆச்சிரமத்தை விட்டு வெளியேறியதும் மடத்துச் சுவாமியும் வேலையாட்களும் அந்த இடத்துக்கு வந்தனர்.

அப்போது நான் மறைவில் இருந்து வெளியே வந்து நடந்ததை அவர்களுக்குத் தெரிவித்தேன்.

இப்படி அந்தச் சிறுவன் சொன்னான்.

( -ஈ-5)

### முருக நாமம்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தனர்.

முகாம் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்ட வயோதிபருக்கு உணவும் குளிர்பானமும் வழங்கப்பட்டது. அவரிடம் கட்டிவைத்தமைக்கு மன்னிப்பும் கோரினார் முகாம் பொறுப்பதிகாரி

(உ-119)

### கருத்துக்...

(1ம்பக்கத்தொடர்ச்சி)

மான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதன் மூலமும் அவர்கள் மக்களுக்கு உதவலாம்.

எமது மண், சூழல் என்பனவற்றுக்கு ஏற்ற புதிய விவசாய முறைகளைக் கண்டறிந்து அவற்றை அறிமுகப்படுத்தலாம்.

''எமது பிரதேசங்களில் விவசாய உற்பத்தியும் சுயதேவைப் பூர்த்தியும்'' என்ற தலைப்பில் இன்று தொடங்கும் கருத்தரங்கு அந்த வழியில் அடி எடுத்து வைக்கிறது. அது மகிழ்ச்சி தருகிறது அதனை வரவேற்கிறோம். அது தொடரவேண்டும், யாழ் விவசாயிகளுக்கு உதவவேண்டும் என்று விழைகிறோம்.

# சர்வகட்சி மாநாடு - 2: உள்நோக்க என்னவோ?

மாவட்டம் மாகாணம் ஆகிவிட்டது! மாகாணம் மாநிலம் ஆவது எப்போது?

இரண்டாவது சர்வகட்சி மாநாட்டுக்குக் கட்டியம் கூறப்பட்டுவிட்டது.

இந்த வேளையில் மேற்கண்ட கேள்விதான் எல்லார் வாயிலும் அடிபடுகின்றது

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு அழைப்புக்கள் அனுப்பியாகி விட்டன

முதற் தடவையாக இலங்கை மக்கள் கட்சியும், நவலங்கா சமசமாஜக் கட்சியும் அழைக்கப்பட்டுள்ளன.

சமர்ப்பிக்கப்படப் போகும் 'யோசனைகளை' அமைச்சரவையும் ஏற்

**உள்ளும் புறமும்** — குறுமுனி

றுக்கொண்டு விட்டது

'ஐயா'வின் அழைப்பை ஏற்கும் நிலையில் 'அம்மா'வின் கட்சி இல்லை

மகாசங்கத்தைக் கேட்காமல் மீண்டும் சர்வகட்சி மாநாடா? இப்படி மகாநாயக்க தேரர்கள் மகாகோபம் கொண்டு கேட்டிருக்கிறார்கள்

இவற்றின் மத்தியில் ஜூன் 25இல் சர்வகட்சி மாநாடு ஜாம், ஜாம் என்று நடக்கப் போவதாக பாரிஸில் கூடிய 'கடன் கொடுநர்'களுக்கும் கூறியாகி விட்டது.

**அதுவும் இதுவும்**

இப்படித்தான் பெரிய அளவில் முதலாவது சர்வகட்சி மாநாடும் 1984இல் ஆரம்பமானது

அச்சமயம் 1983 ஜூலை சம்பவங்களினால் உலக அரங்கில் தலை குனிந்து நின்றது இலங்கை.

1983நவம்பரில் அன்னை இந்திராவைச் சந்தித்தார் திரு. ஜெயவர்த்தன.

மாகாண சபைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இணைப்பு சி உருவானது.

அந்த அடிப்படையில் பேச்சுக்களைத் தொடங்கும்படி இந்தியா இலங்கையைக் கேட்டுக்கொண்டது.

அந்த உடன்பாட்டில் தான் ஆரம்பமானது முதலாவது சர்வகட்சி மாநாடு

திரு ஜெயவர்த்தன இணைப்பு - சி உடன் நாடு திரும்பினார். அதன் பின்னர் தரன் 'இணைப்பு - சி'க்குள்ள உள்ளூர் எதிர்ப்பை அவர் கண்டார். தான் மாட்டிக்கொண்ட விடயத்தை திரு ஜெயவர்த்தன அப்பொழுதே உணர்ந்தார்.

சர்வகட்சி மாநாட்டை செல்லாக் காசாக்க மறைமுகத் திட்டம் போடப்பட்டது

மகாநாயக்க தேரர் முதல், காகிதத் தலைப்புச் சங்கங்களின் பிரதிநிதிகள் எல்லாரும் சர்வகட்சி மாநாட்டுக்கு அழைக்கப்பட்டனர். பிரச்சினைகளுக்கு தீர்வு காணக் கூட்டப்பட்ட மாநாடு, பிரச்சினையைக் கூட்டும் மாநாடாக மாற்றப்பட்டது. தமிழருக்கு அப்படி என்ன பிரச்சினைகள் உண்டு என்றும் மாநாட்டில் கேட்கப்பட்டது

தர்மிஷ்டத் தலைவரும் மாநாடு தம்மிஷ்டப்படி நடக்கட்டும்என்று விட்டு விட்டார்.

மாநாடு ஒரு நாள் கூடும். கலந்து கொள்ள கூட்டணித் தலைவர்கள் விமானம் மூலம் பறந்து வருவார்கள். ஆரம்பமான 5 நிமிடங்களில் மாநாடு ஒத்திவைக்கப்படும் அடுத்த திகதி ஒரு மாதம் கழித்து நிர்ணயிக்கப்படும்.

இப்படியாக 1984 ஜனவரியில் இருந்து இழுபட்டு வந்த சர்வகட்சி மாநாடு 12ஆவது மாதத்தில் 'எல்லாம் கெட்டான் மாநாடு' என்ற கணக்கில் முடிந்தது.

அப்பாடா என்று இருதரப்பினரும் மூச்சு விட்டனர்.

அதன் பின்னர் இடம் பெற்ற பண்டாரி அணுகுமுறை, போர் நிறுத்தம், திம்புப் பேச்சு எல்லாம் இரு சாராரும் அடிக்கடி 'மூச்சு' விடுவதற்கு வழி வகுத்தன.

பொறுத்தது போதும் என்று இந்தியா இறுக்கிப் பிடிக்க—

இனியும் கடன் தர மாட்டேன் என்று 'கடன் தரும் நாடுகள்' நெருக்கிப்பிடிக்க —

இரண்டாவது சர்வகட்சி மாநாட்டைக் கூட்டியிருக்கின்றார் ஜனாதிபதி

யாரை யார் ஏமாற்றுவது? இதற்கும் ஒரு கணக்கு வேண்டாமா?

''இந்தியா கேட்ட மேலதிக விளக்கங்கள் கொடுத்தாகி விட்டன. இரகசிய விளக்கங்கள் கூடக் கொடுத்துள்ளோம்,

இதற்கு மேலே எந்த அரசாங்கத்தினாலும் கொடுக்கக் கூடியது ஒன்றுமே இல்லை''— அமைச்சர் அத்துலத்முதலி இப்படிக் கூறி விட்டார்.

இந்த நிலையில் இரண்டாவது சர்வகட்சி மாநாட்டைக் கூட்டும் நோக்கம் தான் என்ன?

மேலதிக விளக்கங்களும் போதா என்று இந்தியா கூறிவிட்டால் அதற்குப் பதிலளிக்கும் பொறுப்பை சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்றும் அரசியல் கட்சிகள் மீது போகும் தந்திரமோ?

அல்லது—

இனியும் பார்த்துக் கொண்டிராமல் இனப்பிரச்சினைக்கான தீர்வு இதோ என்று இந்தியா தனது சொந்தயோசனைகளை சமர்ப்பித்து விட்டால் நம்பாடு திண்டாட்டமாகி விடுமே, அதைத் தட்டிக் கழிக்க சர்வகட்சி மாநாடுதான் சரியான வழி என்ற யோசனையோ!

இந்த நோக்கங்களுக்காகத்தான் இலங்கை அரசு ''சர்வகட்சி மாநாடு - 2ஐ'' கூட்டுகிறது என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

இரண்டாவது மாநாடு, மாகாணத்தை மாநிலமாக்க உதவுமா?

அல்லது—

இந்தியாவிடம் மேலும் மாட்டிக் கொள்வதில் இருந்து நழுவுவதற்குத் தான் இலங்கை அரசுக்கு உதவுமா?

பொறுத்திருந்து பார்ப்போமே!

## வீரமாகாளி அம்மன்...

(7 ம் பக்கத் தொடர்ச்சி)

டவர்கள் அவளைக் கிழவி என்றும், தாய் என்றும், ஆச்சி என்றும் அன்பு ததும்ப வழிபடுகிறார்கள். அவள் கிழவியாய், புரத்தியாய், பழையவளாய்க் கருணைக்கடலாய் வாழ்வளிக்கிறாள்.

கர்ப்பக்கிருகத்துக் கருவறையம்பிகையின் திருவுருவம் சிறிதாயினும் அவள் மூர்த்திகரமும் கீர்த்தியும் மிகப் பெரியவை. இடது திருவடியை ஊன்றி, வலது திருவடியை மடித்து ஒரு வகைச் சுகாசனத்தில் அவள் எழுந்தருளியிருப்பதால், அவள் எங்களை விட்டு என்றுமே நீங்குவதில்லை. அவள் பத்துத் திருக்கரத்தாள். அவள் திருமுகத்தில் தவழும் புன்முறுவல் அவள் போக வடிவினளோ எனக்கருத மலர்ந்துள்ளது. அவளின் திருமுடியில் ஒளிவீசும் தீச்சுடர் பழைய பாண்டியர்கள் காலத்துச்சிறப்பான அம்சமாகும்.

தமிழரசர் காலத்தில் அம்பிகைக்கே தனிக் கோயிலாக அமைந்திருந்த இடத்தில், அண்மையில் விநாயகப் பெருமானும் முருகப்பெருமானும் பரிவார தெய்வங்களாய் எழுந்தருளியுள்ளார்கள். தமிழரசர்களுள் கடைசியாக ஆண்ட சங்கிலியன் காலத்தில் தென்னிலங்கை வேந்தன் தொன் யுவான் தர்மபாலன் என்பானின் தந்தை வித்தியபண்டாரம் என்பவன், பறங்கியரை நாட்டை விட்டுத் துரத்துவதற்குத் தமிழரின் உதவி நாடி இங்கே வந்து, வீரமாகாளி அம்மனுக்கு முன் வணங்கி நின்று சத்திய வீசுவாசஞ் செய்தான். அந்த நேரத்தில் மர்மமாக நிகழ்ந்த ஒரு சதி சரித்திர ஆய்வுக்காரருக்கும் அப்பாற்பட்டதாய் அவனை வீழ்த்தி விட்டது.

வரலாற்றுப் புகழ் பெற்ற வீரமாகாளியம்மன் வீதியில் நின்று பறங்கிப் படைகள் பேய்க்கூத்தாடித் தமிழரைக் கலக்கிய போதிலும், கோயிலை ஒன்றும் செய்யவில்லை. பறங்கியர் தாக்காத கோயில்களுள் இத் திருக்கோயிலும் ஒன்று.

தமிழரசர் நவராத்திரி விழாவின் போது தங்கள் படைக்கலங்களை இங்கே படைத்து வீரத்தனமேற்றிய சிறப்பும் இக்கோயிலுக்குரியது.

### முல்லைத்தீவு...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

படையின் தாக்குதலால் தமது தாக்குதல்களை தொடர முடியாமல் சிப்பாய்கள் பின் வாங்கி விட்டனர்.

மக்கள் விடுதலைப் படையினர் தரப்பில் எதுவித இழப்புமில்லை.

-இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

(உ-10)

**வாடிக்கையாளர் கவனத்திற்கு**

கீழ்க்காணும் எமது ஸ்தாபனங்களில் 18-06-86இல் இருந்து வழமைபோல் வியாபாரம் நடைபெறுகின்றன என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

பொ. சோமசுந்தரம் கம்பனி
அசோஸியேட்டட் மோட்டேர்ஸ் அன் எலக்றிக்கல்ஸ்
நஷனல் மோட்டேர்ஸ்.




இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை ... (பிரைவேட்) லிமிடெட் ... அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 21—6—1986
Printed and Published by Uthayan Publications (Private) Ltd 18, Second lane, ... JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org